ISSN 2235-9829

# அர்த்தம் - 2

2012 - காலாண்டு இதழ்

விலை: 100.00

1. அதிகாரப் பங்கீட்டில் சர்வதேச அனுபவங்கள் 2
- சி. அ. யோதிலிங்கம்

2. ஏழாம் அறிவு புகட்டும் பண்பாட்டு மயக்கம் 11
- யமுனா ராஜேந்திரன்

3. இலங்கையின் தேசிய இயக்கம் 17
- மெடோனா அருள்ஞானசீலன்

4. கிழக்கு திமோர் : ஓர் அறிமுகம் 25
- ம. கிரேஷினி

5. வட்டமேசைகளில் அர்த்தப்படுதலுக்கான உரையாடல் திறன் 30
- வி.எஸ். இந்திரகுமார்

6. சிக்மண்ட் புரொய்ட் கூறும் உளப்பாலிய வளர்ச்சி 33
- அரசி விக்னேஸ்வரன்

7. அக்டோபர் புரட்சி 1917 37
'92 வருடங்களின் பின்னர் அதுபற்றிய ஒரு சிந்திப்பு'
- கார்த்திகேசு சிவத்தம்பி

8. மறைக்கப்பட்ட ஆளுமைகள் 44
திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யரை முன்னிறுத்தி..!
- லெனின் மதிவானம்

9. கவிஞரும், பெண்நிலைவாதியுமான ஔவை விக்னேஸ்வரனுடன் ஒரு நேர்காணல் 52

10. திருமந்திரம் காட்டும் வாழ்வியல் 56
- சிவத்தமிழ் வித்தகர் சிவ-மகாலிங்கம்

11. ஹேமா அக்கா(சிறுகதை) 62
- இளங்கோ

12. கவிதைகள் 69

சமூக விஞ்ஞான ஆய்வுமன்றம்

# ஆசிரியர் தலையங்கம்

அர்த்தம் சஞ்சிகையின் இரண்டாவது இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். பல்வேறு காரணங்களினால் குறித்த மாதத்தில் இரண்டாவது இதழை வெளியிட முடியவில்லை. வாசகர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். முதலாவது இதழிற்கு நிறையவே வரவேற்பு கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழ்பேசும் மக்கள் வாழும் சகல பிரதேசங்களிலும் வாழ்பவர்கள் வரவேற்றுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் என்போரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த ஆதரவுகள் வரவேற்புகள் எல்லாம் எமக்கு மிகுந்த உற்சாகத்தை தந்துள்ளன.

இவற்றை மேலும் பலப்படுத்தும் வகையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் மாவட்டங்கள் தோறும் வாசகர் வட்டங்களை உருவாக்குவது பற்றி யோசித்து வருகின்றோம். குறிப்பாக பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விக் கல்லூரி மாணவர்கள் போன்றோரை வாசகர் வட்டங்களில் உள்வாங்கி படைப்பாக்க முயற்சிகளுக்கு அப்பால் ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் கல்வி வட்டங் களை நடாத்துவது பற்றியும் ஆலோசித்து வருகின்றோம்.

ஏற்கனவே பல ஆசிரியர்களும், பல்கலைக்கழக, கல்விக்கல்லூரி விரிவுரையாளர்களும் வலுவான ஒத்துழைப்புகளைத் தந்துள்ளனர். சஞ்சிகைக்கு அப்பால் ‘அர்த்தம்’ ஒரு சமூக இயக்கமாக வளர வேண்டும். என்பதும் எமது அவா.

எமது சஞ்சிகையில் ஆக்கங்கள் இரண்டு பிரிவாகவே வெளிவருகின்றது. ஒரு பகுதி புலமையாளர்களுக்குரியது. மற்றைய பகுதி மாணவர்களுக்குரியது. மாணவர்களுக்குரிய பகுதி தரமானதாக வரவில்லை எனப் பலர் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். இதனைத் தவிர்க்கும் முகமாக எதிர் காலத்தில் புலமையாளர்களின் வழிகாட்டலின் அடிப்படையிலும் மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றோம். பல புலமை யாளர்கள் அதற்கு ஒத்துழைப்புத் தர தாங்களாகவே முன்வந்துள்ளனர்.

இந்த இதழ் வெளிவருவதற்கு பிரதான காரணமாக இருந்தவர் கொழும்பு மாநகரசபை உறுப்பினரும், பொறியியலாளருமான குகவரதன் அவார். ஆவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பூட்டன். அவரது சமூக உணர்வும், தமிழ் உணர்வும் குடும்ப மரபி லிருந்து வந்தது. அவர் 50,000 ரூபாவினை நன்கொடையாக வழங்கியுள்ளார். அவருக்கு எமது நன்றிகள். நாம் எதிர்பார்க்காத வகையில் பலர் விளம்பரங்கள் தந்தும் உதவி யுள்ளனர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்த இதழுக்கும் பல்வேறு புலமையாளர்கள் ஆக்கங்களைத் தந்திருக்கின்றனர். சிவ மகாலிங்கம், ஆசிரியர் இந்திரகுமார், யமுனா இராஜேந்திரன், போன்றோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை விட கவிஞரும் பெண்நிலைவாதியுமான ஔவை விக்கினேஸ்வரன் சிறந்த ஒரு நேர் காணலைத் தந்திருக்கின்றார். அவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

மாணவர்கள் வரிசையில அரசி விக்கினேஸ்வரன் முதலாவது இதழைப் போலவேசிக்மன்புறொய்ட் பற்றிய சிறந்த உளவியல் கட்டுரை ஒன்றினைத் தந்திருக்கின்றார். அவரைவிட கிறேசினி, மெடோனா என்போரும் தந்திருக்கின்றனர். சென்ற இதழில் மாணவர்களின் ஆக்கங்களிலுள்ள குறைபாடுகளை இந்த இதழில் இயன்றவரை திருத்தியிருக்கின்றோம். மாணவர்களை வளர்த்தெடுக்காமல் எதிர்காலப் புலமையாளர்களை எம்மால் உருவாக்க முடியாது.

வரலாறு எங்களிடம் நிறையவே பொறுப்புக்களை சுமத்தியிருக்கின்றது. போர் எமது சமூகத்தை அதிகளவில் சிதைத்து சிதறடித்துள்ளது. இவற்றையெல்லாம் மீள்புனரமைப்பு செய்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். மீள்புனரமைப்பு நடவடிக்கைகளை ஒரு சமூக இயக்கமாக மேற்கொள்ளாமல் எம்மால் முன்னேறமுடியாது.

அர்த்தம் இந்த வரலாற்றுப் பணியில் தனது பங்கினை நிச்சயம் நிறைவேற்றும்.

## நன்றி தெரிவிக்கிறோம்

கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் பொறியியலாளருமான ச. குகவரதன் அவர்கள் ‘அர்த்தம்’ இரண்டாவது இதழுக்கு 50000/= நன்கொடையாக வழங்கியுள்ளார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவருடைய சமூக உணர் விற்கு தலைசாய்க்கின்றோம்.

# அர்த்தம் - 2

## ஆடி 2012 - காலாண்டு இதழ்


ஆசிரியர் குழு

ப. கபிலேஸ்வரன்

க. பிரேம்குமார்

அ. மெடோனா

அ. மொடஸ்ரா

லா. நிக்ஷாந்தினி

ச. பிரியங்கா

ஆலோசனை

சி. அ. யோதிலிங்கம்

வெளியீடு

**சமூக விஞ்ஞான ஆய்வுமன்றம்**

A.C.A. கல்வி நிலையம்,

55, புனித லூசியா வீதி, கொட்டாஞ்சேனை.

# அதிகாரப் பங்கீட்டில் சர்வதேச அனுபவங்கள்



**சி. அ. யோதிலிங்கம்**

தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக ஸ்ரீ லங்கா அரசின் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். இதனாலேயே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றது. பல தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஆட்சி, அதிகாரம் இனங்களுக்கிடையே நியாயமான வகையில் பங்கிடப்பட்டிருக்க வேண்டும். அங்கு வாழுகின்ற தேசிய இனங்கள் தமது தனியான நலன்களைத் தனியாகவும், கூட்டான நலன்களைக் கூட்டாகவும் மேற்கொள்ளும் வகையில் ஆட்சிப் பொறிமுறை உருவாகியிருக்க வேண்டும். இவ்வாறான பொறிமுறை உருவாக்கப்பட்டமைக்கு சுவிற்சர்லாந்து, சோவியத் யூனியன், பெல்ஜியம், பொஸ்னியா, சூடான் என பல சிறப்பான உதாரணங்கள் உலக வரலாற்றில் உள்ளன. இலங்கையில் இச்செயன்முறை நடைபெறவில்லை என்பது தான் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. இணைந்து வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லாததினால் தான் தனியாக வாழும் நிலை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. தமிழீழக் கோரிக்கையும் அதன் அடிப்படையிலான தனிநாட்டுப் போராட்டமும் அந்த வகையிலேயே எழுச்சியடைந்தன.

ஆனால் இந்த தனியான வாழ்க்கையை சர்வதேச சமூகம் விரும்பவில்லை. போரின் முடிவு அதனையே வெளிக்காட்டியுள்ளது. இதனால் மீண்டும் இலங்கை என்ற அதிகாரக் கட்டமைப்புக்குள் தீர்வுகளைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச நாடுகளின் அனுபவங்கள் எமக்கு மிகவும் அவசியமாக உள்ளன.

தேசிய இனங்களுக்கான அதிகாரப் பங்கீடு என வருகின்ற போது அதிகார அலகு, பகிர்வு அதிகாரங்கள், கூட்டு அதிகாரங்கள், அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்கின்ற நான்கு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சுவிற்ஸ்லாந்து சமஷ்டி முறை, சோவியத் யுனியன் சமஷ்டி முறை, பெல்ஜியம் சமஷ்டி முறை, பொஸ்னியா சமஷ்டி முறை, சூடான் சமஷ்டி முறை என்பவற்றில் இவ் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டே அரசாங்க முறை ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது.

## 1) அதிகார அலகு

அதிகார அலகு என வருகின்ற பொழுது தேசிய இனங்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தமது கூட்டிருப்பினையும், அதன் வழி கூட்டு உரிமையையும் பாதுகாப்பதற்கு தனித்துவமான இவ் அதிகார அலகு மிக மிக அவசியமானதாகும். அதிகார அலகுகள் உருவாக்கப்படுகின்ற போது தேசிய இனங்களின் பிரதேசங்கள் பல்வேறு அலகுகளாக பிரிக்கப்படுமானால் அல்லது வேறு தேசிய இனங்களின் அலகுகளுக்குள் சேர்க்கப்படுமானால் அத்தேசிய இனத்தினால் கூட்டிருப்பினையும், கூட்டு உரிமையையும் பாதுகாக்க முடியாது.

அதிகார அலகு விடயத்தில் பல நாடுகளில் நிலத்தொடர்ச்சியற்ற பிரதேசங் கள் கூட கவனத்தில் எடுக்கப்படுகின்றன. தேசிய

இனங்களுக்கான அதிகாரப் பங்கீடாக இல்லா விட்டாலும் நிலத்தொடர்ச்சியற்ற பிரதேசங் களை இணைத்தே இந்தியாவில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் உருவாக்கப்பட்டது. அங்கு பாண்டிச்சேரி, காரைக்கால் பிரதே சங்கள் தமிழ்நாட்டிலும், ஏனாம் பிரதேசம் ஆந்திராவிலும், மாஹி பிரதேசம் கேரளத்தி லும் உள்ளன.

சில நாடுகளில் சிறிய சிறிய தேசிய இனங்களின் நலன்களைப் பேணுவதற்கு அத் தேசிய இனங்களுக்குக் கூட சிறிய அதிகார அலகுகள் உருவாக்கப்படுகின்றன. சோவியத் யூனியனில் சிறிய சிறிய தேசிய இனங்களுக் கும் இவ்வாறு அதிகார அலகுகள் உருவாக் கப்பட்டு அவற்றின் அடையாளங்கள் பாது காக்கப்பட்டன. இதன்படி பார்த்தால் கொழும் புத் தமிழர்களுக்குக் கூட ஒரு அதிகார அலகு வழங்கப்படலாம்.

சுவிற்ஸலாந்தில் உள்ளுராட்சிச் சபை மட்டத்தில் ஒரு சமூகம் செறிவாக வாழ்ந்தால் அந்த உள்ளுராட்சிப் பிரதேசம் ஒரு சிறிய அதிகார அலகாகக் கொள்ளப்படுகின்றது. அதிலும் குறைவாக ஒரு பாடசாலை மட்டத் தில் ஒரு சமூகம் செறிவாக வாழ்ந்தால் அப் பாடசாலைப் பிரதேசம் ஒரு அதிகார அல காகக் கொள்ளப்படுகின்றது. அதிகார அலகு களுக்குள் உள் அதிகாரப் பங்கீடுகளை உரு வாக்குவதன் மூலம் இவை நிறை வேற்றப் படுகின்றன.

பெல்ஜியம் சமஷ்டியானது சமஷ்டி எண் ணக்கரு வளர்ச்சிப்போக்கில் இன்னோர் முன் னேற்றத்தினைக் காட்டி நின்றது. அங்கு பிர தேசங்களுக்கு அதிகாரப் பங்கீடு வழங்கு வதற்கு அப்பால் சமூகம் ஒரு அதிகார அல காகக் கொள்ளப்பட்டு அதற்கும் அதிகாரப் பங்கீடு வழங்கப்பட்டுள்ளது.

கனடிய சமஸ்டி முறையில் பிரெஞ்சு மொழி பேசும் 'கியுபெக்' மாநிலம் தனி அல காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே அதிகார அலகுகள் உருவாக் கப்படும் போது தேசிய இனப்பிரச்சினை உள்ள நாடுகளில் தேசிய இனங்களே முக்கி யத்துவப்படுத்தப்பட வேண்டும். அத்தேசிய இனங்களின் கூட்டிருப்பினையும், கூட்டுரி மையையும் நிர்ணயிக்கும் வகையிலேயே அதிகார அலகுகள் உருவாக்கப்பட வேண்டும். இதனை நிர்ணயிக்கும் போது அத்தேசிய இனம் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பிர தேசங்கள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

### 2) பகிர்வு அதிகாரம்

இப்பகிர்வு அதிகாரம் என்ற எண்ணக்கருவின் இலக்கு தேசிய இனங்கள் தமது தனியான நலன்களை தாமே தீர்மானிப்பதற்குரிய வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை உடைய அதிகாரங்கள் இருக்கும் போதே இச் செயற்பாடு சாத்தியமாக இருக்கும். இடது சாரிச் சிந்தனையாளர் லெனின் இத்தனியான நலன்களை உச்சப்படுத்தும் வகையிலேயே தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை யைப் பிரயோகிக்கக் கூடிய சூழல் இல்லை யென்றால் அவற்றிற்கு பிரிந்து போகும் உரிமை இருக்க வேண்டும் என வலி யுறுத்தினார்.

சூடான் சமாதான உடன்படிக்கையில் தென்சூடானுக்கு விரும்பினால் பிரிந்து போகும் உரிமை வழங்கப்பட்டது. சமாதான உடன்படிக்கை செயற்படத் தொடங்கி 6 வரு டங்களின் பின்னர் தென் சூடான் வட சூடா னுடன் இணைந்திருப்பதா? அல்லது பிரிந்து போவதா? என்பது தொடர்பாக தென் சூடான் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தி தீர்மானிக்கலாம் என சமாதான ஒப் பந்தம் குறிப்பிட்டது.

தற்போது தென்சூடான் சர்வஜனவாக் கெடுப்பு ஒன்றின் மூலம் தனிநாடாக மாறி

யுள்ளது.தேசிய இனங்களுக்குப் பொதுவாக இருக்கின்ற விடயங்களை மட்டும் கூட்டான அதிகாரங்களாக மத்திய அரசிடம் ஒப்படைத்து விட்டு ஏனைய அதிகாரங்களைப் பகிர்வு அதி காரங்களாக விட்டு விடுவதே சிறந்த அதி காரப் பங்கீட்டிற்கு உதாரணங்களாகக் கொள் ளப்படுகின்றது. அமெரிக்கா, சுவிஸ்லாந்து, பெல்ஜியம், பொஸ்னிய சமஷ்டி முறைகளில் இத்தகைய அதிகாரப் பங்கீட்டினைக் காண லாம். இவற்றில் அமெரிக்காவைத் தவிர ஏனைய சமஷ்டி நாடுகள் எல்லாம் தேசிய இனங்களுக்கு அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொண்ட சமஷ்டி நாடுகளாகும்.

பகிர்வு அதிகாரங்கள் என வருகின்ற போது அதிகாரப் பிரதேசத்தின் நிலம், நீர், சட்டம் ஒழுங்கு, பொருளாதாரம், வர்த்தகம் போன்ற அதிகாரங்கள் முக்கியமானவை யாகும். இவ் அதிகாரங்கள் இல்லாமல் தேசிய இனங்களினால் தமது அபிலாசைகளை தாமே பேணிக்கொள்ள முடியாது.

சுவிஸ்லாந்து அரசாங்க முறையில் நாட் டுப் பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் வெளியிடுதல் போன்ற முக்கியமான பொது வான விடயங்களைத் தவிர ஏனையவை பகிர்வு அதிகாரங்களாக விடப்பட்டுள்ளன. அங்கு பகிர்வு அதிகார அலகுகளாகக் குறிப்பிடப்படும் கன்ரன்களுக்கு தனியான அரசியல் யாப்பு வைத்திருக்க அனுமதி வழங் கப்பட்டுள்ளது. அத்துடன் சிறிய படையொன் றினை வைத்திருப்பதற்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளதுடன் வெளிநாட்டு உறவுகளை கன் ரன்கள் தனியாகப் பேணுவதற்கும் வழிவகை கள் செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசின் இராணுவ சீருடைகளைப் பொறுத்த வரை யிலும் கூட, கன்ரன்களில் செயற்படும் இரா ணுவத்தின் சீருடைகளை கன்ரன்களே தீர்மா னிக்கின்றன. நீதித்துறையும் அங்கு அதிகாரப் பங்கீட்டிற்கு உட்பட்டிருக்கின்றது. மத்திய அரசின் நீதிமன்றங்கள், கன்ரன்களின் நீதி மன்றங்கள் என இரு வகையான நீதிமன்றங் கள் அங்கு காணப்படுகின்றன. ஒரே நேரத்தில் சுவிஸ்லாந்தின் பிரஜைகளாகவும், கன்ரன் களின் பிரஜைகளாகவும் கொள்ளப்படக் கூடிய வகையில் இரட்டைப் பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

சுவிஸ்லாந்து அரசாங்க முறையின் இன் னோர் சிறப்புப் பண்பு கன்ரன்கள் மட்டத்தில் மத்திய அரசின் சட்டங்களை கன்ரன்களே நிறைவேற்றும் பணிகளில் ஈடுபடுவதாகும். இங்கு கூட்டு அதிகாரங்களைப் பொறுத்த வரை கூட கன்ரன்கள் நிறைவேற்ற முடி யாத பணிகளை மட்டுமே மத்திய அரசு மேற்கொள் கின்றது. உதாரணமாக ஜெனீவா பிரான்சின் எல்லையில் உள்ளது. பிரான்ஸ் ஊடான எல்லைப் பிரச்சினைகளை ஜெனீவா பிரதேசம் அமைந்திருக்கும் கன்ரன் கையாளுகின்றதே தவிர சுவிஸ்லாந்தின் மத்திய அரசு கையாளு வதில்லை. இங்கு கன்ரன்களின் அரச ஊழி யர்கள் மத்திய அரசின் சட்டங்களையும், கன் ரன்களின் சட்டங்களையும் நடைமுறைப் படுத்துகின்றனர்.

முன்னாள் சோவியத் யுனியன் சமஸ்டி யில் வெளிநாட்டு உடன்படிக்கைகளை மாநி லங்கள் தனியாக மேற்கொள்வதற்கான அதி காரங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு உக்ரேய்ன், பைலோரஸ்யா ஆகிய இரு மாநிலங்களுக் கும் ஐக்கிய நாடுகள் சபையில் தனியான பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டிருந்தது. அத் துடன் மாநிலங்கள் விரும்பினால் தனிநாடாக பிரிந்து செல்வதற்கும் யாப்பு ரீதியாக உத்தர வாதம் வழங்கப்பட்டிருந்தது.

சூடான் சமஷ்டி முறையாக இருந்த போது அங்கு மாநிலங்களுக்குத் தனியான அரசியல் யாப்பு, தனியான மாநிலக் கொடி என்பன வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட தோடு வேறு வேறான நாணயங்களைப் பயன் படுத்தவும் வழிவகைகள் செய்யப்பட்டி ருந்தன. இதன் படி வட சூடான் பவுண்ஸ் நாயணத்தினையும், தென் சூடான் தினார்

நாணயத்தினையும் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பெல்ஜியம் சமஷ்டியும் அண்மைக்கால சமஷ்டிக்கு உதாரணமாகும். இங்கு சமூகங் களுக்கும் அதிகாரங்கள் பங்கிடப்பட்டு இருப் பதனால் கல்வி, கலாசாரம், சமூக சேவைகள் போன்ற தனிநபர்களுடன் சம்பந்தப்பட்ட விட யங்கள் சமுதாயப் பாராளுமன்றத்திடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன. அதேவேளை நகரத் திட்டமிடல், சூழல், வீடமைப்பு, பொது வேலைகள் போன்ற அதிகாரங்கள் மாநிலங் களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிரித்தானியா ஒரு ஒற்றையாட்சி நாடாக இருக்கின்ற போதும் அண்மைக்காலத்தில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து என்பனவற்றிற்கு அதிகாரப் பங்கீடு வழங்கப் பட்டுள்ளது. அங்கு வழங்கப்பட்டுள்ள அதி காரப் பங்கீட்டு முறை ஒரு சமச்சீர் அற்ற அதிகாரப் பங்கீட்டு முறையாகும். ஸ்கொட் லாந்திற்கு அதிகளவான அதிகாரங்களும், ஏனையவற்றிற்கு சற்றுக்குறைந்த அதிகாரங் களும் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு போன்ற விடயங் களைத் தவிர மீதி அதிகாரங்கள் ஸ்கொட் லாந்துப் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டு ள்ளது. வேல்ஸ் பாராளுமன்றத்திற்கு இதனை விட சற்றுக் குறைந்த வகையில் கல்வி, அதி காரம், பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள் ளன. வட அயர்லாந்து பாராளுமன்றத்திற்கு ஸ்கொட்லாந்து, வேல்ஸ் என்பவற்றிற்கு இடைப்பட்ட வகையிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் பகிர்வு அதிகாரம் சிறப் பானதாக இல்லை. மத்திய அரசின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது எனினும் கவனத்தில் எடுக் கப்படக்கூடிய உள் அதிகாரப் பங்கீட்டு முறை உள்ளது.

யூனியன் பிரதேச மக்களுக்கும், பழங் குடி மக்களுக்கும் குறிப்பிட்ட விடயங்களில் அதிகாரப்பங்கீடு வழங்கப்பட்டுள்ளது. பின் தங்கிய மக்களுக்கான இட ஒதுக்கீட்டு முறை யும் அங்கு நடைமுறையில் உள்ளது.

### 3) கூட்டு அதிகாரம்

கூட்டான நலன்களைப் பேணுவதற்கு கூட்டு அதிகாரம் முக்கியமான ஒன்றாகும். இக் கூட்டு அதிகார அலகே மத்திய அரசு என்று அழைக் கப்படுகின்றது. இக் கூட்டு அதிகாரக் கட் டமைப்பில் தேசிய இனங்கள் சமத்துவமாக பங்குபற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. குறிப் பாக மாநிலங்களுக்கு கூட்டு அதிகாரக் கட் டமைப்பில் அதாவது மத்திய அரசில் சம அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலமே இது பூர்த்தி செய்யப்படுகின்றது. அமெரிக்கா, சுவிஸ்லாந்து, பெல்ஜியம், பொஸ்னிய சமஷ் டியில் இதற்கான ஏற்பாடுகள் இருப்பதனை நாம் அவதானிக்கலாம். சட்டத்துறை, நிர்வா கத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றிலும் இவ் வாய்ப்புகள் இருக்க வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மத்திய அரசின் சட்டத்துறையைப் பொறுத்தவரை அமெரிக்காவிலும், சுவிஸ் லாந்திலும் மாநிலங்களின் நலன்களை மத் தியில் பேணும் இரண்டாவது சபையில் மா நிலங்களுக்கு சம பிரதிநிதித்துவம் வழங் கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலமும் தலா இரண்டு பிரதிநிதிகளை இர ண்டாவது சபையாக செனற் சபைக்கு அனுப் புகின்றன. சுவிஸ்லாந்தில் முழுக்கன்ரன்கள் தலா இரண்டு பிரதிநிதிகளையும், அரைக் கன்ரன்கள் தலா ஒரு பிரதிநிதியையும் இரண் டாவது சபைக்கு அனுப்புகின்றன.

முன்னாள் சோவியத் யூனியனில் ஒன் றியக் குடியரசுகள் 30 பிரதிநிதிகளையும், தன்னாட்சிக் குடியரசுகள் 11 பிரதிநிதிகளை யும், தன்னாட்சிப் பிராந்தியங்கள் 5 பிரதி நிதிகளையும், தன்னாட்சிப் பகுதிகள் 1 பிரதி நிதியையும் இரண்டாவது சபையான தேசிய

இனங்களின் சோவியத்திற்கு அனுப்பி யிருந்தன.

பொஸ்னிய ஹெர்சகோவினிய சமஷ்டியின் இரண்டாவது சபையான மக்கள் சபையில் பொஸ்னியர், குரோசியர் ஆகிய இரு தேசிய இனங்களும் அங்கத்துவம் வகிக்கின்றன. பொஸ்னிய சமூகத்தில் இருந்து 30 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அதே வேளை குரோசிய சமூகமும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களும் சேர்ந்து 30 உறுப்பினர்களைக் கொண்டுள்ளனர்.

பெல்ஜியம் சமஷ்டியின் இரண்டாவது சபையான செனற் சபையில் 71 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் 40 உறுப்பினர்கள் மாநிலங்களில் இருந்து நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். பிளேமிஸ் மாநிலத்தில் இருந்து 25 உறுப்பினர்களும், பிரெஞ்சு மாநிலத்தில் 15 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். தலா 10 உறுப்பினர்கள் பிரெஞ்சு சமுதாயப் பாராளுமன்றத்தில் இருந்தும், பிளேமிஸ் சமுதாயப் பாராளுமன்றத்தில் இருந்தும் பெறப்படுகின்றனர். ஒருவர் ஜேர்மன் சமுதாயப் பாராளுமன்றத்தில் இருந்து பெறப்படுகின்றார்.

மத்திய அரசின் நிர்வாகத்துறையைப் பொறுத்தவரை நியாயமான சமத்துவம் எதிர்பார்க்கப்படுகின்றது. இது விடயத்தில் சுவிஸ்லாந்து, பெல்ஜியம், பொஸ்னியா, சூடான் என்பவை கவனத்திற்குரியவையாக உள்ளன.

சுவிஸ்லாந்தில் நிர்வாகத்துறையாகக் 'கூட்டாட்சிக் குழு' விளங்குகின்றது. இதில் 7 பேர் அங்கம் வகிக்கின்றனர். ஜேர்மன் மொழி பேசுபவர்களில் இருந்து நால்வரும், பிரெஞ்சு மொழி பேசுவோரில் இருந்து இருவரும், இத்தாலி மொழி பேசுவோரில் இருந்து ஒருவரும் இவ்வாறு அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவரும், உப தலைவரும் வருடம் தோறும் சுழற்சி முறையில் இக்குழுவில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். இதனால் மூன்று மொழி பேசுவோரும் தலைவராக வருவதற்குரிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

அமைச்சரவையிலும் மூன்று மொழி பேசுவோருக்கும் விகிதாசார முறையில் அங்கத்துவம் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் அமைச்சர்கள் சுழற்சி முறையில் மாற்றப்படுகின்றனர். இதனால் மூன்று மொழி பேசும் அமைச்சர்களும் முக்கியமான அமைச்சுப் பதவிகளை வகிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

சூடானில் ஜனாதிபதி வட சூடானைச் சேர்ந்தவராக இருந்தாலும், தென் சூடானின் ஜனாதிபதி சூடானின் உப ஜனாதிபதியாகப் பதவி வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய பெற்றோலியச் சபை, நிதி வழங்கல் சபை என்பனவற்றிலும் தென் சூடானுக்கு உரிய இடம் ஒதுக்கப்பட்டது. அரச உத்தியோகங்களில் வட சூடானுக்கும் தென் சூடானுக்கும் இடையே 70 : 30 என்ற வகையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பொஸ்னிய ஹெர்சகோவினியா சமஸ்டியில் ஜனாதிபதியாக ஒரு இனத்தவரும் உப ஜனாதிபதியாக மற்றைய இனத்தவரும் பதவி வகிப்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இவர்கள் தமது பதவியை சுழற்சி முறையில் மாற்றிக் கொள்வர். இவர்களைத் தெரிவு செய்யும் போது பாராளுமன்றத்தில் பொஸ்னிய வேட்பாளரை குரோசிய உறுப்பினர்களும், குரோசிய வேட்பாளரை பொஸ்னிய உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அமைச்சரவையிலும் மூன்றில் ஒரு பங்கினருக்குக் குறையாதோர் குரோசிய இனத்தவராக இருத்தல் வேண்டும். இச்சமஷ்டியில் பொஸ்னிய இனத்தவர் பெரும்பான்மையாகவும், குரோசிய இனத்தவர் சிறுபான்மையாகவும் உள்ளனர்.

முன்னாள் சோவியத் யுனியன் சமஹடியில் மத்திய நிர்வாகத்துறையின் உயர் அமைப்

பாக பிரிசீடியம் இருந்துள்ளது. மாநிலங்களின் தலைவர்கள் பிரிசீடியத்தின் துணைத் தலைவர்களாக அங்கம் வகித்திருந்தனர். அமைச்சரவையிலும், மாநிலங்களோடு தொடர்புள்ள விடயங்களைப் பொறுத்தவரை மாநிலங்களின் தலைவர்கள் பொறுப்புக்களை ஏற்றிருந்தனர்.

மொழி விடயத்தினைப் பொறுத்தவரை மத்திய அரசு மட்டத்தில் அனைத்துப் பிரதான மொழிகளுக்கும் சமத்துவமான அந்தஸ்து எதிர்பார்க்கப்படுகின்றது.

சுவிஸ்லாந்தில் ஜேர்மன் மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலி மொழி, ரோமனாஸ் மொழி ஆகிய நான்கும் நாட்டின் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை முதல் மூன்று மொழிகளும் அரச கரும மொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 0.5 சதவீதமான மக்கள் பேசும் ரொமனாஸ் மொழி அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்படாவிட்டாலும் அம்மொழி பேசுவோர் தமது தாய் மொழியில் அரசுடன் தொடர்பு கொள்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

பொஸ்னிய ஹெர்சகோவினிய சமஸ்டியில் பொஸ்னிய மொழியும், குரோசிய மொழியும் தேசிய மொழிகளாகவும், அரச கரும மொழிகளாகவும், கல்வி மொழிகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மத்திய நீதித்துறையைப் பொறுத்தவரையிலும் தேசிய இனங்களின் நியாயமான பங்கேற்பு இருக்கக் கூடிய வகையில் பதவிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுவிஸ்லாந்து நீதித்துறையில் மூன்று ஆட்சி மொழிகளைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களின் விகிதாசாரத்திற்கும் இணங்க பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டு அதிகாரத்தில் இன்னோர் முக்கிய விடயம், மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது சபை வலுவான அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதாகும். அமெரிக்க செனற் சபை இது விடயத்தில் வலுவான அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. அங்கு ஜனாதிபதி உயர் நியமனங்களை மேற்கொள்ளும் போதும், வெளிநாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போதும் செனற்சபையின் சம்மதத்தினைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும். முன்னாள் சோவியத் யுனியனிலும் இரண்டவாது சபையான தேசிய இனங்களின் சோவியத் முதலாவது சபையுடன் சமமான அதிகாரங்களைக் கொண்டிருந்தது.

### 4) அதிகாரங்களுக்கான பாதுகாப்பு

இந்தப் பாதுகாப்பு பகிர்வு அதிகாரங்களைப் பொறுத்தவரையில் தான் மிகவும் முக்கியத்துவமுடையதாகின்றது. இவ் அதிகாரங்களை மத்தியரசு பறித்து விடலாம் என்பதற்காகவே, முக்கியத்துவமுடையதாக கொள்ளப்படுகின்றது. இதனால் பாதுகாப்பு ஏற்பாட்டில் பகிர்வு அதிகாரங்களை மத்தியரசு பறிக்காத வகையில் வலிமையான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது விடயத்தில் மாநில அரசுகளும் பங்குபற்றக் கூடிய வகையில் யாப்பு திருத்தப் பொறிமுறையை அமைப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. குறிப்பாக தேசிய இனங்களின் அபிலாசைகளை மீறி மத்தியரசு செயற்படக் கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டப்படுகின்றது.

பல தேசிய இனங்களைக் கொண்ட மாநில அரசுகள் இருக்கும் போது மத்தியரசு தன்னிச்சையாக பகிர்வு அதிகாரங்களைப் பறிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு ஆனால், பெரும்பான்மை தேசிய இனத்தின் மாநிலங்கள் அதிகமாகவும், சிறிய தேசிய இனங்களின் மாநிலங்கள் குறைவாகவும் இருக்கின்ற போது பகிர்வு அதிகாரங்களைப் பறிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவிருக்கின்றன. சிறிய

தேசிய இனங்களின் மாநிலங்கள் குறைவாக இருந்தாலும், பகிர்வு அதிகாரங்களைப் பறிக்க முடியாத பொறிமுறை இருத்தல் வேண்டும் என்பதே தற்காலங்களில் அதிகம் வலியுறுத் தப்படுகின்றது.

சுவிட்சர்லாந்து அரசாங்க முறையில் அர சியல் யாப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவதாயின் அரைவாசிக்கு மேற்பட்ட கன் டன்கள் அதனை அங்கீகரிப்பதோடு மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் மக்களும் அதனை அங்கீகரிக்க வேண்டும் என ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அமெரிக்க சமஸ்டி முறையில் அச்சமஸ்டி முறை தேசிய இனங்களுக்கான சமஸ்டி முறை யாக இல்லாத போதும் யாப்புத் திருத்தத்தில் கடினமான நடைமுறை பின்பற்றப்படுகின்றது. அங்கு யாப்புத் திருத்தங்கள் அனைத்தும் மத்திய சட்டசபையான காங்கிரசின் இரு சபை களிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன் நிறைவேற்றப்படுவதோடு நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் அதனை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

மாநிலங்களின் எண்ணிக்கையை குறை வாகக் கொண்ட தேசிய இனங்கள், அதிக எண்ணிக்கையைக் கொண்ட தேசிய இனங் களினால் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்ப் பதற்காக நவீன அரசியல் அறிஞர்கள் இரட்டை வாக்கெடுப்பு முறையினை சிபாரிசு செய் கின்றனர். அதாவது குறிப்பிட்ட தேசிய இனத் தினை பாதிக்கும் சட்டமூலம் முதலில் பாராளு மன்றின் முழுச் சபையில் நிறைவேற்றப்படு வதோடு இரண்டாவது தடவை அக்குறிப் பிட்ட தேசிய இனத்தின் உறுப்பினர்கள் மத்தி யிலும், வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட வேண்டும் என இம்முறை சிபா ரிசு செய்கின்றது.

அதிகாரங்களுக்கான பாதுகாப்பில் இன் னொரு அம்சம் நீதிப்புனராய்வு கொண்ட நீதித்துறை ஒன்று இருப்பதோடு அது பக்கம் சாராது செயற்படுவதுமாகும். இங்கு நீதிப் புனராய்வு அதிகாரம் என்பது மத்திய சட்ட மன்றமும், மாநிலச் சட்டமன்றங்களும் இயற் றும் சட்டங்கள் அரசியல் யாப்புடன் ஒத்துப் போகின்றதா என்பதை பரிசீலனை செய்யும் அதிகாரமாகும். இவ் அதிகாரம் பகிர்வு அதி காரங்களைப் பாதுகாக்கும் முக்கியமான தொன்றாகக் கொள்ளப்படுகின்றது.

இதை விட சமஷ்டி ஆட்சி முறையில், பல பிரச்சினைகள் உருவாவதற்கு வாய்ப்பு களுண்டு. இங்கு மத்தியரசிற்கும், மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் தொடர் பாகப் பிரச்சினைகள் வரலாம், இரு மாநிலங் களுக்கிடையேயும் அதிகாரப் பிரச்சினை உரு வாகலாம். மத்தியரசும், மாநில அரசுகளும் அரசியல் யாப்பிலிருந்து அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதால் அரசியல் யாப்பிற்கு பொருள் விளக்கங்கள் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படலாம். இவற்றையெல்லாம் தீர்த்து வைப்பதற்கு பக்கம் சாராத நீதித்துறை அவசியமானதாகும்.

நீதித்துறை பக்கம் சார்ந்து செயற்படுமாக இருந்தால் சமஷ்டியில் இணைந்து கொண்ட தேசிய இனங்களுக்கே அது பாதகமானதாக அமையும். இந்திய நீதித்துறை மீது இவ்வா றான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படு கின்றன. அங்கு உயர் நீதிமன்றம் மத்திய ரசிற்கு சார்பாகவே அதிக தீர்ப்புகளை வழங்கி யுள்ளது எனக் கூறப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் அமெரிக்க உயர் நீதிமன்றம் பக்கச் சார்பற்று செயற்படுவதாக கூறப்படுகின்றது. எனினும் மத்தியரசின் அதிகாரங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதற்கு உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புகளும் ஒரு காரணம் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

அதிகாரங்களுக்கான பாதுகாப்பில் உள்ள பிரதான பிரச்சினை அரசியல் யாப்புத் திருத் தம், நீதிப்புனராய்வு அதிகாரம் என்பனவற் றிற்கு அப்பால் வேறு வழிகளிலும் பகிர்வு அதிகாரங்களைப் பறிப்பதை எவ்வாறு தடுப்

பது என்பது தான். குறிப்பாக பொதிந்துள்ள அதிகாரம் என்ற கோட்பாட்டின் மூலம் பகிர்வு அதிகாரங்களைப் பறிக்கும் செயன்முறையை பல நாடுகள் மேற்கொள்கின்றன.

அமெரிக்காவில் காங்கிரஸ் இப்பொதிந்துள்ள அதிகாரம் என்ற கோட்பாட்டை பயன்படுத்தி மாநிலங்களின் பல அதிகாரங்களைப் பறித்துள்ளது. அங்கு மத்தியரசின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாநில அரசுகளின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. இவை எஞ்சிய அதிகாரங்களாகவே கொள்ளப்படுகின்றன. இந்த எஞ்சிய அதிகாரங்களுக்குள் மத்திய அரசின் அதிகாரங்கள் பொதிந்து கிடக்கின்றது என விளக்கம் கொடுத்தே மத்தியரசு அவற்றினைப் பறித்துக் கொள்கின்றது. உயர் நீதிமன்றமும், மத்தியரசிற்குச் சார்பாக பொருள் விளக்கம் கொடுப்பதனால் இப் பறிப்புச் செயன்முறை இலகுவாகின்றது.

இவற்றினை விட அரசியல் யாப்பு ஏற்பாடுகள் மூலம் பறிக்கும் நிலையும் பல நாடுகளில் காணப்படுகின்றது. இந்தியாவில் மத்தியரசு, மாநிலங்களுக்கான பல அதிகாரங்களை இச் செயன்முறை மூலம் பறித்துள்ளது. அங்கு யாப்பின் படி மத்திய பாராளுமன்றத்தின் இரண்டாவது சபையான மாநிலங்களவையில் ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றுவதன் மூலம் மாநிலப் பட்டியலிலுள்ள அதிகாரங்களை மத்திய பட்டியலுக்கு மாற்றலாம். இதனைப் பயன்படுத்தியே மாநிலங்களின் பல அதிகாரங்களைப் பறித்துள்ளது.

## இலங்கைக்குப் பொருத்தமான அதிகாரப் பங்கீட்டு முறை

இலங்கை ஒரு தனித்துவமான நாடாகும். இதனால் எந்த ஒரு நாட்டினுடைய ஏற்பாடுகளையும் முழுமையாக இங்கு பொருத்த முடியாது. அவ்வவ் நாடுகளிலிருந்து இலங்கைக்கு பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்து சேர்த்துக் கொள்ளலாம். அதுவும் போதாதபோது பல புதிய விடயங்களையும் இணைத்து ஒரு முன் மாதிரியான அதிகாரப் பங்கீட்டு முறையினை உருவாக்கலாம். இதன் மூலம் அதிகாரப்பங்கீடு என்ற எண்ணக்கருவிற்கு பங்களிப்பு செய்த நாடாக அமெரிக்கா, சுவிஸ்லாந்து போல இலங்கையையும் மாற்றலாம்.

அதிகார அலகு விடயத்தில் சோவியத் யூனியன், சுவிஸ்லாந்து, இந்தியா, பெல்ஜியம் என்பவற்றின் அனுபவங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். சோவியத் யுனியனில் சிறிய சிறிய தேசிய இனங்களுக்கும் அதிகார அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் முஸ்லீம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் அதிகார அலகுகளை உருவாக்குவதற்கு இது உதவியாக அமையும். இதேபோன்ற ஏற்பாடுகள் சுவிஸ்லாந்திலும் காணப்படுகின்றன.

இந்திய அனுபவம் நிலத் தொடர்ச்சியற்ற அதிகார அலகுகளை உருவாக்குவதற்கு உதவலாம். வட - கிழக்கில் முஸ்லீம் மக்களுக்கான அதிகார அலகுகளை உருவாக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இவ்வாறான ஒரு யோசனையை முன்வைத்துள்ளது. மலையக மக்களுக்கும் இவ்வாறான யோசனை தேவைப்படலாம்.

பெல்ஜிய அனுபவம் சிதறி வாழும் மக்கள் கூட்டத்திற்கு சமூகத்திற்கான அதிகார அலகு என்ற சிந்தனையை உருவாக்கியுள்ளது. இது தென் இலங்கையில் சிதறி வாழும் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கு உதவக்கூடிய ஒன்றாக இருக்கும்.

தமிழ் மக்களுக்கான அலகு என்பது வட - கிழக்கு இணைத்த அலகு என்பதை தமிழ் மக்கள் தொடர்ந்து உறுதிப்படுத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் கூட்டிருப்பிற்கும் அதன் வழியான கூட்டுரிமைக்கும் இந்த இணைந்த அலகு மிக மிக அவசியம். சென்ற ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் இரண்டிலும் தமிழ்மக்கள் இது தொடர்பான தங்

களை தாங்கள் நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனனர். இதன்போது முஸ்லீம் மக்களுக்கான உள் அதிகார அலகை நாம் நிராகரிக்கக்கூடாது.

பகிர்வு அதிகார விடயத்தில் சுயநிர்ணய, உரிமைமையப் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்கள் தமிழ் மக்களுக்குத் தேவை. போரினால் தமிழ் மக்கள் 50 வருடங்களுக்கு மேல் பின் தள்ளப்பட்டுள்ள்னர். இதனை நிவர்த்தி செய்வதற்கு அதிகளவில் அதிகாரங்கள் தேவை. எனவே சுவிஸ்லாந்தில் நிலவுகின்ற பகிர்வு அதிகாரமுறை இதில் அதிகம் உதவக் கூடியதாக இருக்கும். காணி அதிகாரங்கள், பொலீஸ் அதிகாரங்கள், கடல் அதிகாரங்கள் போன்றன பகிர்வு அதிகாரத்திற்குள் அடங்க வேண்டியது மிக அவசியமானதாகும்.

உள் அதிகாரப் பங்கீடு, சமூகமட்ட அதிகாரப் பகிர்வு என்பவற்றிற்கு இந்திய, பெல்ஜிய அனுபவங்கள் அதிகம் உதவக்கூடியதாக இருக்கும். முஸ்லீம் மக்களுக்கும், மலையக மக்களுக்கும் தென் இலங்கையில் சிதறி வாழும் தமிழ் - முஸ்லீம் மக்களுக்கும் இவ்வாறான அதிகாரப்பகிர்வு தேவையாக உள்ளது. கூட்டு அதிகாரத்தில் அந்த அதிகாரத்தை விநியோகிக்கின்ற நிறுவனத்தின் கட்டமைப்பு, அதில் தேசிய இனங்களின் பங்கு என்பன முக்கியமானதாகும். தேசிய இனங்களை இணைத்து கூட்டு அதிகாரம் உருவாக்கப்பட்டால் தேசிய இனங்களுக்கிடையே மத்திய மட்டத்தில் சமத்துவம் நிலவும். இரண்டாவது சபை ஒன்றை உருவாக்கி அதில் தேசிய இனங்களுக்கு சமத்துசமான அங்கத்துவத்தையும் அதிகாரங்களையும் வழங்கி இந்த சமத்துவ நிலையைப் பேணலாம்.

ஆனால் இலங்கையில் அவ்வாறான மத்திய அரசு ஒன்று அமைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை. எனவே தமது சொந்த விவகாரங்களைப் பொறுத்தவரை மத்திய அரசு மட்டத்தில் வீட்டோ அதிகாரம், தமிழ் மக்களுக்குத் தேவையானதாகும். இரட்டை வாக்கெடுப்புமுறை இதற்கு ஏற்றதாக இருக்கும். இதனால் கூட்டு அதிகாரங்களைப் பொறுத்தவரை இலங்கைக்கு பொருத்தமான சர்வதேச அனுபவங்கள் இருக்கின்றது. எனக் கூறிவிடமுடியாது. இதனை புதிதாகவே உருவாக்க வேண்டும்.

அரசாங்கம் செனற்சபை ஒன்றினை உருவாக்கப் போவதாகக் கூறியுள்ளது. அதன் கட்டமைப்பு அதில் தேசிய இனங்காணலின் பங்கு, அதன் அதிகாரங்கள் என்பன பற்றி எதுவும் தெரியாத நிலையில் அதன் பலா பலன்களைப் பற்றிக் கூறுவது கடினமானதாகும்.

அதிகாரங்களுக்கான பாதுகாப்பு விடயத்தில் அரசியல் யாப்பு திருத்தம் முக்கியத்துவம் பெறுகின்றது. எனினும் சர்வதேச மாதிரிகள் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. தமிழ் மக்கள் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களின் சம்மதத்துடன் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் தேவை. மரபுரீதியாக உள்ள நீதிப் புனராய்வு அதிகாரம் போன்ற ஏற்பாடுகள் இலங்கைக்கு பொருத்தமானவையாக இருக்கும் எனக் கூறமுடியாது.

இதுவரை அதிகாரப் பங்கீட்டில் சர்வதேச அனுபவங்கள் பற்றியும் அவற்றில் இலங்கைக்கு பொருத்தமான விடயங்கள் பற்றியும் இயன்றவரை கூறியுள்ளேன். இவ் உரையினை முடிந்த முடிவாக கூறவில்லை. மகாஜன பாரம்பரியம் எதனையும் முடிந்த முடிவாகக் கூறுவதில்லை. எல்லாமே விவாதத்திற்குரியவை. மாற்றுக்கருத்துக்களுக்குரியவை, தொடர்ச்சியான ஆய்வுகளுக்குரியவை என்றே கூறுகின்றது.

அந்தப் பாரம்பரியத்திற்கிணங்க, இவ்வுரையினை இவ்விடயப் பொருள் பற்றிய வாதத்தின் தொடக்கமாகக் கருதுகின்றேன்.

**(கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற பாவலர் துரையப்பாபிள்ளையின் 81 வது சிராா்த்த தினத்தில் ஆற்றிய நினைவுப் பேருரை.)**

# ஏழாம் அறிவு புகட்டும் பண்பாட்டு மயக்கம்

**யமுனா ராஜேந்திரன்**

தமிழ் சினிமா வரலாற்றாசிரியர் தியோடர் பாஸ்கரன் சொல்வது போல போதிதர்மனின் கதை ஆவணமதிப்புக் கொண்ட வரலாறு இல்லை. இயக்குனர் முருகதாஸ் கோரிக் கொள்கிற மாதிரியிலான போதிதர்மன் தமிழன் தான் என்பதற்கான ஐயம்திரியற்ற வரலாற்றுச் சான்றுகள் இல்லை. போதிதர்மன் பார்ப்பனர் ஒருவருக்கு மூன்றாவதாகப் பிறந்த மகன் என ஒரு பதிவும், மத்தியகிழக்கு நாடுகளில் இருந்து சீனா வந்தவன் எனப் பிறிதொரு பதிவும், காஞ்சிபுரத்திலிருந்து வந்த தமிழன்



என வேறொரு பதிவும் சீன மொழியில் வேறு வேறு காலங்களில் பதியப்பட்டிக்கிறது.

போதிதர்மன் சீனாவை அடைந்தபோது சீனர்களால் புறக்கணிக்கப்பட்டு, சீனாவில் ஏழு ஆண்டுகள் சுவற்றைப் பார்த்தபடி பேசாமல் மௌனமாயிருந்து, அங்கேயே மரணமுற்றான் எனவும், பிற்பாடு தனது ஒரு செருப்பை மட்டும் புதைகுழியில் விட்டு விட்டு, பிறிதொரு செருப்புடன் மீள உயிர்த்தெழுந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்ததாகவும் இன்னொரு சீனப் பதிவும் இருக்கிறது.

ஓஷோ, போதிதர்மனின் போதனைகளின் தத்துவ மதிப்பைக் குறித்துத்தான் பேசுகிறாரேயல்லாது அவரது வரலாற்று நூலை ஆதார பூர்வமாக அவர் எழுதவில்லை. மகாவம்சத்தை வரலாறாகக் கொள்வோமானால் நாம் போதி தர்மன் குறித்த முருகதாசின் கதையையும் வரலாறாகக் கொள்ளலாம். முருகதாசினது ஏழாம் அறிவு கதையை போதிதர்மன் குறித்த பழங்கதை மரபின் (Legend) பிறிதொரு வகையிலான சமகால நீட்சி என்ற அளவிலேயே நாம் மதிப்பிட வேண்டும். பழங்கதை மரபுக்கு நாம் அதற்குரிய புனைவுத் தகுதி யைத் தான் தரலாமே யொழிய, மாறாக எவ ரும் அதற்கு வரலாற்று மதிப்பை வழங்குவது சரியானது இல்லை.

முருகதாஸ் ஏழாம் அறிவில் முன் வைக்கும் மர பும் உயிர்க் கூற்றி யலும் குறித்த தரவு கள் விஞ் ஞான உண்மை களுக்குப் புறம்பா னவை. மருத்துவர் மகனை உயிர்கூற்று மாதி ரியை வைத்து மருத்துவனாக உயிர்ப்பிக்க முடியாது. விஞ்ஞானியின் மகன் இயல்பா கவே விஞ்ஞானியாக முடியாது. அதற்கு அவன் மருத்துவமும் விஞ்ஞானமும் படிக்க

வேண்டும். சிந்தனையும் பயிற்சியும் சார்ந்த திறன்கள் ஓர் இனக்குழுவுக்கு மரபாக ஒரு போதும் தொடர்ந்து வருவதில்லை. புறச்சூழலும், வளர்ப்பு முறையும், வாய்ப்பும் மனிதனது முயிற்சியும்தான் ஒரு மனிதனது ஆளுமையைத் தீர்மானிப்பதில் பாத்திரம் வகிக்கிறது.

முருகதாஸ், வரலாறு மற்றும் விஞ்ஞானம் என இரு தளங்களிலும் பிழையான முடிவுகளின் அடிப்படைகளின் மீது உருவாக்கிய திரைக்கதைதான் ஏழாம் அறிவு. இனம் குறித்த மிகையான கோருதல்கள் ஒரு வகையிலான பெருமிதத்தையும் ஆறுதலையும் ஓர நிலைக்குத் தள்ளப்பட்ட ஓர் இனமனிதர்களுக்குத் தரலாம். சந்தைத் திரைப்படங்கள் வரலாறு முழுக்க இவ்வாறான மனிதர்களைக் குறிவைத்து, இந்த ஆறுதலைத்தான் தந்து வருகிறது. இதனைச் சமகால வரலாற்றுடன் நேரடியாகச் சமப்படுத்தி ஆறுதலடைவது பிழையான பிரக்ஞையாகவே இருக்கும்.

இயக்குனர் சேரன் தயாரித்த தொடரும் நீதிக்கொலைகள் ஆவணப்பட வெளியீட்டு நிகழ்வில் நடிகர் சத்யராஜ் பேசியதைக் கேளுங்கள்:

'சினிமா வியாபாரம் சம்பந்தப்பட்டது. ஏன்னா போட்ட பணத்தை எடுக்கத்தான் எல்லாரும் நினைப்பாங்க. எந்த விஷயத்துக்காக மக்களின் கைதட்டல் அதிகமாக கிடைக்கிறதோ அது தான் அதிகமாக படத்தில் வரும்.

சில்க்கின் கவர்ச்சி நடனத்துக்கு கைதட்டல் கிடைத்தால், அந்த கவர்ச்சி நடனத்தை எல்லா படத்திலும் வைப்போம். கவுண்டமணி, செந்தில் காமெடிக்கு கைதட்டல் அதிகமாக கிடைத்தால், அதை எல்லா படத்திலும் வைப்போம். எதற்கு தியேட்டரில் மக்கள் கைதட்டுகிறார்களோ அதை நோக்கி சினிமாவின் பார்வை திரும்பும். இன்று ஈழ விடுதலை நோக்கி தமிழ் சினிமாவின் பார்வை திரும்பி உள்ளது.

இப்போது வெடி என்ற படம் வெளியாகி இருக்கிறது. விஷால் அதில் நடித்திருக்கிறார். அது சராசரியான மசாலா படம் தான். அந்த படம் பற்றி உங்களுக்கு பல விமர்சனங்கள் இருந்தாலும், அதில் ஹீரோ விஷால், என் பெயர் பிரபாகரன், எனக்கு பயம்ன்னா என்னனு தெரியாது என்ற வசனத்தை பேசும் போது, தியேட்டர் இடிந்து போகிற மாதிரி கைத்தட்டல் கிடைத்திருக்கிறது.

அதேபோல சூர்யாவின் 7ஆம் அறிவு படத்தில் ஈழ விடுதலை சம்பந்தமான பல வசனங்கள் இடம் பெற்றிருக்கிறது. அந்த வசனங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. இதுதான் தமிழர்களின் உணர்வு.

எல்லாரும் வீதியில் இறங்கி போராடும் நிலைமை இல்லை. அதற்கு அவர்களுடைய சூழல், குடும்ப சூழல் என பல பிரச்சனைகள் இருக்கிறது. எல்லாரும் பேராட வீதிக்கு வரவில்லை என்பதற்காக தமிழர்களுக்கு உணர்வு இல்லை என்று அர்த்தமாகிவிடாது. எனவே ஈழ விடுதலைக்கு மாணவர்கள் மத்தியிலும், இளைஞர்கள் மத்தியிலும் மிகப்பெரிய ஆதரவு திரண்டு வருகிறது. எனவே ஈழ விடுதலை பற்றி மேலும் பல படங்கள் வெளிவரும்'.

சத்யராஜின் இந்தச் சொற்கள் வெளிப்படுத்தும் துயரம் என்னவென்றால், தமிழ் வெகுமக்களின் அவமானகரமான ஒரு மனோநிலையை அவர்களது புத்திசாலித்தனத்துக்கு எடுத்துக்காட்டாக அவர் முன்வைப்பது தான்.

இம்மாதிரியிலான சாதுரியமான திரைப்படங்கள் வருவதால், இத்தகைய கைதட்டல்களால், தெருவுக்கு வராத. மக்கள் சக்தியாகத் திரளாத வெறும் மனவுணர்வுகளால் எவருக்குத்தான் என்ன இலாபம்? தமிழகத்தில் இந்த உணர்வுதானே தி.மு.க, அ.தி.மு.க அரசியலாகப் பல்லாண்டுகளாக இருக்கிறது? முள்ளிவாய்க் கால் பேரழிவின் போதும் இதுதானே இருந்தது?

ஒடுக்கப்பட்ட மனிதருக்கு இதனால் ஒரு பயனும் இல்லை. சினிமா தயாரிப்பாளன் கல்லா கட்டுவது தவிர இறுதியில் எதுவும் நடக்கப் போவதில்லை. விஷாலும் பிரபு தேவாவும் முருகதாசும் சூர்யாவும் எமது அர சியல் கொந்தளிப்புகளுக்கு ஆறுதலாக எஞ்சு வார்கள். இவ்வாறு உருவாகும் ரசிக மன நிலை அபத்தம் என்கிறேன் நான்.

ஏழாம் அறிவு திரைக்கதையமைப்பைக் கொஞ்சம் பார்ப்போம்.அதனோடு தமிழர் பெருமிதம் இங்கு, அதனது உணர்ச்சிவசமான வசனங்களுடன் இந்தத் திரைக்கதையில் தர்க்க பூர்வமாக எங்கு பொருந்துகிறது எனவும் பார்ப்போம்.

ஏழாம் அறிவு திரைக்கதை இந்திய நாட் டின் பகுதியாக இருக்கிற தமிழகத் தமிழன் ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்டிருக் கிறது. திட்டவட்டமாகத் திரைக்கதை எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் (ஈழத் தமிழர் பேரழிவிற்கு ஆயுதமும் அணுசரனை யும் செய்மதியுதவியும் வழங்கியதுடன், இனக் கொலையை மௌனமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்த) இந்திய இறையாண்மை, இந்திய் அரசியலமைப்பு போன்றவற்றுடன் கதாநாயகனான திரைத்தமிழன் முரண்படு வதாகக் காண்பிக்கவில்லை.

கதாநாயகனான தமிழனுக்கும் இந்திய அரசியல் மற்றும் சமூக அமைப்புக்கும் எந்த அடிப்படைமுரணும் இல்லை

இங்கு வெளிப்படையாகத் தமிழனுடன் முரண்படுபவன், இந்திய எதிரியாக இருக்கிற சீனன். வெளிப்படையான நேரடி வசனங் களின் வழி மலேசியாவில் தமிழனை அடி த்தவன், இலங்கைளில் தமிழனை அடித்த வனன். தமிழகத்திலும் தமிழனை அடிப்பவன் சீனன்தான். அவனை உலகின் எந்த மூலை யிலும் இல்லாமல் அழிக்க வேண்டும் என நினைப்பவன் இன்றைய சீன எதிர்ப்புக் கொண்ட இந்தியத் தமிழன்.

தொற்றுநோய்க்கிருமிகள் தமிழகத்தின் பிரச்சினை மட்டுமல்ல, அது இந்தியா முழுக் கப் பரவி இருப்பதாக திரைக்கதையினுள் வரும் இந்திய மொழிகளின் தொலைக்காட்சி வரிசைகள் அறிவிக்கின்றன. திரைக்கதையில் பிரச்சினை சீனாவுக்கும் இந்தியக் குடிமகனான தமிழனுக்கும் உள்ளதுதானேயொழிய, தமி ழினப் பெருமிதமும் அடையாளமும் கொண்ட கதாநாயகனுக்கும் சீனாவுக்கும் உரியது இல்லை. தமிழினப் பெருமிதம் என்பது இங்கு கைதட்டலுக்காக இட்டுக் கட்டப்பட்ட வெகு ஜன தமிழ்சினிமா மரபுத்தந்திரம்.

இணையங்களில் ஏழு நாடுகள் சேர்ந்து செய்த துரோகம் எனும் வசனம் இந்திய அரசை எதிர்ப்பதாகவும் அது முருகதாசின் வீரம் அல்லது விவேகம் அல்லது தமிழீழ ஓர்மை எனவும் சொல்லப்படுகிறது. சீனா குறித்த நேரடியிலான வசனங்களுடன் ஒப் பிட, ஏழு நாடுகளின் துரோகம் குறித்த வசனம் இந்தியா உட்பட மற்ற ஆறு நாடுகளோடு சேர்ந்து எந்தவிதமான நேரடியிலான குறிப் பிடலையும் கொண்டிருக்கவில்லை. இதை நீங்கள் எப்படியும் வியாக்யானப்படுத்திக் கொள்ளலாம்.திரைக்கதையின் தர்க்கத்தினுள் துலக்கமாக இருக்கிற சீன எதிர்ப்பின் பின் னணியில், இந்த வசனத்திற்கு வெளிப்படை யான குறிப்பான எந்த அர்த்தமும் திரைக் கதையினுள் இல்லை.

இந்த வசனம் நிச்சயமாகவே இலங்கை இந்திய அரசுகளுக்கு எதிரானது என முருக தாஸ் கருதியிருப்பாரானால் ஒரு படைப்பாளி யாக வெளிப்படையாக இலங்கை அரசு குறித்து முருகதாஸ் பேசியிருப்பார். இந்த வகையில்தான் முருகதாஸ் கடப்பாடுடைய இயக்குனர் இல்லை என்று நான் சொல் கிறேன்.

இந்த இடத்தில் ஒரு சமீபத் தமிழ்த்திரைப் பட அனுபவ எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்த செங்கடல் திரைப்படத்தினை ஆவ

ணப்பட இயக்குனரான லீனா மணிமேகலை எடுத்திருக்கிறார். தமிழக அரசு, இந்திய அரசு , இலங்கை அரசு,திமுக,அதிமுக, தமிழகத் தமிழ்தேசிய அரசியல் குறித்து என விமர்ச னங்கள் கொண்ட அப்படம் இந்தியத் தணிக் கைக் குழவினரால் சான்றிதழ் தராது நிரா கரிக்கப்படுகிறது. படத்தில் எந்தவிதமான வெட்டுக்களையும் ஒப்பாது மறுமதீப்பீட்டுக் குழுவுக்குப் படத்தை அனுப்பி தனது அரசி யல் செய்தி முழுமையாக வரப் போராடுகிறார் லீனா மணிமேகலை பிற்பாடு வெட்டுக்கள் இல்லாது தணிக்கைச் சான்றிதழ் பெறுகிறார். இந்தியாவில் நடைபெறும் உலகத் திரைப் படவிழாவில் இந்தியன் பனோரமாவில் திரை யிடப்படுகிற ஒரேயொரு தமிழப்படமாகவும் அது தேர்வு பெறுகிறது.

லீனா மணிமேகலையின் திரைப்படம் நான் நம்புகிற அரசியல் சார்புகளை கொண் டிருக்காது போகலாம். அது எனக்கு முழு மையாகத் தெரியாது. ஒரு கடப்பாடுள்ள திரைப்பட இயக்குனராக அவரது போராட் டமும், தனது படைப்பின் செய்தியின் மீதிருக் கிற அவரது பெருமிதமும் ஒரு படைப்பாளிக்கு முக்கியமானது என நான் கருதுகிறேன்.

இந்த நிலைமையில்தான் ஏழாம் அறிவுப் பிரச்சினை தமிழகத்தில் ஒரு விவாதமாக ஆகி றது. இயக்குனர் சசிக்குமாரின் ஆனந்தவி கடன் நேர்முகம் வெளியான பிறகு ஏழாம் அறிவு திரைப்படத் தயாரிப்பளர் உதயநிதி ஸ்டாலின் இது குறித்து வாய்திறக்கிறார். அத னையும் புத்திசாலித்தனமான சொற்களில் அவர் முன்வைக்கிறார்.

உதயநிதியின் கூற்றுக்கு முன்பாக இயக் குனர் சசிக்குமார் சொன்னதைக் கேளுங்கள்:

“ஈழத்து சோகங்களை நாசூக்காச் சொல்லி இருக்கேன், இலைமறை காயா விளக்கி இருக் கேன்னு சொல்லி, தூண்டில் வீச நான் விரும் பலை. இப்பவும் போராளி படத்துக்கான எப்.எம்.எஸ். உரிமையை இலங்கைக்குக் கொடுக்கக் கூடாதுங்கிறதுல நான் உறுதியா இருக்கேன். ஒரு தயாரிப்பாளரா இந்த முடிவு என்னைப் பாதிக்கும்தான்.ஆனால், கண்ணீ ரும் கதறலுமா நம்ம சொந்தங்கள் அல்லாடித் தவிக்கிற அந்த மண்ணில் படம் ஓட்டிக்காட்ட நான் விரும்பலை......உலகத்தையே உலுக்கிய துக்கத்துக்கும் நாம படம் ஓட்டிக்கிட்டு இருக் கிறது நியாயமா படலை. அங்கே மிச்ச சொச் சமா இருக்கிற தமிழர்களும் படம் பார்க்கிற மனநிலையில் இல்லை.

சுற்றுலாவும் சினிமாவும்தான் இலங்கை யோட பொருளாதார ஆதரம் தொப்புள்கொடி உறவுனு துடிக்கிற நாம் எதுக்காக இலங்கைக்கு எப்.எம்.எஸ். உரிமை கொடுக்கணும்? எவ் வளவு லாபத்தை இழந்தாலும் இனிநான் எடுக்கப்போற எந்தப் படத்துக்குமே எப். எம்.எஸ். உரிமையை இலங்கைக்குக் கொடுக் கப்போறது இல்லை. நமக்கும் இதில் இழப்பு இருக்கத்தான் செய்யும். என்ன பண்றது? உயி ரையும் உயிரா நெனச்ச மண்ணையும் இழந்த வங்களுக்காக வருமானத்தை இழக்குறது தவறே இல்லை!”

உதயநிதி ஸ்டாலினைப் போல மிகப் பெரும் பொருள்வளமோ அல்லது அரசியல் செல்வாக்கோ அல்லது முக்கியமான அரசியல் கட்சிச் சார்போ கொண்டவர் இல்லை சசிக் குமார். சின்ன பட்ஜெட் படங்களை எடுக்கிற வர் சசிக்குமார். அவர் தனது கூற்றில் இரண்டு விடயங்களை வலியுறுத்ததுகிறார். ஈழத்து சோகங்களை நாசூக்காகச் சொல்லி யிருக்கி றேன், இலைமறை காயாகச் சொல்லியிருக்கி றேன். எனத் தூண்டில் போடுகிறவர்களை அவர் கடுமையாக விமர்சிக்கிறார். சீனாவை விளாசித்தள்ளுகிற முருகதாஸ் இந்தியாவையும் இலங்கையும் நாசூக்காகவும் இலைமறை காயாகவும்தான் விளாசுகிறார்.

அது போகட்டும், ஒரு சின்ன பட்ஜெட் தயாரிப்பாளிடம் இருக்கிற, இலாபத்தைத்

துச்சமென மதிக்கிற, இலங்கைக்குப் படத்தை அனுப்பமாட்டேன் எனச் சொல்கிற உணர்வு திராவிட இயக்கத் தமிழ்ப் பாரம்பர்யத்தைச் சேர்ந்த உதயநிதி ஸ்டாலினுக்கு ஏன் வர வில்லை? இந்தக் காரணங்களால்தான் இயக் குனர் தங்கர்பச்சான், உதயநிதி ஸ்டாலினை உதாரணத் தயாரிப்பாளராகப் போற்றிப் புகழ் வதை ஒப்ப முடியவில்லை.

சசிக்குமார் கருத்தையடுத்து, இலங்கை அரசினால் தான் தயாரித்த ஏழாம் அறிவுக்கு வெட்டு விழுந்தது குறித்துக் கருத்துத் தெரி விக்கும்போது உதயநிதி ஸ்டாலினின் தயாரிப் பாளர்கள் எல்லோரும் கூடி ஒரு முடிவு செய் தால், தான் அதற்குக் கட்டுப்படுவேன் என் கிறார். தயாரிப்பாளர் சங்கப் பொருளாளர். முன்னாள் மதிமுகப் பிரமுகர் கலைப்புலி தாணு, இப்பிரச்சினையில் தயாரிப்பாளர் சங் கப் பொதுக்குழு கூடித்தான் முடிவு செய்ய வேண்டும் எனகிறார்.

பெயர் சொல்ல விரும்பாத தயாரிப்பாளர் ஒருவர்,"ஒரு படத்துக்கு இலங்கையில் பத்து இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது.100 படங்களுக்கு ஆண்டுக்கு 10 கோடி ரூபா வருமானம் கிடைக்கிறது.இது மிகப்பெரும் தொகை இதனை இழப்பதென்பது பெரும் நஷ்டமாக இருக்கும்." இந்தச் சிக்கலான பிரச்சினையை புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என்கிறார்.(டெக்கான் ஹெரால்ட் நேர்முகங்கள்: அன்னபூர்ணா சுப்ரமணியம்: 7 நவம்பர் 2011)

சசிக்குமாருடையதும், லீனா மணி மேகலையினதும் உதாரணங்கள் இலங்கைப் பிரச்சினையோடு தொடர்புடைய மிகச் சமீபத் திய கடப்பாடு கொண்ட திரைக் கலைஞர் களின் நடத்தைக்கான உதாரணங்கள்.

தமிழக சினிமாத் தயாரிப்பாளர்கள், நடிகர்களின் பொதுக்குழுத் தீர்மானங்களின் இலட் சணங்களை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அசின் இலங் கைக்குப் போனது, மகிந்தவின் பாரியாருடன் அவர் வடகிழக்குப் போனது,தமிழக சினி மாவுக்கே அவர் சவால் விட்டது, பிற்பாடு இளைய தளபதி விஜயோடு காவலனில் நடித் தது, பிற்பாடு சரத்குமார் அடித்த பல்டி, இலங்கையில் விழா நடத்திய இந்தி சினிமாக் காரர்களின் இந்தித் திரைப்படங்களைத் தமி ழகத்தில் திரையிட விடமாட்டோம். என சூளு ரைத்துவிட்டுத் தம்பி சூர்யாவுக்காக ராம் கோபால்வர்மாவின் ரத்தசரித்ராவை இயக்கு னர் சீமான் தமிழகத்தில் அனுமதித்தது என தமிழக சினிமா சார்ந்தவர்களின் குத்துக் கரணங்கள் ஈழத்தமிழ் மக்களின்பாடுளையே அவமானத்திற்கு உள்ளாக்கியது.

இந்தப் போக்கினை விமர்சனமற்றுக் கொண்டாடுவது என்பதும், அவர்களுக்கு ஈழத்தமிழர்கள் சார்பில் நன்றி தெரிவிப்பது என்பதும் அபத்தமென்றுதான் நான் நினைக் கிறேன்.

தென் ஆப்ரிக்க நிறவெறி அரசுக்கு எதி ராக உலகெங்கிலும் எழுந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தவரின் எழுச்சியைப் போன்ற எழுச்சியைத்தான் இலங் கைக்கு எதிராகத் தமிழக அரசியல்வாதிகளும் சினிமா சார்ந்தவர்களும் வாயளவில் பேசு கிறார்கள். திரைப்படத்திலும் நாசூக்காக, இலை மறை காயாக வசனங்களையும் வைக்கி றார்கள். நடைமுறையில் இலாபம் மட்டுமே பார்க்கிறார்கள். சரக்கு நன்றாக விற்கிற புக லிடம், தமிழகம் போன்ற இடங்களில் சரக்கை வைப்பதால் வரும் அறுவடை நல்லது. மற்ற இடங்களில் கொஞ்சம் சரக்கை எடுத்துவிட்டு, மீதி சரக்கை இலாபத்திற்கு விற்றால் போதும். தமிழனின் பெருமிதம் எனும் திரைப்பொய் இங்கு திரைப்பட இலாபத்தின் கீழ் சிங்களப் பேரினவாத அரசினால் மிதிபடுகிறது.

ஏழாம் அறிவு திரைப்படத்தில் ஏழு நாடு களின் துரோகம் தவிர தமிழினத்தின் பாடுகள் பேசப்படும் இடம் இரண்டு. ஒன்று சுருதி ஹாஸன் III(IIA) வளாகக் கூட்டத்தில் பேசும் இடம் பிறிதொன்று படத்தின் இறுதியில்

சூர்யா,தொலைக் காட்சியில் நேர்முகமாகப் பேசும் இடம். அந்தக் காட்சியில் காமெரா கொஞ்சம் வலப்பக்கமாகத் திரும்பி, தரையில் உணர்ச்சிவசமாக அதைக் கேட்டுக் கொண்டிருக்கிற இயக்குனர் முருகதாசையும் காண்பித்துவிட்டு, மறுபடி சூர்யாவிடம் வருகிறது.

இந்த இரண்டு இடங்களிலும் தமிழ் மொழி அடையாளம் என்பதோடு தமிழனின் வீழச்சிக்கான காரணமாகச் சொல்லப்படும் பிற காரணங்களும், பண்பாடும் வளர்ச்சியும் குறித்த படு பிற்போக்கான பார்ப்பனீயக் கருத்தாக்கங்களாகும். தமிழக இளைஞர்கள் வெளிநாடு போகக்காரணம் ஊழலும் இட ஒதுக்கீடும் என்று எதிரெதிரான இரண்டையும் சமப்படுத்திப் பேசுவது படுபோக்கிரித்தனமாகும். அதுபோலவே சாணம் மெழுகுவது விஞ்ஞானம் என்பதும், பிறிதொரு சந்தர்ப்பத்தில் கிரக சஞ்சாரங்கள் குறித்துப் பேசுவது விஞ்ஞானம் என்பதும் இந்துத்துவ விஞ்ஞானம் எனும் கருத்தாக்கத்தின் நீட்சியாகும். தமிழனின் வீழ்ச்சிக்குக் காரணமாக மத மாற்றத்தையும் இனமாற்றத்தையும் முன்வைப்பது, பிற மத-பிற இனத் துஷேசத்தை தமிழகச் சூழலில் முன்வைக்கும் பிஜேபி வகை பாசிசக் கண்ணோட்டமாகும். இவையனைத்தும் தமிழர் பண்பாடு என அகண்ட தமிழ் அடையாளத்தின் கீழ் (Pan tamil identity) முருகதாஸ் நிறுவ முயல்வதைப் பகுத்தறிவும் சாதிய மறுப்பும் கொண்ட எந்தத் தமிழனாலும் ஏற்க முடியாதவையாகும். அதனால்தான் ஏழாம் அறிவு படத்தினை பெரியார் திராவிட இயக்கத் தலைவரும், ஈழத் தமிழ் மக்களது விடுதலைக்கு அயராது செயல்படுபவருமான கொளத்தூர் மணி நிராகரிக்கிறார்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல வேண்டும். முருகதாசின் கஜினி படத்தை இந்தியில் நடித்துத் தயாரித்த அமீர்கானும், அதனோடு அசினோடு இலங்கை சென்றது மட்டுமல்லாது, அமிதாப்பச்சன் புறக்கணித்த கொழும்பு இந்தியத் திரைப்பட விழாவுக்கு அவருக்கு மாற்றாகச் சென்ற இலங்கைக் காதலன் சல்மான் கானும், ஸ்ருதிஹாசனே கதாநாயகியாக நடிக்க, ஏழாம் அறிவை இந்தியில் தாம் தயாரிக்கப் போட்டி போடுவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஏழாம் அறிவு படத்தின் ஆரம்பத்தில் வருகிற 20 நிமிட போதிதர்மன் பெருமிதமும் நிச்சயம் இந்திய அரசுடன் முரணற்ற இந்தியத் தமிழனின் பெருமிதமாகவே இருக்கும்.அல்லது இட ஒதுக்கீட்டு எதிர்ப்பையும், இந்துத்துவ விஞ்ஞான மேன்மையையும் வலியுறுத்தும், பார்ப்பனனது மூன்றாவது மகனாக போதிதர்மன் இந்தப் பதிப்பில் ஆகிய வாய்ப்பும் உண்டு ஆங்கில மோகத்திற்கெதிராக அப்போது இந்தி மொழி மேன்மையை வட இந்திய போதிதர்மன் பேசவும் செய்வான்.

மேற்கத்திய எதிர்ப்பும், சீன எதிர்ப்பும் கொண்ட, இந்துத்துவப் பூர்வீகத்தமிழனாக எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தாலும், சூர்யா பேசுகிற முருகாதசின் வசனங்கள் இந்தி ஏழாம் அறிவில் அப்போதும் கச்சிதமாக நிச்சயம் பொருந்தித்தான் போகும். ஏனெனில் முருகதாசின் வசனங்கள் வெளிப்படையான அர்த்தங்கள் கொண்டவை அல்ல. அவரவர்களின் நினைவுப் பரப்பிற்கும் ஞாபகங்களுக்கும் ஒப்ப அவரது நாசூக்கான, இலைமறை காயான வசனங்களை எவரும் தமக்குச் சாதகமாக வியாக்கியானப்படுத்திக் கொள்ளலாம். வியாக்கியானப்படுத்தாமலும் போகலாம். என்றாலும், முருகதாஸ் அடுத்து விஜய்யை வைத்து எடுக்கவிருக்கும் மாலை நேரத்து மழைக்காக லொக்கேஷன் பாக்க அவருடன் தூத்துக்குடி போயிருக்கிறார்.

சொல்ல மறந்துவிட்டேன். ஏழாம் அறிவில் தனியாகக் கடலிலும், கலர் கலர் பையனங்கள் மற்றும் இளம்பெண்களுடன் பாலத்தின் மீதும் ஆடுகிற ஸ்ருதிஹாசன், சூர்யா டூயட் பாடல்கள் அழகாகப் படம் பிடிக்கப் பட்டிருக்கிறது. அதில் அரசியல் பாசாங்குகள் எதுவும் இல்லை.

# இலங்கையின் தேசிய இயக்கம்



**மெடோனா அருள்ஞானசீலன்**

**வெளிவாரிப் பட்டப்படிப்பு (கலைப்பிரிவு)**

**இறுதியாண்டு, பேராதனைப் பல்கலைக்கழகம்**

16ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை ஆசியாவினை ஆக்கிரமித்து அந்நியர்கள் ஆட்சி செய்தனர். இலங்கை, இந்தியா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகளை ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் கைப்பற்றி தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தனர். அந்நியர் ஆட்சியினை எதிர்த்து அரசியல் இயக்கங்கள் அந்நாடுகளில் எழுந்தன.



காலனித்துவ ஆட்சிக்கு எதிராக எழுந்த அரசியல் இயக்கங்களே தேசிய இயக்கங்கள் என அழைக்கப்படுகின்றன. தேசிய இயக்கங்களின் பெருவளர்ச்சியினை இந்தியா, பர்மா, சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் காணமுடிகிறது. இத் தேசிய இயக்கங்கள் உலக வரலாற்றில் முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

இலங்கையின் தேசிய இயக்கமான இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

இலங்கைத் தேசிய இயக்கத்தின் வரலாறு இலங்கை தேசிய காங்கிரஸின் வரலாறாகவே கொள்ளப்படுகின்றது. இலங்கைத் தேசிய காங்கிரஸினை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் சிறப்பாக நோக்கத்தக்கவர் சேர். பொன் அருணாசலம் ஆவார். இலங்கையில் தீவிரவாதிகள், மிதவாதிகள் என இரு சாரார் பிளவுபட்டு காணப்பட்டனர். அவர்களை இணைத்து ஒரு இயக்கத்தின் கீழ் சிரமங்களுக்கு மத்தியிலும் நிலைநிறுத்திய பெருமை சேர். பொன். அருணாசலம் அவர்களுக்கே ஆகும்.

இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராகவும் சேர். பொன். அருணாசலம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். ஏனைய நாடுகளில் இருந்த தேசிய இயக்கங்களில் காணப்பட்ட பண்புகள் இலங்கைத் தேசிய காங்கிரஸிலும் இருந்தன என முற்று முழுதாக கூறிவிட முடியாது.

குறிப்பாக இந்தியாவில் தீவிரத் தன்மை, அஹிம்சை வழிப் போராட்டம், வெகுஜனத் தன்மை என்பன தேசிய இயக்கத்தில் காணப்பட்டன. அத்துடன் இந்தியாவில் காந்தி தலைமையிலான ஒரு தீவிர வெகுஜனப் போராட்டம் அஹிம்சை வழியிலும் அதேவேளை, ஒரு தீவிர ஆயுதப் போராட்டம் சுபாஷ் சந்திர போஸ் தலைமையிலும் இடம்பெற்றது.

இலங்கையில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலகட்டத்தில் ஆயுதப் போராட்டமானது 1818ம் ஆண்டில் வீரபுரான் அப்பு தலைமையிலும் 1848ஆம் ஆண்டிலும் இடம்பெற்றிருந்தன. அதற்குப் பின்னர் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. ஏ.ஈ. குணசிங்க போன்ற தீவிரத் தன்மை வாய்ந்தவர்கள் மக்களை இணைத்து தீவிரத்துடன் கூடிய வெகுஜனப் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அவர்களால் மிதவாதிகளின் தலைமையினை

மீறி பெரியளவில் தீவிர போராட்டத்தினை வழிநடத்திச் செல்ல முடியவில்லை.

இலங்கைத் தேசிய இயக்கத்திற்கு முன்னோடி இயக்கங்களாக விளங்கியவை இலங்கை மதமறுமலர்ச்சி இயக்கங்களாகும். தேசிய இயக்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாகவும் இவையே விளங்கின. தேசிய இயக்கத்தின் வரலாற்றினை அறிவதற்கு மதமறுமலர்ச்சி இயக்கங்களைப் பற்றி நோக்குவது அவசியமானதாகும்.

## மதமறுமலர்ச்சி இயக்கங்கள்

மதமறுமலர்ச்சி இயக்கங்கள் 1870ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தன. அந்நியர் ஆட்சியின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கம் தழைத்து ஓங்க ஆரம்பித்தது. அதற்கு எதிரான சுதேசிகளின் வளர்ச்சியாகவே இம்மத மறு மலர்ச்சி இயக்கங்கள் விளங்கின. சமயம், கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் இனங்களின் தனித்துவ தன்மையைப் பேணுவதே இவ் இயக்கங்களின் நோக்கமாக இருந்தது.

சிங்கள மக்கள் மத்தியில் ஆரம்பகாலத்தில் மிகுந்துவத்தை குணானந்த தேரர் முன்னிலை வகித்தார். இவர் கிறிஸ்தவ மத முக்கியஸ்தர்களுடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டார். ‘கிறிஸ்தவ மதச் சிந்தனைகளைவிட பௌத்தமத சிந்தனைகளும் கோட்பாடுகளும் சிறந்தது’ என்பதனை நிரூபிப்பதே இவரின் இலக்காக இருந்தது. கிறிஸ்தவ ஆங்கில பாடசாலைகளில் பௌத்த மாணவர்கள் கல்வி கற்பதைத் தவிர்க்கும் வகையில் சிங்கள பௌத்த பாடசாலைகளை உருவாக்குவதிலும் அக்கறை செலுத்தினார்.

குணானந்த தேரருக்குப் பின்னர் அமெரிக்கரான ஒல்கோட் என்பவர் பௌத்தமத மறுமலர்ச்சி இயக்கத்தினை வளர்த்துச் சென்றார். பிரம்மஞான சங்கத்தினை உருவாக்கினார். பௌத்த மத இயக்கத்திற்கு நிறுவன வடிவினைக் கொடுத்தார். பௌத்த கொடி, சின்னம் என்பவற்றிற்கு முக்கியத்துவத்தினைக் கொடுத்தார். ‘சரசவி சந்தாஸா’ என்ற சிங்களப் பத்திரிகையினையும் ‘பௌத்தம்’ என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் நடாத்தினார். அதன் மூலம் ஒல்கோட் பௌத்தமதச் சிந்தனையை வெளியில் கொண்டு வந்தார்.

பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றவர் அநகாரிக தர்மபால ஆவார். இவர் மத மட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தை அரசியற் தளத்திற்கு எடுத்துச் சென்றார். மத சுதந்திரம் வேண்டுமாயின் அரசியல் சுதந்திரம் வேண்டும் என அறைகூவல் விடுத்தார். அவர் மகாபோதி சங்கத்தினை உருவாக்கியதுடன் பௌத்த மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக நாலந்த கல்லூரியை ஆரம்பித்தார். அநகாரிக தர்மபால ‘சிங்கள பௌத்தம்’ என்ற பெயரில் பத்திரிகையை நடாத்தி பௌத்த சிந்தனைகளை பொதுசனங்களிடையேயும் பரப்பினார்.

பௌத்த மறுமலர்ச்சிக்காக ஒரு சாரார் போராடிக் கொண்டு இருக்கும்போது மற்றொரு சாராரால் இந்துமத மலர்ச்சிக்கான போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதனை முன்னெடுத்துச் சென்றவர்களில் ஆறுமுக நாவலர் முக்கிய இடத்தைப் பெறுகின்றார். இந்து மக்கள் மத்தியில் மதமறுமலர்ச்சி இயக் கத்தினை தலைமை ஏற்று நடத்தியவர் இவரே யாவார். கிறிஸ்தவ ஆங்கிலப் பாடசாலை களுக்கு எதிராக இந்துப் பாடசாலைகளை உருவாக்கினார். இந்து மதத்தினர் மேன்மை பெறுவதற்காக நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டார். நாவலரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வழிவந்தவர்கள் இந்துப் பண்பாட்டின் அடிப்படையில் கற்பிக்கக் கூடிய பாடசாலைகளை உருவாக்கினர்.

முஸ்லிம் மக்கள் மத்தியிலும் கிறிஸ்தவ மதப் பரவலுக்கு எதிரான போராட்டங்கள்

இடம்பெற்றன. அறிஞர் சித்திலெப்பை அதற்குத் தலைமைப் பொறுப்பினை ஏற்று வழி நடத்தினார். இவருடைய முயற்சியினால் இஸ்லாம் மதப் பண்பாட்டின் அடிப்படையில் ஆங்கிலக் கல்வியினைக் கற்கும் வகையில் சாஹிராக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

இம் மத மறுமலர்ச்சி செயற்பாடுகள் பரஸ்பர இணைப்புக்களின் அடிப்படையில் நடைபெற்றவையாக இருக்கவில்லை. மாறாக தனித் தனியான இயக்கங்களாகச் செயற்படும் நிலையே இருந்தது. மத்தியதர வர்க்கமும், கீழ் மத்திய தர வர்க்கமும் இவற்றிற்கான சமூக அடித்தளங்களை ஏற்படுத்திக் கொடுத்தன.

சமயங்களையும் இனத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு கூட்டு அடையாளத்தை ஏற்படுத்துவதற்காக சாதாரண மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் இம்மத மறுமலர்ச்சி இயக்கங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை பொருந்திய மக்கள் இயக்கமாக செயற்பட்டன. கலாசார தேசிய வாதத்தை இவை ஊக்குவித்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் பாதிப்பு ஏற்படுத்தும் அளவிற்கு மக்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டனர். இதனை அரசியல் தேசியமாக உயர்த்துமளவிற்கு ஐக்கியத்தை உருவாக்குவதற்கு ஆற்றல் கொண்டவர்களாக இவர்கள் இருக்கவில்லை. இதனால் உணர்வு ஊட்டப்பட்ட மக்கள் ஏனைய இனங்களுடன் இனவாத மோதல்களுக்குச் சென்றனர். இந்நிலை மத மறுமலர்ச்சி இயக்கங்களை வீழ்ச்சியடையச் செய்தது.

### மது ஒழிப்பு இயக்கம் அல்லது கலால் இயக்கம்

மதமறுமலர்ச்சி இயக்கத்தின் வீழ்ச்சியின் பின்னர், மது ஒழிப்பு இயக்கம் என்கின்ற கலால் இயக்கம் தேசிய தலைவர்களால் உருவாக்கப்பட்டது. ஆங்கிலேய நிர்வாகத்தில், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கோடு மதுபானச் சாலைகள் திறக்கப்பட்டன. பௌத்த மத தலைவர்கள் மதுக் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தனர். தேசிய தலைவர்களில் முக்கியமானவராகக் கருதப்பட்ட டி.எஸ். சேனநாயக்கவும் இம் மது ஒழிப்பு இயக்கத்தில் பங்குபற்றினார். அதன் விளைவாக பல அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

எப்.ஆர். சேனநாயக்க, எட்மண்ட் ஹேமவிதாரண, டி.பி. ஜெயதிலக போன்றவர்களும் மது ஒழிப்பு இயக்கத்தில் முக்கியமானவர்களாக விளங்கினர். ஒரு சமயம் சார்ந்த அரசியல் இயக்கமாக இருந்தாலும், பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டமையினால் ஒரு அரசியல் இயக்கமாகவும் காணப்பட்டது. கரையோரச் சிங்களத் தலைவர்களே இந்த இயக்கத்தில் முன்னின்று செயற்பட்டனர். மதத் தொழிலின் மூலம் செல்வந்தர்களாக வந்தவர்களும் இவ் இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் கிராமப் புறங்களிலும் இவ் இயக்கம் பரவத் தொடங்கியதுடன் ஒரு வெகுஜன இயக்கமாகவும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. டி.எஸ். சேனநாயக்க உட்பட கரையோரச் சிங்களத் தலைவர்களும் அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்ளும் வாய்ப்பினை கலால் இயக்கம் உருவாக்கிக் கொடுத்தது.

### இலங்கை தேசிய காங்கிரஸ்

மதமறுமலர்ச்சி இயக்கம், கலால் இயக்கம் எனப் படிப்படியான இயக்கங்களாக வளர்ச்சியடைந்த இயக்கங்கள் அடுத்த தளத்திற்குச் சென்றன. 1918ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை அரசியல் சீர்திருத்தச் சங்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

இலங்கை தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப் பட்ட போது பல தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன. அவற்றை அடையும் நோக்கோடு செயலாற்றத் தொடங்கியது. அரசியல் சீர்திருத் தங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொதுமக்களின் கருத்துக்களை ஒழுங்கு படுத் தல், காலத்திற்குக் காலம் ஒன்றுகூடி தீர் மானங்களை நிறைவேற்றுதல், அவற்றை முன் னெடுத்துச் செல்லுதல், அவற்றிற்கான நிரந்தர ஒழுங்கமைப்பினை உருவாக்குதல் என்பன மேற்படி அரசியல் சீர்திருத்த மாநாட்டில் தீர் மானங்களாக எடுக்கப்பட்டன. இத்தீர்மானங் களின் அடிப்படையிலேயே இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப் பட்டது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ் இந் நோக் கங்களை அமைதியான வழிமுறைகளின் மூல மும், யாப்பு திருத்த விதிமுறைகளின் மூல மும், நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை மேற் கொள்வதன் மூலமும் அடைதல் வேண்டும் எனவும் அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராக சேர். பொன். அருணாசலம் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைத் தேசிய காங்கிரஸின் முத லாவது மாநாட்டில் பிரித்தானிய அரசியிடம் முன்வைப்பதற்காக தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. சட்டசபையில் 50 அங்கத்தவர்கள் இடம்பெறல் வேண்டும்.
2. அவர்களில் 4/5 பங்கினர் ஆண்க ளுக்கான வாக்குரிமையின் மூலமும், வரையறுக் கப்பட்ட பெண்களுக்கான வாக்குரிமையின் மூலமும் மற்றும் பிரதேசவாரிப் பிரதி நிதித்துவத்தின் மூலமும் தெரிவுசெய்யப்பட வேண்டும்.
3. மிகுதி 1/5 பங்கினர் சிறுபான்மை இனத்தவர்களிலிருந்து தேசாதிபதி யினால் நியமிக்கப்படல் வேண்டும்.
4. சபாநாயகரைத் தெரிவு செய்யும் அதி காரம் சட்டசபைக்கு வழங்கப்படல் வேண்டும்.
5. வரவு-செலவு திட்டம் தொடர்பான பூரண அதிகாரம் சட்டசபைக்கு வழங் கப்பட வேண்டும்.
6. சட்ட நிர்வாக சபை தேசாதிபதியை யும், உத்தியோகப் பற்றுள்ள உறுப்பி னர்களையும் உத்தியோகபற்றற்ற உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும்.
7. உறுப்பினர்களில் அரைவாசிக்கு குறையாதோர் சட்டசபையில் அங்கம் வகிக்கும் தேர்தல் மூலம் தெரிவு செய் யப்பட்ட உத்தியோகப்பற்றற்ற உறுப் பினர்களாக இருத்தல் வேண்டும்.
8. பாராளுமன்ற மரபுகளில் பயிற்சி பெற்ற ஒருவரே தேசாதிபதியாக நிய மிக்கப்படல் வேண்டும்.
9. நகரங்களிலும் கிராமங்களிலும் பிர தேச நிாவாகம் முழுமையாக மக்கள் பிரதிநிதிகளிடம் வழங்கப்படல் வேண்டும்.
10. அரசாங்க உயர் பதவிகளில் 50% - 75% வீதம் வரையிலான பதவிகள் இலங்கையருக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இவற்றைவிட தொழிலாளர் நிலையினை உயர்த்துதல், உள்ளூராட்சி அமைப்பினை விருத்தி செய்தல், வரிகளை விருத்தி செய்தல், இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தினை

நிறுவுதல், இலங்கையில் உணவு உற்பத்தியினை வளர்ச்சியடையச் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைத் தேசிய காங்கிரஸின் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்த அரசாங்கம் 1920 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி ஒரு அரச கட்டளையின் மூலம் யாப்புச் சீர்திருத்தம் ஒன்றை வெளியிட்டது. இச்சீர்திருத்தத்தில் தொடர்ந்தும் நியமன முறையின் மூலம் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதனை யாப்பு எற்றுக்கொண்டிருந்தது. இதனால் இலங்கைத் தேசிய காங்கிரஸ் விஷேட மாநாட்டைக் கூட்டி புதிய சீர்திருத்தத்தை பகிஷ்கரிப்பதாகத் தீர்மானித்தது.

ஆனால் புதிய சீர்திருத்தத்தினை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளும்படியும். அது நடைமுறையில் திருப்திப்படுத்தாவிட்டால், புதிய யாப்புச் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்வதாகவும் தேசாதிபதி மானிங் உறுதியாகக் கூறினார். இதன் அடிப்படையில் இப் புதிய அரசியல் சீர்திருத்தம் இலங்கைத் தேசிய காங்கிரஸினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் யாப்புச் சீர்திருத்தமே 1921ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மானிங் அரசியல் சீர் திருத்தம் ஆகும்.

## இலங்கைத் தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுகள்

### முதலாவது பிளவு

இந்நிலையில் இலங்கைத் தேசிய காங்கிரஸில் குறுகிய காலத்தினுள் பிளவுகள் ஏற்பட்டன. 1921ஆம் ஆண்டு முதலாவது பிளவு ஏற்பட்டது. 1919ம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கியபோது தமிழர்கள் வட-கிழக்குப் பிரதேசங்களுக்கு மேலதிக ஆசனங்களையும், மேல்மாகாணத் தமிழர்களுக்கு ஒரு ஆசனத்தையும் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கைகளாக முன் வைக்கப்பட்டன.

இக்கோரிக்கைகள் சிங்களத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எழுத்துமூலம் உத்தரவாதமும் வழங்கப்பட்டது. ஜேம்ஸ் பீரிசும், ஈ.ஜே. சமரவிக்கிரமவும் தமிழர் களின் அமைப்பான யாழ்ப்பாணச் சங்கத் திற்கு இவ் உத்தரவாதத்தினை வழங்கினர்.

1921ஆம் ஆண்டு தேர்தல் வந்தபோது, மேல்மாகாணத்திற்குரிய 3 ஆசனங்களில் ஒரு ஆசனத்தில் தமிழ்த் தலைவர் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. முன்னைய ஒப்பந்தத்திற்கு இணங்க சிங்களத் தலைவர்கள் மறுத்தாலும், ஏ.ஈ. குணசிங்கவின் முயற்சியினால் தமிழ்த் தலைவர் போட்டியிடுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இதனடிப்படையில் அருணாசலம் வேட்பு மனுத்தாக்கல் செய்யச் சென்றார். ஆனால் அவர் செல்வதற்கு முன்னரே மூன்று ஆசனங்களுக்கும் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதனால் அருணாசலம் ஏமாற்றமும், கோபமும் அடைந்தார். சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டனர் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்விற்குப் பின்னர் சேர். பொன். அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பை 1921ன் நடுப்பகுதியில் உருவாக்கினார். இந்த அமைப்பினை உருவாக்கியதுடன் இலங்கைத் தமிழரின் இன அரசியலும் ஆரம்பித்துவிட்டது எனக் கூறலாம்.

1921ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறையினால், முன்னர் நிலவிய சமனிலைப் பிரதிநிதித்துவம் குழப்பமடைந்தது. 13 சிங்களப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட அதே வேளை 3 தமிழ்ப் பிரதிநிதிகளே தெரிவு

செய்யப்பட்டனர். இதனால் தமிழர்கள் சிங்களப் பிரதிநிதித்துவத்தில் ஒரு பங்கு தமிழர்களுக் குத் தரப்படல் வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்தனர்.

இது ஏற்கப்படாததினால் அரசியல் சீர் திருத்தத்தை நிராகரிப்பது என்ற தீர்மானத்தை தமிழர் மகாஜன சபை எடுத்திருந்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட இப்பிளவு சுயாட்சி, அரசியல் சீர்திருத்தம் என்ற இலக்குகளைப் பலவீனமடையச் செய் தன. இலங்கைத் தேசிய காங்கிரஸ் பழமை வாதப் பிரித்தானிய ஆட்சிக்கு ஆதரவாளர் களின் கைகளுக்கு மாறும் நிலையும் உரு வாகியது.

அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக பொது உடன்பாட்டை எட்டமுடியவில்லை. இலங் கைத் தேசிய காங்கிரஸ் தனிச் சிங்கள இயக்க மாக மாறியது. இதனைவிட அருணா சலத்தின் வெளியேற்றத்தினால் நடுநிலைமைவாதிகள் பலவீனமடைந்தனர். ஏ.ஈ. குணசிங்கா தலை மையிலான தீவிரவாதக் குழு தனிமைப்படுத் தப்பட்டது. இந்நிலை இலங்கைத் தேசிய காங் கிரஸினைப் போராட்ட தன்மையுடைய அமைப்பாக மாற்றுதல் வேண்டும் எனப் போராடி நின்றவர்களும் பலவீனமடைவதற்கு காரணமாகியது.

### இரண்டாவது பிளவு

இலங்கைத் தேசிய காங்கிரஸின் அடுத்த பிள வும் சிறிது காலத்தினுள் இடம்பெற்றது. 1922 ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுக ஊழியர் களால் பிரித்தானிய அரசிற்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இப்போராட்டத்தை திட்டமிட்டு நடாத்தியவர் தொழிற்சங்க தலைவரான ஏ.ஈ. குணசிங்கா ஆவார். இப்போராட்டத்தில் ஏற்பட்ட வெற் றியைத் தொடர்ந்து சமூகத்தில் கிடைத்த மதிப் பையும் கௌரவத்தையும் பயன்படுத்தி, இலங்கைத் தேசிய காங்கிரஸை ஒரு தீவிர தேசிய இயக்கமாக மாற்ற இவர் முயற்சித்தார். இதற்கு இலங்கைத் தேசிய காங்கிரஸின் பழ மைவாத தலைவர்களும் மிதவாத தலைவர் களும் ஒத்துழைக்கவில்லை.

இதனால் அதிருப்தியுற்ற ஏ.ஈ. குணசிங்கா 1922ஆம் ஆண்டு இலங்கைக் காங்கிரஸி லிருந்து வெளியேறி, இலங்கைத் தொழிற்சங் கத்தினை உருவாக்கினார். தொழிற்சங்கச் செல்வாக்கினை அடிப்படையாகக் கொண்டு 1928இல் தொழிற்கட்சி என்ற கட்சியையும் உருவாக்கினார்.

### மூன்றாவது பிளவு

1925ஆம் ஆண்டு இலங்கைத் தேசியக் காங் கிரஸில் மூன்றாவது பிளவு ஏற்பட்டது. பிரித் தானிய ஆட்சியின் கீழ் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட சமூக, பொருளாதார வாய்ப் புக்களை கரையோரச் சிங்கள மக்களின் நலன் களுக்கு இலங்கைத் தேசிய காங்கிரஸ் பயன் படுத்த முனைகிறது எனக் குற்றஞ்சாட்டி, கண் டியச் சிங்களத் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறி கண்டிய தேசிய அசெம்பிளி என்ற ஒரு அமைப்பினை உரு வாக்கினர். இவ் அமைப்புத் தனது மாநாட்டில் கண்டிய மாகாணங்களுக்கு தனியான சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தினை நிறைவேற்றியது.

இவ்வாறு இலங்கைத் தமிழர்கள், தீவிர வாதப் பிரிவினர், கண்டியச் சிங்களவர்கள் என்போர் வெளியேறிய பின்னர், இலங்கை தேசிய காங்கிரஸ் கரையோரச் சிங்கள உயர் குழாமினரின் ஒரு இயக்கமாகவே காணப் பட்டது.

1924ஆம் ஆண்டு மானிங் டிவைன்சயர் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப் பட்ட போதும் அதுவும் இலங்கைத் தேசிய காங் கிரஸை போதியளவு திருப்திப்படுத்த வில்லை. எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை தேசிய காங்கிரஸ் பங்களிப்புச் செய்

திருந்தது. அதேவேளை இதே ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிறை வேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் 25 வயதிற்கு மேற் பட்ட சகல ஆண்களுக்கும் வாக்குரிமை வழங்குமாறு கோரிக்கை விடுத்தது.

1926ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸின் மாநாட்டில் பொறுப்பாட்சியை பெற்றுக்கொள்ளுதல் உட்பட பின்வரும் விட யங்கள் தீர்மானிக்கப்பட்டன.

1. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிலிருந்து அமைச்சரவை தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அதுவே நிறைவேற்றுத்துறையாக இருத்தல் வேண்டும்.
2. உள்நாட்டு அலுவல்கள், நிதி, கல்வி, நீதி, விவசாயம், சிறுகைத்தொழில், பாரிய கைத்தொழில், போக்குவரத்து போன்ற துறைகளுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.
3. சட்டசபையின் மொத்த உறுப்பினர் களால் 4 - 5 பங்கினர் தொகுதிவாரி யாகத் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.
4. ஆண்களுக்கும், பெண்களுக்கும் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்குதல் வேண்டும்.

1919ஆம் ஆண்டு தொடக்கம் 1926 ஆம் ஆண்டுவரை இலங்கைத் தேசிய காங் கிரஸ் ஒரு உயர் குழாம் அமைப்பாகவே தொழிற்பட்டது. ஆனால் பொறுப்பாட்சிக் கோரிக்கையை முன்வைத்த பின்னர், உயர்குழாம் வகுப்புத் தன்மையிலிருந்து விடு பட்டு, பொதுமக்களும் பங்குபற்றக்கூடிய ஒரு மக்கள் இயக்கமாக மாறுவதற்கு முயற்சி செய்தது. இதன்படி நகரங்களிலும் கிராமங் களிலும் பொதுக்கூட்டங்களை நடாத்தி பொதுமக்களை அறிவூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இது குறிப் பிட்டளவு பொறுப்பாட்சியை இலங்கைக்கு வழங்கியமையினால், இலங்கைத் தேசிய காங்கிரஸின் கோரிக்கைகள் ஓரளவிற்காவது நிறைவேறியிருந்தது. இவ் யாப்பினை ஆரம் பத்தில் எதிர்த்தாலும் பின்னர் நிறைவேற்று வதிலும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் தனது பங்கினை வழங்கியிருந்தது.

டொனமூர் அரசாங்கத்தின் ஆரம்ப காலங் களில் மூன்று அரசாங்க காரியதரிசிகளினதும் குறுக்கீடுகள் அரசாங்க நிர்வாகத்தில் காணப் பட்டன. இதனால் மக்கள் பிரதிநிதிகள் செயற் படுவதில் பல தடைகள் ஏற்பட்டன. இலங்கை தேசிய காங்கிரஸ் இத்தடைகளுக்கு எதிராக தீவிரமாகக் குரல் கொடுத்தது. அரசியல் திட் டத்தின் காவல் நாய்கள் என மூன்று காரிய தரிசிகளையும் இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்கள் வர்ணித்திருந்தனர்.

1939ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகியது. 1942ஆம் ஆண்டு ஜப்பான், பிரித்தானிய ஆட்சியிலிருந்து மலே சியா, சிங்கப்பூர் என்பவற்றைக் கைப்பற்றிய தனால் போரைப் பொறுத்தவரை இலங்கை முக்கிய கேந்திர நிலையமாக மாறியது. இத னால் இலங்கையர்களின் உதவி முன்னரை விட பிரித்தானியாவிற்கு அதிகமாகத் தேவைப் பட்டது. இரண்டாவதாக இலங்கையில் இடது சாரி இயக்கம் வலிமையாக எழுச்சியுற்றது. போருக்கு எதிராகவும் செயற்பட்டது. இதன் வழியாக 1935ஆம் ஆண்டில் இலங்கையின் இடதுசாரி இயக்கமாக லங்கா சமசமாஜக் கட்சி உருவாக்கப்பட்டது. இதுவும் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியினைக் கொடுத்திருந்தது. மூன்றாவதாக இதே கால கட்டத்தில் இந்திய தேசிய இயக்கமும் அபரி விதமான வளர்ச்சியடைந்திருந்தது. அதன் தாக்கம் இலங்கையிலும் காணப்பட்டது.

மேற்கூறப்பட்ட மூன்றுவகை நெருக்கடிகள் காரணமாக பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு இலங்கை தொடர்பாக நெகிழ்ச்சித் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் மூன்று அரசாங்க காரியதரிசிகளும் தங்களது அதிகாரங்களை நடை முறையில் குறைத்துக் கொண்டதுடன் இலங்கை மக்களின் பிரதிநிதிகள் தங்களது அதிகாரங்களை நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இதன் அடிப்படையில் முதன் முதலாவதாக சேர். ஒலிவர் குணதிலக என்ற இலங்கையர் நிதிக் காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில்தான் இலங்கைத் தேசிய காங்கிரஸிற்குப் புது இரத்தம் பாய்ச்சப்பட்டது. பழைய தலைவர்கள் பதவி விலக புதியவர்கள் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இவர்கள் முன்னைய தலைவர்களைவிட சற்றுத் தீவிரத்துடன் செயற்பட்டனர். டொனமூர் அமைச்சரவையினூடாக உள்நாட்டுப் பொறுப்பாட்சிக் கோரிக்கையை முன்வைத்தனர். இப்புதிய தலைமையின் அழுத்தங்கள் காரணமாகத்தான் 1941லும், 1943லும் அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ளத் தயார் என இரண்டு பிரகடனங்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் வெளியிட்டனர். இரண்டாம் பிரகடனத்தின் பின்னர் டொனமூர் கால மந்திரிசபை ஒரு மாதிரி அரசியல் நகல் திட்டத்தையும் தயாரித்து பிரித்தானியாவிடம் ஒப்படைத்தது.

இப்புதிய தலைமைதான் 1945இல் இலங்கைத் தேசிய காங்கிரஸில் பூரண சுதந்திர கோரிக்கையையும் நிறைவேற்றியது. ஜே.ஆர். ஜெயவர்த்தனா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா போன்றவர்கள் இப்புதிய தலைமையில் முன்னணியில் நின்றனர். இவர்களுடைய முயற்சிகளே சோல்பரி அரசியல் யாப்பின் மூலம் பூரண பொறுப்பாட்சி வருவதற்கு காரணமாகியது.

1948ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததோடு இலங்கைத் தேசிய காங்கிரஸின் பிரதான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறின. இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானியா பின்னடைவுக்கு உள்ளாகியமை, காலனித்துவ நாடுகளுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கை இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்க வேண்டிய நிலை, இலங்கையில் இடது சாரிக் கட்சிகளின் வளர்ச்சி, இலங்கை தேசிய காங்கிரஸின் பூரண சுதந்திரக் கோரிக்கை என்பன இலங்கை சுதந்திரமடைவதற்கு காரணங்களாக விளங்கின.

சுதந்திரத்திற்கு முன்னரே சோல்பரி யாப்பு வழங்கிய பொறுப்பாட்சியில் அரசாங்கத்தை அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டபோது, இலங்கைத் தேசிய காங்கிரஸ் அதனுடன் இணைந்துகொண்டது. அதன் பிரதான உறுப்பினர்களான டி.எஸ். சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உட்பட முக்கிய உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தலைவராகவும் இலங்கையின் முதலாவது பிரதமராகவும் டி.எஸ். சேனநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

# கிழக்கு திமோர் : ஓர் அறிமுகம்



**ஜி. கிரேஷினி**

**இறுதி வருடம், பொருளியற்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்**

மோதல் என்பது மனித வாழ்க்கையில் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு விடயமாகும் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் முரண்பாட்டினை எதிர்கொள்கிறான் இம் முரண்பாடுகள் மோதலினை தோற்றுவிக்கின்றன. மோதல் என்பது தாம் பொருத்தம் இல்லாத (ஒவ்வாத) இலக்குகளில் நம்பிக்கை கொண்ட இரு குழுக்களுக்கிடையில் தோன்றுகின்ற ஒரு சூழல் ஆகும் என கிறிஸ்பர் குறிப்பிடு கிறார். உதாரணமாக ஆட்சியினை செலுத்து பவன் தனது அடிமைகளைக் கொண்டு தன் இலாபத்தினை அதிகரித்துக்கொள்ள விரும்புகின்றார் ஆனால் அடிமைகள் தம்மை ஆள்பவர்களிடம் இருந்து விடுதலை பெற விரும்புகின்றனர்,இவ் இரு குழுக்களுக்கிடையினதும் இலக்கு இங்கு வெவ்வேறானவை ஆகும். அவை ஒவ்வாதனவையாகவும் இருக்கின்றன. இம் மோதல் பல்வேறு கட்டங்களில் தோன்றுகின்றன அவை மனிதனுக்குள் தோன்றுகின்றன, மனிதர்களுக்கிடையிலும் தோன்றுகின்றன, குழுக்களுக்குள்ளும் தோன்றுகின்றன, குழுக்களுக்கிடையிலும் தோன்றுகின்றன, நாட்டுக்குள்ளும், நாடுகளுக்கிடையிலும் தோன்றுகின்றன.

அந்த வகையில் கிழக்கு திமோர் மோதலான ஆனது நாட்டுக்குளே தோன்றிய மோதல் ஆகும்.கிழக்கு திமோர் 21ம் நூற்றாண்டில் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்ட முதல் நாடு என்ற பெருமையினைக் கொண்ட நாடாகும். 2002ம் மே மாதம் 20ஆம் திகதி இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவு நாடுகளின் உதவியுடன் கிழக்குத் திமோர் புதிய நாடாக உருவாகியது.

திமோர் ஒரு சிறிய தீவாகும். கிழக்கு திமோர், திமோரின் ஒரு பகுதியின் கிழக்கு பகுதிக்குள் உள்ளடங்கியுள்ளது, இது ஆசியாவிற்கு தெற்கு பகுதிலும் அவுஸ்திரேலியாவிற்கு வடக்கு பகுதிலும், இந்தோனேசியாவின் கிழக்கு பகுதியின் முடிவிலும் அமைந்துள்ளது. இது 228 கி.மீ. எல்லையினைக் கொண்டுள்ளது. சீன தென் கடலுக்கும் இந்தியன் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் டில்லி.தெட்டு மற்றும் போர்த்துகீஸ் என்பன அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாகும். ஆனால் இன்று 30ற்கும் மேற்பட்ட மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.கிறிஸ்தவ மக்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது.திமொர் அல்லது திமுர் என்பது கிழக்கு என்ற பொருளுடைய மலேசிய மற்றும் இந்தோனேசிய மொழி பதத்தில் இருந்து தோன்றியதாகும்.பின்னர் போர்த்துக்கேயர் காலனித்துவ ஆட்சியின் கீழ் திமோர் என பெயர் மாற்றப்பட்டது. கிழக்கு திமோர் லெசுடே சனநாயக குடியரசு தென்கிழக்கு ஆசியாவில் திமோர் தீவின் கிழக்கு பகுதியிலும் அருகாமையிலுள்ள சிறு தீவுகளில் இந்தோனேசியாவின் மேற்குத் திமோரின் வட மேற்குப் பிரதேசத்தில் ஓர் உட்குடைவு பிரதேசத்திலும் அமைந்துள்ள நாடாகும்.இது அவுஸ்திரேலியாவின் டார்வின் நகருக்கு வட மேற்குத் திசையில் 400 மையில் தொலைவில் உள்ள நாடாகும்.மிகவும் சிறிய தீவாக இருந்த போதிலும் கூட அபரிமிதமான எண்ணெய் மற்றும் வளங்களினை சூழக் கொண்டுள்ளது.

மேலும் சந்தன மரங்கள்,தேன்,மெழுகு போன்ற வளங்களினையும் கொண்டுள்ளது. எனினும் உலகில் மிகவும் வறிய நாடாகவும் இது காணப்படுகின்றது.

## கிழக்கு திமோர் வரலாறு...

கிழக்கு திமோர்




16ம் நூற்றாண்டில் பல நாடுகள் போர்த்து கேயர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது அந்தவகையில் 1520களில் போர்த்துகேயர் திமோரினை ஆட்சி செய்தனர்.அதேவேளை டொஞ்சும் தன்னுடை அதிகாரத்தினை இத் தீவில் நிலை நிறுத்த முனைந்தது. இதன் போது அவ்விரு நாடுகளுக்கிடையிலும் போர் மூண் டது இதன் விளைவாக 1859ம் ஆண்டு இரண்டு நாடுகளும் ஒப்பந்தத்தின் அடிப்படை யில் திமோரினை கிழக்கு மற்றும் மேற்கு திமோர் என பிரித்தனர்.அந்த வகையில் மேற்கு திமோர் ஒல்லாந்தரினால் கைப்பற்றப் பட்டதுடன் கிழக்கு திமோர் போர்த்துகேயர் வசம் காணப்பட்டது.போர்த்துகெயர் கிழக்கு திமோரினை 455 ஆண்டுகளாக ஆட்சி செய் தனர்.போர்த்துகேய மொழி கிழக்கு திமோரின் தேசிய மொழியாக்கப்பட்டது.அங்குள்ள மக்க ளுக்கு போர்த்துகேசு மொழி கற்பிக்கப்பட்டது, இம் மொழியினை கற்றவர்களுக்கான வேலை வாய்ப்பு அதிகமாக காணப்பட்டது அதே போன்று போர்த்துகேச மொழியில் கல்வி கற்றவர்களே ஆட்சியினையும் செய்து கொண் டிருந்தனர்.மேலும் றோமன் கத்தோலிக்க மத மும் பரப்பப்பட்டது.பண்டைய சம்பிர தா யங்களுடன் பெரும்பான்மையின ராக வாழ்ந்த மக்களின் நிலை போர்த் துக்கேயர் காலனித்துவ ஆட்சியின் பின்னர் மாற்றியமைக்கப்பட்டது.

போர்த்துக்கல்லில் இராணுவ சதிப்புரட்சி இடம் பெறவும் தன்னுடைய காலனித்துவ ஆட்சியினை தளர்த்தியது இதன் பிரகாரம் கிழக்கு திமோர் 1975 நவம்பர் மாதம் 28ம் விடுவிக்கப்பட்டது.போர்த்துகேய பொறியிலிருந்து விடுதலையான கிழக்கு திமோர் மீண்டும் 1975 டிசெம்பர் 7ம் திகதி இந்தோனேசிய இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டு இந்தோனசியாவின் 27வது மாகாண மாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இக்கால கட்டத்தில் இந்தோனேசியாவின் தலைவராக சுஹார்த்தோ விளங்கினார், அவரின் தலைமை யில் இங்கு வன்முறைகள் இடம்பெற்றன.. அடுத்து வந்த இருபது ஆண்டுகள் தன்னு டைய ஆட்சியினை பேண இந்தோனேசிய இராணுவம் இங்கு நிலைநிறுத்தியிருந் தது.1975ல் இருந்து இந்தோனேசிய இராணு வத்தினருக்கும் கிளர்ச்சியாளருக்கும் இடை யில் இடம் பெற்ற மோதல் தொடர்ந்து கொண் டிருந்தது.கிழக்கு திமோர் கொரில்லா போரினை நிகழ்த்தி இருந்தது. இதற்கு எவ் விதமான வெளிநாட்டு உதவிகளும் வழங்கப் படவில்லை போர்த்துகேச இராணுவத்தி லிருந்து வெளியேறிய இராணுவத்தினரின் உதவியுடன் இப்போர் தொடர்ந்தது அதே வேளை இந்தோனேசிய மேற்குலக நாடு களின் உதவிகளினை பெற்றிருந்தன இதன் காரணமாக பிரேட்லின் இராணுவப் படையினரின் தாக் குதல் முடக்கப்பட்டது. 1998ல் சுஹார்த்தோவின் ஆட்சி வீழ்ச்சியடையும் வரை

இந்தோனேசியாப் படை கிழக்கு திமோரில் இருந்து பின்வாங்க வில்லை,அதுவரை இங்கு மோதல் இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இந்தோனேசியா வின் புதிய தலைவர் ஹபிபி (B.J. Habibie) 1998ல் தான் கிழக்கு திமோரிற்கு விசேட தகுதியினை வழங்க விரும்புவதாக கருத்து தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் அழுத்தம் இதன் பின்னணியாக காணப்பட் டிருக்கலாம்.1999ல் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடாத்தப் பட்டது, கிழக்குத் திமோர் மக்கள் சுதந்திரத் திற்காக வாக்களித்ததன் ஊடாக 2002 ம் ஆண்டு இந்தோனேசியாவின் இராணுவ ஆக் கிரமிப்புக்கு முற்று புள்ளி இடப்பட்டு கிழக்கு திமோர் தனி நாடாக பிரகடனப்படுத்தப்பட் டது. எனினும் இத் தேர்தலின் போது பல வன்முறைகள் இடம்பெற்றன இதனை தணிக் கும் வகையில் அவுஸ்திரேலிய அமைதிகாக் கும் படை வரவழைக்கப்பட்டது.இத் தேர்த லில் 98.6% பதிவு செய்யப்பட் வாக்காளர் களில் 78.5% மானோர் ஆதரவாக வாக்களித் திருந்தனர்.2002ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தினையும் பெற்றுக் கொண்டது. விடுதலை அடைந்த கிழக்கு திமோரின் முதலாவது தலைவராக Xanana Gusmao விளங்கினார்.

இவை கிழக்கு திமோர் கடந்து வந்த பாதைகள் ஆகும்.1974 இருந்து துன்பத்தை மாத்திரம் அனுபவித்த மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கினர்.இம் மக் களின் நீண்ட நாள் கனவு நினைவாகியது.

### கிழக்கு திமோர் பிரச்சனையின் தோற்றம்

இந்தோனேசிய ஆட்சியின் போது திமோர் மக்களின் தேசிய மொழியாகிய தெட்டு மொழி கிழக்கு திமோரின் உத்தேச மொழியாக்கப் பட்டது. இதனால் போர்த்துக்கேய மொழியில் கல்வி கற்ற பல இளைஞர்கள் வேலையினை இழந்தனர். இது முரண்பாட்டினையும் மோத லினையும் தோற்றுவித்தது.போர்த்துக்கல் மற் றும் இந்தோனேசிய ஆட்சியிலிருந்து கிழக்கு திமோரின் சுதந்திரத்திற்காக, படித்த இடதுசாரி இளைஞர்கள் பிரேட்லின் (Fretilin) என்னும் அமைப்பினை 1974ம் ஆண்டு உருவாக்கினர். Xanana Gusmao, Jose Ramos-Horta ஆகியோர் தலைமையில் சுதந்திர விடுதலைப் போராட்டம் இடம் பெற்றது. கிழக்கு திமோர் சுய நிர்ணய உரிமை கோரிக்கையினை முன்வைத்து வந்தது.இது தொடர்பாக இந்தோனேசிய அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்தியது ஆனால் இது பற்றிய சரியான முடிவு களினை பெற்றுக்கொள்ள முடியவில்லை.அதனைத் அடுத்து பிரேட்லின் அமைப்பினை ஒழித்து கட்டும் நோக்குடன் வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன, இதன் விளைவாக கொரில்லாப் போர் தொடுக்கப்பட்டது. இதன் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் இந் தோனேசிய இராணுவத்தினரினால் கொல் லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக அவர் இருந்த இடங்களி லிருந்து வெளியேற்றப்பட்டு முகாம்களில் அடைக்கப்பட்டனர்.இப் போராட்டத்தில் ஈடு பட்ட கொரில்லாவின் தலைவர் Xanana Gusmao 1992ம் ஆண்டு இந்தோனேசிய இராணுவத்தினரினால் கைது செய்யபட்டு சிறையில் அடைக்கப்பட்டார் பின்னர் 2002 ஆம் ஆண்டு விடுதலையானர்.அவரே கிழக்கு திமோரின் முதலாவது தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டார். இந்தோனேசிய இராணுவத் தினரினால் திமோர் மக்கள் மீது பல மோச மான வன்முறைகள் மற்றும் இனப்படுகொலை கள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. மேலும் கிழக்குத் திமோரின் பிரிவினைகளினை பயன் படுத்தி ஒட்டுப்படைகளை இந்தோனேசிய உருவாக்கியது இது மேலும் வன்முறைகளை தீவிரப்படுத்தியது.

பொதுவாக நலன்கள் மோதலுக்கான அடிப்படை காரணமாக அமைகின்றது.கிழக்கு திமோர் மக்கள் அந்நலனுக்காக மோதலில் ஈடுபட்டனர். உண்மையில் நலன் என்பது

சமூக,பொருளாதார மற்றும் அரசியல் தொடர்பான நலன்களை குறித்து நிற்கின்றது.இவ் அடக்குமுறை காரணமாக திமோர் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.உணவு குடிநீர் போன்ற அவர்களின் அடிப்படை நலன்கள் மறுக்கப்பட்டன, மனித உரிமைகள் மீறல்கள், வேலையின்மை நிலவியது இதன் காரணமாக வறுமை ஏற்பட்டது. பெண்களின் மீது கற்பழிப்பு போன்ற வெறித்தனமான நடத்தைகள் இந்தோனேசிய இராணுவத்தினரினால் மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்திற்கு எதிராக பேசுவோரை கொலை செய்தல் போன்ற சர்வாதிகார ஆட்சியினை இது இங்கு நிறுவியிருந்தது. பாரியளவான இன ஒழிப்பினை இவ் இராணுவம் செய்து வந்தது. இதன் போது சுமார் 200,000 மேலதிகமான மக்கள் வறுமை,நோய் மற்றும் வன்முறைகள் காரணமாக உயிரிழந்தனர் அத்துடன் 500,000 பேர் தமது வீடுகளினை இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.இந்தோனேசியா கிழக்குத் திமோர் முழு வதையும் தன்னுடைய கட்டுபாட்டின் கீழ் கொண்டுவர முயன்றது.கிழக்கு திமோர் அபரிமிதாமான எண்ணெய் வளத்தினை கொண்டிருப்பதும், (Fretilin) பிரேட்லின் இயக்கம் கம்யூனிஸ சார்பானதாக இருந்தமையும் இத்தகைய ஆக்கிரமிப்பிற்கான பிரதான காரணமாகும்.சுருக்கமாக கூறின் கிழக்கு திமோர் மீது கொண்ட அரசியல், பொருளாதார ஆர்வமே இத்தகைய மோதலுக்கான பின்னணியாக உள்ளது.

பொருளாதார காரணிகளை நோக்கின் உலகில் அரிதாக கிடைக்கக் கூடிய எண்ணெய் வளத்தினை தம்வசம் கொண்டுள்ளது.உலக நாடுகள் தம்முடைய உற்பத்திகளினை அதிகரித்து இலாபத்தினை பெற்று முன்னேற்றம் அடைந்து கொள்தற்காக அதனை கைப்பற்றுவதற்காக எல்லா நாடுகளும் போட்டபோட்டி போட்டுக்கொண்டு இந்தோனேசிய இராணுவத்திற்கு உதவிகளை வழங்கின குறிப்பாக அவுஸ்திரேலியாவினை குறிப்பிடலாம் அத்துடன் இந்தோனேசியா கம்யூனிஸ எதிர்ப்பு நாடாக காணப்பட்டதினால் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுகளையும் பெற்றது.குறிப்பாக அமெரிக்கா ஆதாரவினை வழங்கியது மேலும் கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல மேற்கத்திய நாடுகள் ஆயுத, இராணுவ, பொருளாதார மற்றும் அரசியல் உதவிகளை வழங்கியது.மேலும் பிரேட்லின் இயக்கம் கம்யூனிஸ கொள்கையினை உடைய அமைப்பாக விளங்குகின்றமையினால் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இது பரப்பப்பட்டுவிடுமோ என்ற அச்சம் இந்தோனேசிய மற்றும் மேற்கத்தைய நாடுகள் மத்தியில் காணப்பட்டமையும் அரசியல் காரணியாக விளங்குகின்றது. மனித உரிமை மீறல்கள் எந்த உலக நாடுகளின் கவனத்தினையும் ஈர்க்கவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கீழ் செயற்பட்டமையே இதற்கான காரணமாகும்.

வரலாற்று காரணியும் கிழக்கு திமோர் பிரச்சனைக்கு மற்றுமோர் காரணியாகும். கிழக்கு திமோர் பல்வேறுபட்ட இன, மொழியினை பின்பற்றுகின்ற மக்களினை கொண்டுள்ளது.இவர் மத்தியில் காணப்பட்ட பிரிவினையினை சரியாகப் பயன்படுத்திய இந்தோனேசிய இராணுவத்தினர் அவர்களினூடாக கிழக்கு திமோரில் குழப்பத்தினை ஏற்படுத்தினர். இது உள்நாட்டில் ஆர்பாட்டங்கள் மற்றும் அட்டுழியங்களினை அதிகரித்தது.

தற்போது சுதந்திரம் அடைந்துள்ள நிலையில் இத்தகைய பிரச்சனைகள் எதிர்வரும் காலங்களில் ஏற்பாடாமலும் அவ்வாறு ஏற்பட்டாலும் தடுக்கக் கூடிய வகையில் ஒப்பந்தங்களினை செய்வதனூடாக தடுக்க முடியும். இங்கு காணப்படும் வளத்தினைக் கொண்டு நாடு அபிவிருத்தி பாதையை நோக்கி கொண்டு செல்லலாம் இதன் மூலம் உணவு பற்றாக் குறையினை நீக்குதல்,வறுமை குறைப்பு, வேலை வாய்ப்பு மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளினையும் ஈட்டிக் கொள்ள முடியும்.

1975 தொடக்கம் சகல விதமான பிரச்சனைகளினையும் எதிர்நோக்கிய மக்கள், நீண்ட நாட்களுக்கு பின்னர் தமது கனவினை நனைவாக்கியுள்ளனர்.இத்தகைய மாற்றம் திடிரென தோன்றவில்லை அதேபோல் இவ் விடுதலைக்கு பல்வேறு காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன.1991 சோவியத் யூனியனின் வீழ்ச்சி மற்றும் இந்தோனேசிய சர்வாதிகாரியின் பதவி இறக்கம் என்பன கிழக்கு தீமோர் விடுதலைக்கு தூண்டுகோளாக அமைந்தது.மேலும் கிழக்கு திமோரிற்கு விடுதலையினை வழங்கி அதனூடாக பெற்றோலிய வளத்தினை பூரணமாக கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற அவுஸ்திரேலியாவின் எண்ணம் அதன் பிரகாரம் தோன்றிய இந்தோனேசியாவின் அழுத்தம் என்பனவற்றினையும் குறிப்பிடலாம். மேலும் இங்கு தொடர்ந்தும் கலவரங்கள் இடம் பெறுவதற்கு ஜனநாயக நீரோட்டத்திற்கு பொருத்தமில்லாதவர்களினால் ஆட்சிப் பொறுப்பு கொடுக்கப்பட்டமையே காரணம் என பலர் கருத்துரைக்கின்றனர்.ஆனால் இந்நிலைமை எதிர்காலத்தில் மாற்ற மடையலாம்

'கிழக்கு திமோரில் சுதந்திரம் உண்டு ஆனால் சோறு இல்லை' என பலராலும் தற்போதைய கிழக்கு திமோர் வர்ணிக்கப்படுகின்றது. வறுமை மற்றும் வேலையின்மை தொடர்ந்தும் நிலவிக் கொண்டிருக்கின்றது. மொத்த சனத்தொகையில் 40 மேற்பட்ட மக்கள் வேலையற்றிருக்கின்றனர்.மேலும் ஆசியாவின் மிகவும் வறுமையான நாடாக இது காணப்படுகின்றது. இந் நாட்டின் எண்ணெய் வளத்தினை பயன்படுத்தி அவுஸ்திரேலிய தன்னுடைய பொருளாதாரத்தினை வளர்த்துக் கொள்கின்றது. ஆனால் கிழக்கு திமோரின் பொருளாதார நிலை மோசமான நிலையில் காணப்படுகின்றது.இம் மக்கள் கண்ணைத் திறந்து கொண்டு உறங்குபவர்களாக உள்ளனர் இந்நிலைமை மாற்றப்பட வேண்டும். வறுமை பட்டினி ஒழிப்பிற்கான நிரந்தர தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

இது உடன்பாடான சமாதானமாக காணப்பட்டாலும் கூட அதனுடைய வெற்றி உண்மையிலேயே அடையப்படவில்லை. அவ்வாறாயின் பொருளாதர, சமூக,அரசியல் ரீதியான முன்னேற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தோனேசியாவின் பிடியில் இருந்து விடுபட்டு சுமார் எட்டு ஆண்டுகளினை கடந்த நிலையிலும் இன்னும் வறுமை,வேலையின்மை சிற்சில வன்முறைகள் என்பன இடம் பெற்றக் கொண்டே இருக்கின்றன.

எனவே இங்கு இடம் பெற்ற மோதலுக்கான மறைமுகமான காரணங்களாக உலக நாடுகளின் ஆயத வியாபாரமும் ஏற்கனவே நாம் மேலே குறிப்பிட்ட காரணங்களும் காணப்படுகின்றன. எனினும் உலக நாடுகள் என்றும் தம்முடைய நலனிலே அதிக அக்கறை செலுத்துகின்றன.உன்னிப்பாக நோக்கும் போது இலங்கையினுடைய மோதலுக்கு ஒப்பான ஒரு மோதலாக காணப்படுகின்றது.

**உசாத்துணை**


www.google.com Raeph;za chpik> xl;Lg;gilfs; fpof;F jpNkhh; jUk; ghlk;(06.13.2008)

www.google.com conflict in east timor

www.google.com Crisis in East Timor- global issues

www.google.com CNN.com Timeline: East Timor's long path to nationhood(May 16,2002)

Jayadeva Uyangoda>(2005)>\\Conflict,Conflict Resolution and Peace Bulding:An Introduction to Theories and Practices",GTZ Srilanka in collaboration with IMCAP and Department of political science University of Colombo, Colombo.

# வட்டமேசைகளில் அர்த்தப்படுத்தலுக்கான உரையாடல் திறன்



வி.எஸ். இந்திரகுமார்

இவ்வுலகமானது பல்வகைமை நிறைந்தது. உலகில் நடைபெறும் செயல்கள் பல்வேறு விதமாய் உள்ளன. இதற்கான அடிப்படைக் காரணம் பற்றி உளவியல் ரீதியாகவும் சமூக வியல் ரீதியாகவும் கூர்ந்து நோக்கும் போது இவ்வுலகின் இயக்குனர்களான மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள்வேறுபடு பாடும் ஒரு மனிதன் வாழும் சூழற்காரணி களினதும், மரபு வழிக்காரணிகளினதும் கூட் டுத்தாக்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன.

உளவியலாளர்களும் சமூகவியலாளர் களும் ஆளுமை வெளிப்பாடு தொடர்பாக பல்வேறு தத்துவங்களையும் வகைப்படுத்தல் களையும் முன்வைத்துள்ளனர். அவற்றிலே



வதே என்பது தெட்டத்தெளிவாகின்றது. எனவே ஒவ்வொரு நபரும் தனக்கே பிரத்தி யேகமான சிந்தனையாற்றல் மன உணர்வுகள், செயற்பாட்டாற்றல் ஆகியவற்றின் அடிப் படையில் தன்னைத்தானே ஆளும்கலையை 'ஆளுமை' என வரையறுத்துக்கொள்ளலாம். ஆளுமையினுடைய வளர்ச்சியும் வெளிப் அடிப்படையானதும், இலகுவானதும், எல் லோரும் விளங்கக்கூடியதுமான ஒரு வகைப் படுத்தல் பின்வருமாறு உள்ளது. சமூக இடைத் தொடர்புகளில் கூடுதலாக ஆர்வம் உள்ள வர்களை சமூக நோக்கு ஆளுமை படைத் தோர் (Extrovert) என ஒரு வகையாகவும் தம் சொந்த மன உணர்வுகளிலே கூடுதல் ஆர்வம்

உள்ளவர்களை தன்நோக்கு ஆளுமை படைத்தோர் (Introvert) என இன்னொரு வகையாகவும் வகைப்படுத்தலாம். ஆளுமை வெளிப்பாட்டினுடைய மதிப்பீட்டு கருவிகள் பல உள. பேசும் திறன், மொழிப்பாவனை, உரையாடற்றிறன் என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இவற்றில் உரையாடற்றிறன் என்பது பிரதான மதிப்பீட்டு கருவிகளுள் ஒன்றாக அமைவதுடன், செம்மையான உரையாடற்றிறன் சமூக இடைத்தொடர்புகள், தலைமைத்துவம் என்பன வெற்றிகரமாக அமையவும் ஏதுவாகின்றன.

உரையாடற்றிறன் மொழிப்பாவனை என்பவற்றில் சமூக நோக்கு ஆளுமை படைத்தோருக்கும் தன்நோக்கு ஆ்ளுமை படைத்தோருக்கும் இடையில் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. தன் சார்ந்த சிந்தனைக் குவிவு தன்நோக்கு ஆளுமை படைத்தோரில் அதிகமாதலால் உரையாடும் போது நான் எனும் சொற்பதத்தை அதிகமாக பாவிப்பர். நெடிய விளக்கங்கள் மூலம் தான் சார்ந்த கருத்தை மட்டும் மிகத்தெளிவாகவும், விபரமாக வெளியிடவும் (Explicitness) விரும்புவர். ஆயினும் இவர்கள் ஒரே சொற்களை மீளவலியுறுத்துவர். இவர்களுடைய உரையாடற்றிறனோ அநாவசியமான, நீண்ட, நெடிய விளக்கங்களுடனான உரைநடையில் அமையும். இந்நிலை மற்றோர் மனதை உள்வாங்கியும் விடலாம். அல்லது மாறான ஒரு தன்மையினையும் ஏற்படுத்தலாம்.

நாம் குறித்த ஒரு விடயத்தைப்பற்றி உரையாடும் போது கேட்போரின் வேண்டுகோள் இன்றி அவ்விடயம் சார்பான சான்றுகளையும் நிரூபணங்களையும் அடுக்கிக்கொண்டே போவது எமக்குள்ள தன்னம்பிக்கையின்மையை மற்றோருக்கு வெளிக்காட்டுவதுடன், எமது உரையாடலின் மீதான மற்றோரின் ஆர்வத்தையும் கெடுத்து விடுகிறது. ஆனால் கருத்தாழம் மிக்க சுருக்கமான உரையாடல்கள் மற்றோர் மத்தியில் பேசுபவர் மீது ஒரு அச்சம் கலந்த மரியாதை உணர்வை ஏற்படுத்தி விடுகின்றன.

எந்தவொரு மனிதனுடைய ஆளுமையும் அவனுக்கேயுரித்தான பலம், பலவீனம் என்பவற்றின் கூட்டு விளைவினால் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற பிரகடனப்படுத்தப்படாத போட்டிகளை வெல்லவே எத்தனிக்கின்றான் இதற்காக ஒருவன் மற்றொருவனுடைய எண்ண அலைகளை எடை போட எத்தனித்துக்கொண்டே இருப்பான மனித நடத்தை என்பது எண்ண அலைகளின் விம்பமாக விழுகின்றது. ஒருவரை பற்றி அளவிட அவருடைய நடை, உடை, பாவனை என்பவற்றை விட உரையாடற்றிறன் என்பது பல மடங்கு முக்கிய தானத்தை தனதாக்கி கொள்கிறது. எல்லாம் தெரிந்த தோரணையில் ஆனால் பூடகமான பாணியில் அர்த்தம் தொக்கி நிற்கும் சொற்களுடன் உரையாடின் மற்றவர்கள் ஒரு மனிதனை முழுமையாக கணக்கெடுத்துக்கொள்வது கடினம். ஒரு மனிதன் தன்னுடைய பலம் பலவீனம் என்பவற்றை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தாவிடின் மற்றவர்களுடைய அநாவசியமான தலையீடுகளை தவிர்த்துக்கொள்ளலாம். இதனாற் போலும், நவீன ஜனநாயகத்தலைவர்களும், போராட்டத் தலைவர்களும் வேலைப்பழுவைக் காரணங் காட்டிக்கொண்டு அத்திபூத்தாற் போல் அரிதாக ஜனங்கள் முன் அல்லது வெகுஜன ஊடகங்களில் தோன்றி பேசுகின்றனர். இந்நிலையில் ஆளுபவர்கள் எப்போதும் தாம் ஒரு புரியாத புதிராக இருக்க வேண்டும் என்ற நோக்கமாக கூட இருக்கலாம்.

பிரபஞ்சமானது வெற்றி, தோல்வி என்ற இரண்டு எல்லைகளை ஆதிகாலம் தொட்டு நிர்மாணித்து வைத்திருக்கின்றது. இப்பிரபஞ்சத்தில் எம் பூமிப்பந்து என்கின்ற முரண்பாட்டு முடிச்சினையுடைய சிக்கற்றன்மை குறைய குறைய வெற்றி - தோல்வி என்ற வீச்சுக்குள் வெற்றி எனும் எல்லைக்கோட்டை இலகுவாக

அண்மிக்கலாம். ஒருவருடைய கருத்தில் இன்னொருவருக்கு முரண்பாடு இருப்பினும், அதனை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற தொனியில் வெளிப்படுத்தின் மேற் கூறப்பட்டோருக்கு இடையில் விலகல் அதிகரித்து விடும் அம்முரண்பாடானது ஒழுங்கமைக்கப்பட்ட, படிமுறைவடிவில், தகுந்த தர்க்க ஆதாரங்களுடன், மென்தொனியில் பொருத்தமான சொற்பிரயோகங்களுடன் நிச்சயமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். எம்மிலிருந்து முற்றாக கருத்து வேற்றுமைப்பட்ட ஒருவருக்கு எம்மீது ஈர்ப்பு ஏற்படாத பட்சத்தில் கருத்தொருமித்த இலக்கு நோக்கிய பயணம் செயலிழக்கிறது. ஆகவே எமது உரையாடற்றிறன் மூலம் எவ்வளவுக்கு மற்றவர்களுடன் குறைவாக முரண்பாட்டுக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு ஆக்கத்திறன் வெற்றி நேர்விகித சமமாக அதிகரித்து செல்லும். இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப்படும் இத்தீவை இரத்த சமுத்திரத்தின் நித்திலமாக மாற்றுவதற்கு காரணமான முரண்பாட்டு களை வித்தானது பிரச்சாரக்கூட்டங்கள், மாநாடுகள் கலந்துரையாடல்கள் ஆகிய வற்றினூடான உரைகள் மூலமும் தூவப்பட்டது என்பதை நினைவுபடுத்தல் இவ்விடத்தில் பொருத்தமானதே.

ஒரு மனிதன் மற்றைய மனிதர்களை நிர்வகிக்கும் தன்மையினை கொண்டு ஆளுமையானது வகைப்படுத்தப்படலாம். மற்றவர்களுடைய ஆசை, அபிலாசைகளை பெரிதும் கருத்தில் எடுக்காமல் அவர்களை நிர்வகித்தலானது வமையான ஆளுமைப் பண்பாகும். பாசிசக்கோட்பாடுகள் இவ்வகையான ஆளுமைக்கோட்பாட்டையே பெரிதும் அடிப்படையாக கொண்டவை. மற்றவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதை புரிந்து கொண்டு, அவர்களின் ஆசை அபிலாஷைகளின் அடிப்படையில் நிர்வகித்தலானது இனிமையான ஆளுமைப்பண்பாகும். இவ்வகையான இனிய ஆளுமைப்பண்பானது ஜனநாயகக் கோட்பாட்டின் அடிநாதம் என எழுத்தளவிலாவது வரைந்து கொள்ளலாம். இனிமையான ஆளுமையை ஏற்படுத்த வெகுசனக்கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் இதற்காக சந்தர்ப்பத்துக்கு பொருந்தும் வகையில் உரையாடும் திறன் வேண்டும், உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுதல் என்பது இதன் பொருள் அல்ல. உதாரணமாக, உள்ளூர் கிரிக்கெட் போட்டி ஒன்றை நேரடியாக பார்த்துரசித்துக்கொண்டிருக்கும் கூட்டத்தின் இடையே, அக்கூட்டத்தில் உள்ள ஒருவர் திடீரென உள்ளூர் அரசியல் பற்றி பேசத் தொடங்கின் ஏனையோருக்கு எவ்வளவு சினம் ஏற்படும்? இதனுடன் ஒப்பிடும் போது சர்வதேச கிரிக்கெட் தொடர்பான உரையாடல் ஒன்றை பிரதாபிப்பது பொருத்தமானதாகவும், மற்றவர்களை கவரக்கூடியதாகவும் அமையலாம்.

எப்போதும் உரையாடற்றிறனில் உற்சாகம் தொனிக்க வேண்டும். நாம் உற்சாகமாக இருந்தால்தானே ஏனையோரை உற்சாகப் படுத்த முடியும். நம்மனச்சுமைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வது எமக்கு உள ஆரோக்கியத்தை ஏற்படுத்துவது உண்மையே. அதற்காக எப்போதும் கஷ்டங்களையே உரையாடுவது எம்மையும் சோரச்செய்து கேட்போரையும் சோர்வடையச்செய்யும். தன்னம்பிக்கையுடன் இயங்குபவனே பிறரை வசப் படுத்த முடியும். உரையாடல்களின் போதோ புதிய அறிமுகமாதல்களின் போதோ மற்றவர்கள் எம்மீதும், எம்நலன் மீதும் எவ்வளவுக்கு அக்கறை கொண்டவர்கள் போல உரையாடுகிறார்களோ அதே போல நாமும் உரையாடாவிடின் இடைத்தொடர்பு விலகல் அதிகரித்து விடும் நாம் மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களில் அக்கறையற்ற பேர்வழி என்ற தோரணையில் உரையாடின் தன முனைப்பு பிடித்த மனிதராகவும், உயர்ரகப் பாணியில் நடத்தையை காண்பிக்க முயல்பவராகவும் அடையாளப்படுத்தப் படலாம்.



# சிக்மண்ட புரொய்ட் கூறும் உளப்பாலிய வளர்ச்சி

## (Psychosexual Development by Sigmund Frued)

அரசி விக்னேஸ்வரன்

சிக்மண்ட புரொய்ட(1856-1939) ஆஸ்திரி யாவை நேர்ந்த மிக முக்கிய மானதொரு உள வியல் அறிஞர் புரொய்டின் கருத்துக்கள் மறுக்கப்படலாம்.ஆனால் புறக்கணிக்கப்பட முடியாது. ஏனெனில் உளவியல் துறையில் மிக முக்கியமான மாற்றத்தினை அவரது உளப்பகுப்பாய்வுக் கொள்கை ஏற்படுத்தியது. நரம்பியல் சிகிச்சையாளராக இருந்த புரொய்ட் தன்னிடம் வருகை தந்த நோயாளிகளையும் தன்னைத்தானேயும் ஆய்வு செய்து தனது கொள்கையைக் கட்டியெழுப்பினார்.

'உளப்பகுப்புக் கொள்கை' (psychoanaly-sis) உளவியல் ஆராய்ச்சியில் ஒரு புதிய பரி மாணத்தினை ஏற்படுத்தியது. உள்ளத் தினை புரொய்ட் நனவு, நனவிலி(Concious and Unconcious) என இரண்டாக வகுத்தார் 'நனவில்' என்கிற எண்ணக்கரு மிகவும் முக்கியமானது அதாவது நாம் அறியாமல் நம் உள்ளத்தில் அடியில் செயற்படும் எண்ணங்களே நன விலியாகும். ஏலவே இருந்த உளவியல் ஆய்வு முறைகள் நனவு மனத்தினை மட்டுமே ஆராய்ந்தன. புரொய்ட் நனவிலி மனக் மனித நடத்தைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுவளாக சுட்டிக்காட்டினார்.



புரொய்ட் மனித உள்ளத்தை அகம்(Ego), அதியகம் (Super ego) மற்றும் இட் (Id)

என்ற மூன்றாகப் பாகுபடுத்தினார். இட் ஆனது நிறைவேறாத மற்றும் தடைசெய்யப் பட்ட ஆசைகள் இருக்கின்ற மிருக மனம் எனவும் அகம் யதார்த்தைப் பற்றிய அறிவை உடையது எனவும் புரொய்ட் குறிப்பிட்டார். நமக்கு சமூகமயமாக்கல் மூலம் கற்பிக்கப்படும் நன்னடத்தை, ஒழுக்கம்,விழுமியம் ஆகியன அதியகத்தில் அடங்கியுள்ளதாகவும் கூறுகிறார்.

நம்மை அறியாமல் அடக்கப்படும் உந்து தல்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் நம் நனவிலி மனத்தில் இருந்தபடி நம் நடத்தை யில் செல்வாக்குச் செலுத்துகின்றன. 'இட்' இன்ப நுகர்ச்சிக்கான இச்சையை மட்டுமே கொண்டது. அதியகம் அதி தீவிர விழுமி யங்களைக் கொண்டது. இவை இரண்டையும் யதார்த்திதற்கு அமைய வெளிப்படுத்தும் ஆற்றல் அகம் மூலம் வழங்கப்படுகிறது. அகத்தின் தொழிற்பாடு அதியகத்தினையும் 'இட்' இணையும் சமநிலைப்படுத்துவதாகும். இச் சமநிலையே ஒருவரின் ஆளுமையைத் தீர்மானிக்கிறது.

ஒரு ஒருவரின் ஆளுமையில் 'இட்' இன் செல்வாக்கு அதிகமாக இருப்பின் அவர் மிருக குணம் கொண்டவராக இருப்பார். அதியகத் தின் செல்வாக்கு அதிகம் எனில் வாழ்வியல் விடயங்களில் நாட்டமுற்று துறவி போலக் காணப்படுவார். அகத்தின் செல்வாக்கு அதிக மாக இருக்கும் ஒருவரே சமநிலை ஆளுமை உடையவராகக் காணப்படுவார்.

'இட்' ஆனது நனவிலி மனத்தில் மட் டுமே காணப்படுகிறது. அகம் மற்றும் அதி யகம் என்பன பகுதியளவு நனவிலி மனத்தி லும் பகுதியளவு நனவு மனத்திலும் காணப்

படுகின்றன. இட் இலுள்ள ஆசைகள் நனவு மனத்தில் எழுவதால் குற்ற உணர்ச்சியோ குழப்பமோ உருவாகலாம். இதனைக் தடுப்பதற்காக நனவிலியிலுள்ள அகமானது 'தற்காப்பு வழிமுறைகள்' இணை (Defence mechanisms) பின்பற்றுகிறது. இவ்வாறான 'தற்காப்பு வழி முறைகள்' பலவகைப்படும். உதாரணமாக மேலதிகாரியிடம் ஏற்படும் கோபத்தினை துணைவியிடம் ஒருவர் காட்டுகின்ற போது கோபம் இடமாற்றப்படுகிறது. இது ஒரு அகத்தின் தற்காப்பு வழிமுறையாகும்.

புரொய்ட் பாலியல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தினார். அவரது கொள்கைகள் பெருமளவில் பாலியல் தொடர்பாக அமைந்தமை அக்காலத்தில் பலரது எதிர்ப்புக்களையும் தூண்டியது. புரொய்டின் கருத்துப்படி பெரும்பாலான உளவியல் நோய்க்குறிகளுக்கு மறுக்கப்படும். மறைக்கப்படும் பாலியல் தூண்டல்கள் காரணமாகின்றன.

உலகில் ஒருவர் போல் இன்னொருவர் இருப்பதில்லை. சகல மனிதர்களும் தனக்கேயுரிய தனித்துவமான ஆளுமையைக் கொண்டுள்ளனர். இந்த 'ஆளுமை' என்ற எண்ணக் கருவினை பல அறிஞர்கள் பல்வேறு விதமாக விளக்குகின்றனர். ஒருவரின் குணவியல்புகள் இயல்பானவையா? வளர்ப்புச் சூழலினால் ஏற்படுத்தப்படுபவையா? என்கின்ற கேள்விக்கு திட்டவட்டமான விடை காணப்படவில்லை. புரொய்ட் ஆளுமை வளர்ச்சியை உளப்பாலியல் வளர்ச்சி காலகட்டங்கள் ஐந்தின் மூலம் விளக்குகின்றார்.

புரொய்ட் குழந்தைகள் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு உடல் உறுப்புக்களில் அதீத ஆர்வம் காட்டுவதை அவதானித்தார். உதாரணமாக ஒரு வயதிற்குக் குறைந்த குழந்தைகள் வாய் மூலம் இன்பமடைவதை அவதானித்தார். தன்னுடைய சொந்த அனுபவத்தினையும் அடிப்படையாகக் கொண்டு 'இடிபஸ் சிக்கல்' (oerdipus complex) என்கிற கருத்தை முன்வைத்தார். இடிபஸ் என்னும் கிரேக்க புராணக்கதையின் பாத்திரத்தினை இதற்கு உதவியாகக் கையாண்டார்.

இக்கதையின் படி இடிபஸ் ஒரு அரசகுமாரன். அவன் வருங்காலத்தில் தாயை மணமுடிப்பான், தந்தையைக் கொல்வான் எனக் குறி கூறப்படுகிறது. வளர்ந்த இடிபஸ் இதனைக் கேள்வியுற்று துயரமடைந்தான். அவ்வாறு நடவாதிருக்க வேண்டி ஊரை விட்டே புறப்பட்டான். போகும் வழியில் ஒரு அரசனுடன் வாக்குவாதப்பட்டு அவனைக் கொன்று அவனது இராணியைத் திருமணம் செய்து கொண்டான் அதன் பின்னரே அவன் தான் மணமுடித்திருப்பது தனது தாயை எனவும், கொன்றது தனது தந்தையை எனவும் தன்னை வளர்த்தது வளர்ப்பு பெற்றோர் என்பதனையும் அறிந்தான். இக்கதையின் மூலம் புரொய்ட ஆண் குழந்தைக்கு தாய்மேல் பாலியல் ஈர்ப்பும், தந்தைமேல் பொறாமையும் கொலைவெறியும் இருப்பது வெளிப்படுவதாகக் கருதினார்.

புரொய்டின் உளப்பாலியல் வளர்ச்சிக் காலகட்டத்தின் முதலாவது காலகட்டத்தில் குழந்தை 'வாய்வழி இனபத்தினை' நுகர முற்படுகிறது. பிறப்பில் இருந்து ஒரு வயது வரையான இக்காலப்பகுதியில் தாய்பால் பருகுதல் மிக முக்கியமான இன்பமாகும். இப்பருவக் குழந்தைகள் கண்ட பொருட்களையும் வாயில் போடுவதனை அவதானிக்க முடியும். எந்தப் பொருளையும் வாய்மூலம் உணர்வதனையே விரும்புவர்.

இப்பருவத்தில் பால் குடிக்கும் அவா சரியானளவில் திருப்திப்படுத்தப்படுவது முக்கியமானது இல்லையேல் அக்குழந்தை வளர்ந்த பின்னர் வாய்மூல இன்பங்களில் அதிக நாட்டமுடையதாக இருக்கும். உதாரணமாக புகைப் பழக்கத்திற்கு அடிமையாதல், எதையாவது மென்று கொண்டே இருத்தல், அதிகளவு உண்ணுதல் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பருவத்தில் பால்குடியினை நிறுத்துதலும் மிக முக்கியமான செயல் ஆகும். குழந்தை இதன்மூலம் யதார்த்தத்தைப் புரிந்து கொள்கிறது. தனது தேவைகள் அல்லது ஆசைகள் எல்லா நேரமும் பூர்த்தி செய்யப்படுவதில்லை என்ற உண்மையை குழந்தை உணர்கிறது.

ஆரம்பத்தில் குழந்தையின் உள்ளத்தில் அந்த நேரத்து தூண்டல் அல்லது அவா மட்டுமே காணப்படுகிறது. பால்குடியை நிறுத்துகையில் பிள்ளை யதார்த்தை உணர்கையில் அதன் மனம் இட் மற்றும் அகம் ஆகிய இரு கூறுகளாகப் பிரிகிறது.

இரண்டாவது காலப்பகுதியில் பிள்ளையின் கவனம் குதத்தில் குவிந்து காணப்படும். ஒரு. வயது முதல் மூன்று வயது வரையான இக்காலப்பகுதியில் கழிவை அகற்றல் மற்றும் அடக்கிவைத்தல் மூலம் 'குதவழி' இன்பத்தினை பிள்ளை அடைகிறது.

இக்காலப்பகுதியில் சரியானளவு கண்டிப்புடன் கழிவறைப்பழக்கங்கள் சொல்லிக் கொடுககப்பட்ட வேண்டும். புரொய்ட் கூறுவதன் படி அதீத கண்டிப்பு பின்னாளில் குழந்தை அதித தூய்மை, அளவுக்கதிகமான ஒழுங்கு மற்றும் சிக்கனம் போன்ற குணங்களையும் கண்டிப்பின்மையானது கவனயீனம், ஒழுங்கீனம் ஆகிய குணவியல்புகளையும் ஏற்படுத்தும்.

இதனை தொடர்ந்து மூன்றாவதான காலப்பகுதி இலிங்க காலப்பகுதியாகும். மூன்று தொடக்கம் ஆறு வயது வரையான இக்காலப்பகுதியில் இலிங்க உறுப்புக்கள் மேல் பிள்ளையின் கவனம் குவிகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இருப்பதனை பிள்ளை புரிந்து கொள்கிறது. இது தொடர்பாக மேலதிகமாக தேடவும் முற்படுகிறது அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வேறுபாடு இருப்பதனையும் அறிகிறது.பால்(sex) வேறுபாடு மட்டுமன்றி பால்நிலை(gender) வேறுபாட்டினையும் புரிந்து கொள்கிறது.

இக்காலத்திலேயே பிள்ளை இடிபஸ் சிக்கலுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இதுவரை காலமும் தாயுடன் மிக நெருக்கமாக இருந்த பிள்ளை தீடீரென தாய் தன்னைத் தவிர்ப்பதாகவோ விலகிச் செல்வதாகவோ உணர்கிறது. பாடசாலை செல்ல ஆரம்பித்தும் தாயிடம் இருந்து நீண்ட நேரம் விலகியிருக்க நேரிடுகிறது. சகோதரர்கள் பிறப்பதன் மூலம் இது மேலும் தீவிரமடையலாம்.

இவ்வேளையில் ஆண்குழந்தைக்கு தாய் மீதான பாலியல் ரீதியான ஏக்கம் உருவாகின்றது. அதேவேளையில் தந்தை தாயுடன் நெருக்கமாக இருப்பதை முதன் முதலில் புதிய கண்ணோட்டத்தில் காண்கிறது. தன்னை விட தகப்பனையே தாய் நேசிப்பதாகக் கருதி அப்பா இருப்பதனால் தான் அம்மா என்னை விட்டு விலகுகின்றார் என எண்ணுகின்றது. இதனால் தந்தை மீது கோபமும் பொறாமையும் ஏற்படுகிறது. தந்தை இறந்தால் சகலமும் சரிவரும் எனவும் அவரைக் கொன்றுவிடலாம் எனவும் எண்ணுகின்றது.

ஆயினும் ஏலவே உருவான 'அகம்' இட் இனுடைய இந்த ஏக்கத்தினை மறுக்கிறது. யதார்த்தத்தினை வெளிப்படுத்தி, தந்தை என்னை விடப் பலசாலி அதனால் என்னால் அவரை ஒன்றும் செய்ய முடியாது என உணர்த்துகிறது. இதனால் ஏற்படும் மனக் குழப்பமே இடிபஸ் சிக்கல் எனப்படுகிறது. இதன் போது பிள்ளை தன்னைத் தந்தையுடன் அடையாளப்படுத்துவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முற்படுகிறது.இது ஒரு வகை அகத்தின் தற்காப்பு வழிமுறையாகும்.

தாய் தன்னைவிட தந்தையையே விரும்புவதனால் தானும் தந்தையைப் போல மாறினால் தாய் அல்லது தாய் போன்ற வேறொரு பெண் தன்னை விரும்புவாள் என்று பிள்ளை எண்ணுகின்றது. இதனால் தந்தையைப்போல நடக்கத் தலைப்படுகிறது. இதன் மூலம் பால் நிலை (gender) அடையாளத்தையும் உள்

வாங்கிக் கொள்கிறது. இதன் வாயிலாக பிள்ளை இடிபஸ் சிக்கலில் இருந்து விடுபட்டு விடுகின்றது.

புரொய்ட் இடிபஸ் சிக்கல் பற்றிக் குறிப்பிடுகையில் ஆண் குழந்தையைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டாலும் பிற்காலத்தில் பெண்குழந்தைகளும் இவ்வாறான சிக்கலை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டார். பெண் குழந்தைகளுக்கு இது மேலதிக சிக்கலாக இருக்கும் எனவும் காரணம் அவை தாய்மேல் இதுவரை கொண்டிருந்த சேய்மையை இல்லா தாக்கிய பின்னரே தந்தை மேல் ஈர்ப்பையும், தாய்மேல் வெறுப்பையும் காட்டுகின்றன. இதற்கு கார்ல் யங் (Kar Jung) என்பவர் 'இலக்ட்ரா சிக்கல்' எனப் பெயரிட்டார்.

இலக்ட்ரா என்பது கிரேக்க புராணக் கதைப்படி தந்தையின் மரணத்திற்குப் பழி வாங்குவதற்காக தாயைக் கொன்ற ஒரு பெண் பாத்திரம் ஆகும். பெண்குழந்நை தாயைப் போல நடக்க முயற்சிப்பதன் மூலமும். தாய்க்குரிய கடமைகளை செய்வதன் மூலமும் இப் பருவ முடிவில் இச்சிக்கலில் இருந்து விடுபடுகின்றது.

உளப்பாலியல் வள்ர்ச்சியின் நான்காவது கட்டம் ஆறு வயது தொடக்கம் பூப்பு வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் உளச்சிக்கல்களும் பாலியல் உணர்வுகளும் குறைவாகவே காணப்படும். உடலியல் வளர்ச்சியே அதிகமாகக் காணப்படும். ஐந்தாவது காலப்பகுதியானது பூப்பு முதல் இறப்புவரை தொடர்கின்ற முதிர்ச்சிப் பாலியல் காலப்பகுதியாகும். முற்கூறப்பட்ட நான்கு கட்டங்களிலும் சரியான முதிர்ச்சியினை அடையாத ஒருவர் மீண்டும் இக்கட்டத்தில் மன உளைச்சலுக்கு உள்ளாகலாம்.

புரொய்ட் தனது இடிபஸ் சிக்கல் என்ற கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் சில விடய ஆய்வுகளை மேற்கொண்டார். 'சிறுவன் ஹானஸ்' என்கின்ற விடய ஆய்வு இவற்றள் முக்கியமானது. ஐந்து வயதுடைய அச்சிறுவன் குதிரைகள் மேல் அதீத பயம் (Phobra) கொண்டிருந்தான். அவனுடைய பய நோயினை குணப்படுத்தும் நோக்கில் அப் பயத்திற்கான காரணங்களை அறிய புரொய்ட் முற்பட்டார். இதன் முடிவில் அவன் இடிபஸ் சிக்கலால் பாதிக்கப்பட்டிருப்பதை உறுதிப் படுத்தினார்.

புரொய்டின் உளப்பாலியல் வளர்ச்சி பற்றிய மேற்குறிப்பிட்ட கருத்தின் தற்போதைய நம் சமூகத்திற்கான பொருத்தப்பாடு என்பது ஆராயப்பட வேண்டியதே. எனினும் பிள்ளைகளின் நடத்தையை இக்கண்ணோட்டத்தில் அவதானிப்பின் அவர்களது வெளிப்பாடுகளை சரியாகக் கையாள்வதற்கு பயனுடையதாக இருக்கும்.

*Best wishes from*

*Saranka Jewellery*

55, Sea Street, Colombo 11

Tel : 243 4971, Fax : 011 243 4071

# அக்டோபர் புரட்சி 1917



## 92 வருடங்களின் பின்னர் அது பற்றிய ஒரு சிந்திப்பு

**கார்த்திகேசு சிவத்தம்பி**

உலக வரலாற்றிலே திசைதிருப்பக் கட்டங்களாக சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுதல் வரலாற்றிலே காணப்படும் ஒரு மரபாகும்.

குறிப்பாக ஐரோப்பிய வரலாற்றினை நோக்கும் பொழுது 1453 இல் ஏற்பட்ட கொன்ஸ்தாந்தி நோபிளின் வீழ்ச்சி, 1789 இல் ஏற்பட்ட 'அக்டோபர் புரட்சியும்' இடம் பெறும்.

ஏறத்தாழ 1950ஆம் ஆண்டிலே தொடங்கிய ஒரு வரலாற்றோட்டம் ரஷ்யச் சூழ்நிலைகளிலே பலமாற்றங்களை ஏற்படுத்தி 1917 பெப்ரவரியில் ஒரு முக்கிய கட்டத்தை எய்தி நிறைவாக 1917 அக்டோபரில் போல்ஷ்விக் கட்சியினரின் தலைமையில் அப்புரட்சி வெற்றிகரமாக நிறைவேறிற்று. இப்புரட்சி நடந்த காலத்திலே இச்சம்பவம் பற்றி பாடியுள்ள பாரதியார்

'இடிபட்ட சுவர் போலே கலி வீழ்ந்தான்
கிருதயுகம் எழுக மாதோ'

எனக் கூறியுள்ளார்.

பாடலின் தொடக்கத்திலே பாரதி 'ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என்று கூறுவதை மனங்கொள்ளல் வேண்டும்.

பாரதியின் கூற்றிலே வரும் இரண்டு குறிப்புகள் மிக முக்கியமானவையாகும். ஒன்று அக்டோபர் புரட்சியை! அவன் யுகப் புரட்சி என்றமையாகும். அடுத்த குறிப்பு கலி வீழ்ந்தான் கிருத யுகம் எழுக மாதோ என்று வருவதாகும். இது ஒரு மிக முக்கியமான குறிப்பாகும். கலியுகம் என்பது கேடுகளும், தீங்குகளும் நிறைந்த யுகமாகும். நீதி, நியாயம் தலைகீழாக நிற்கும் காலமாகும். (வார்த்தமான யுகத்தை கலியுகம் என்கிறது இந்து மரபு)

கிருத யுகம் என்பது வரவிருக்கும் புதிய யுகமாகும். ஆந்த யுகத்தில் நன்மைகளைத் தவிர வேறொன்றும் இடம் பெறாதென்பது இந்து மத நம்பிக்கையாகும்.

பாரதியின் கருத்துப்படி அக்டோபர் புரட்சி உலகிலே கலியுகம் வீழ்ந்து கிருதயம் எழுந்துள்ளது என்பதாகும். இவ்வாறு அக்டோபர் புரட்சியை இந்து மரபு நிலை நின்று கிருதயுகமெனப் போற்றியமைக்கான பிரதான காரணம் அது உலகின் முதலாவது 'சமதர்ம புரட்சி' (Socialist Revolution) ஆகும்.

பிரஞ்சுப் புரட்சி விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பிரதானப் படுத்திற்கு எனினும் அது சமூகநிலைப்பட்ட வாழ்வியற் சமத்துவத்தை ஏற்படுத்தவுமில்லை. தனது முக்கிய இலட்சியங்களிலொன்றாக கொள்ளவுமில்லை.

1917இல், குறிப்பாக லெனின் தலைமையில் நடந்தேறிய சமதர்மப் புரட்சி நாட்டு மக்கள் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் அவர்களது திறமைக்கேற்ற பங்களிப்புக்களைப் பெற்று அவர்களின் தேவைக்கேற்றனவற்றை குறிப்பாக சமூகப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். இன்று பின்னோக்கிப் பார்க்கின்ற பொழுது அக்டோபர் புரட்சியின் வழியாகக் கிளம்பிய சோவியத் ஒன்றியம் தனது கருத்து நிலை நின்றும் வழுவி உடைந்து போய்விட்டது. சோவியத் ஒன்றியத்திலிடம் பெற்ற குடியாட்சிகள் இன்று தனித் தனி அரசுகளாக மாறியுள்ளன. பால்கன்

பிரதேசத்தில் சிறுபிரச்சினைகள் உள்ளன வெனினும் அங்கும் தனித்தனி அரசுகள் மேற் கிளம்பியுள்ளன

சோவியத் யுனியனின் உந்துதலையும் முன்னுதாரணத்தையும் கொண்டு நடத்தப் பெற்ற கிழக்கு ஐரோப்ப சோஷலிஸ்ட் அரசு கள் இன்று சீர்குலைந்து போயுள்ளன. கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பாவின் மேலாண் மைக்குள்ளே படிப்படியாக வந்து கொண்டி ருக்கின்றது.

இந்தத் தோல்வியையும், உடைவையும் கம்யுனிஸத்தின் உடைவாகவும் தோல்வியா கவுமே அமெரிக்க மேற்கு ஐரோப்பிய நாடு கள் காட்டியுள்ளன. காட்டி வருகின்றன.

கம்யுனிஸம் (பொதுவுடமை) என்பது ஒரு குறிப்பிட்ட பொருளாதார கோட்பாடு மாத்திரமல்லாது அதுவோர் 'அரசியல் அதி கார முறைமையாகவும்' 1917-88 / 89 காலத் தில் வளர்ந்திருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் அது ஓர் அரசியல் சர்வதி காரமாகவே எடுத்துக் காட்டப்பெற்றது.

ஸ்ராலினுடைய ஆட்சிக்கால நடைமுறை கள் வாய்ப்பான உதாரணங்களாக மாறின. சோவியத் உடைவினதும், பொதுவுடமை வீழ்ச்சியினதும் பின்புலத்தில் 60கள் தொட க்கம் 90 வரை உலக முதலாளித்துவத்துக்கும் சமதர்ம, கருத்துநிலைக்குமிடையே நடந்த கருத்து நிலை யுத்தம் மிக முக்கியமானதாகும். ஏனெனில் இன்றும் தான் மேற்குலக ஊடகங் கள் சோவியத் உடைவை பொதுவுடமைக் கொள்கையின் உடைவாகவே சித்தரிக் கின்றன.

இது மாத்திரமல்லாமல் பொதுவுடமைக் கோட்பாட்டினையும், அதனது அரசியல் நடை முறையினையும் ஜனநாயகத்திற்கு விரோத மானவை என்ற கருத்தினையும் வலுவாக முன்வைத்துள்ளன. சோவியத் யூனியனின் ஆட்சி முறையில் ஏற்பட்ட சில 'திரிபு' நிலை களிலும் உண்மையானவையே. இவையா வற்றுக்கும் வழிவகுத்த அக்டோபர் புரட்சி யினை எவ்வாறு நோக்குவது என்பது அச்சாணி யான ஒரு வினாவாகின்றது. அக்டோபர் புரட்சியின் யுகநிலை முக்கியத்துவம் அது வெறுமனே அரசியல் ஜனநாயக வரலாற்றில் மாத்திரமல்லாமல் சமூக ஜனநாயக வரலாற்று கோட்பாட்டிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறு கின்றது.

சமூக ஜனநாயகம் என்பது ஒரு முக்கிய மான அரசியல் எண்ணக்கருவாகும். அதாவது சமூக வாழ்வில் சமூக இருப்பில் மக்களிடையே ஒரு ஜனநாயகத் தன்மை நிலவுவதாகும். அர சியல் நிலையிலே கிடைக்கும் ஜனநாயகம் சமூக ஜனநாயகமாக மாறுவதில்லை. சமூக அமைப்பிலே நிலவும் அதிகாரப்படி நிலைகள் (Hierayerchies) சமவீனங்கள் ஒழிக்கப்பெற்று மக்களிடையே உண்மையான சமூக சமத்து வம் நிலவுவதாகும். இதனைச் சாதிப்பதற்கு ஒவ்வொருவரையும் ஆற்றல்களுக்கேற்ப வளர்த்து அவரவர்களின் தேவைகளுக்கேற்ப அவர்களின் வாழ்க்கை முறைக்கு உதவுதல் வேண்டும்.

உண்மையில் அக்டோபர் புரட்சியை முன்னின்று நடத்திய பொதுவுடமைக் கட்சி யினரின் பெயர் (Social Democrats) 'சமூக ஜன நாயகவாதிகள்' என்பதே ஆகும்.

இன்று சர்வதேச நிலையில் கியூபா போன்ற நாடுகளைத் தவிர்ந்த நாடுகளிலே சமூக ஜனநாயகம் என்ற கோட்பாடே இல் லாமற் போய்விட்டது. உண்மையில் இலங்கை யைப் பொறுத்த வரையிலும் கூட நமக்கு ஏற்பட்டுள்ள மிகப் பாரிய பாதிப்பு சமூக ஜனநாயகம் என்கின்ற கோட்பாடு இங்கு வளர்க்கப்படாது போனமையாகும்.

அக்டோபர் புரட்சியின் உலகப் பொது வான முக்கியத்துவம் பற்றி நோக்குவதற்கு முன்னர் சோவியத் ஒன்றியத்தின் நிலையிலும் கிழக்கு ஐரோப்பிய நிலையிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளுக்கான காரணங்களை மிகச்சுருக்க மாக இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். அக்டோபர் புரட்சி அடிப்படையில்

ரஷ்யாவிலே ஏற்பட்ட புரட்சியே. ரஷ்யா நாட்டில் குறிப்பாக புதிய மத்தியதர வர்க்கங்கள் மேற்கிளம்பிய நகரப்பகுதிகளிலேயே ஆட்சியெதிர்ப்பு முதலிற் கிளம்பியது. ரஷ்யப் பேரரசின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த பிரதேசங்களிலே (மத்திய ஆசிய பிரதேசங்களில்) மக்கள் கிளர்ச்சி என்ற எண்ணக் கருவோ பெரிதும் பேசப்படவில்லை. ஆனால் மொஸ்கோ பொத்ரோகிறாட் பிரதேசங்களில் மாத்திரமே அந்த எழுச்சி வலிமையுடன் காணப்பட்டது. மொஸ்கோவில் நிலவிய ஆட்சி வீழ்ந்ததும் புதிதாக அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் ரஷ்யப் பேரரசு முழுவதிலும் தனது ஆட்சியை நிலை நிறுத்தியது. இதனால் மிகப் பெரியதொரு மக்களுணர்வுச் சமவீனம் காணப்பட்டது. அத்துடன் ரஷ்யப் பேரரசின் கீழ்வந்த ரஷ்யாவுக்கு அப்பாலான பிரதே சங்களில் மிகப் பெரிய நிர்வாக மாற்றங்கள் ஏற்படுத்தப் படவில்லை. இதனால் சோவியத் ரஷ்யாவுக்குள்ளே ஒரு மிகப் பெரிய அரசியற் சமவீனம் காணப்பட்டது.

ஸ்ராலின் ஆட்சியானது சோவியத் ஒன்றியம் முழுவதற்கும் பொதுவான ஆட்சி ஒழுங்கமைப்பினை நிலை நிறுத்த முயன்றது. இந்தச் சமவினம் இறுதியில் அப்பிரதேசங்களிலே மக்களிடையே புரட்சியுக்கத்தை ஏற்படுத்தவில்லை. இது சோவியத் யூனியனின் உடைவுக்குக் காரணமாயிற்று.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுதத் வரையில் இரண்டாவது உலகப் போரின் இறுதியிலே 'நேசநாடுகளின்' தீர்வுக்கியைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனின் மேலாண்மைக்குக் கீழே கொண்டு வரப்பட்டன. ஆவ்வாறு கொண்டு வரப்பட்டாலும் ஷங்கெரி, கிழக்கு ஜேர்மனிப்போன்ற நாடுகளில் சோவியத் யூனியனுக்கு இருந்த மேலாண்மை யூகோஸ்லாவியா மீது இருக்கவில்லை.

இன்று பின்னோக்கி பார்க்கும் பொழுது ஸ்ராலினது ஆட்சிப் பற்றி விமர்சனங்கள் ரஷ்யாவுக்குள்ளேயே மேற்கொள்ளபப்ட்டன, எனினும் சோவியத் ஒன்றியததின் நிலைப் பேறுடைமைக்கும், சர்வதேச முதலாளித்து வத்துக்கு எதிரான ஓர் அமைப்பினைப் பேணுவதிலும் ஸ்ராலின் காலம் முக்கியத்துவமுடையதாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிர் நிலையான ஒரு சோஷலிசக் குழுமத்தைப் பேண ஸ்ராலின் ஆட்சி உதவியது. ஸ்ராலின் நிறுவிய பொருளாதாரத் தளத்தின் வலிமை இன்றும் கூட உணரப்படுகின்றதெனலாம்

இவ்வாறு கூறும்பொழுது பொதுவுடமை ஆட்சி சோவியத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த முறையினுள்ளே பல பிரச்சினைகள் தொக்கி நிற்கின்றன என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக ஒரு கட்சி அரசாங்கம் (One Party Goverment) நடைமுறைப்படுத்தப்படும். போது ஏற்படக் கூடிய மக்கள் பங்கு கொள்ளல் பற்றிய பிரச்சினைகள் முக்கியமான விவாதத்துக்கு இடமளித்தன. யாவற்றுக்கும் மேலாக வரலாற்றிலே தனிநபருக்குள் பாத்திரம் யாது என்பதும் ஆளுமை வழிப்பாடு (Permality cut) பற்றிய பிரச்சினைகளும் மிக முக்கியமானவையாகும்.

ஸ்ராலின் காலச் சோவியத் ஒன்றியத்தில் றொட்ஸ்கி இடம் பெறாது போனமையும் அதன் வழியாக ஏற்பட்ட பிளவுகளும் சுலபமாக மறக்கப்படத்தக்கவையல்ல. ஒரு நிலையில் ஸ்ராலின், றொட்ஸ்கி ஆகிய இரு ஆளுமைகளின் மோதுமையாகப் பார்க்கப் படுகிறது எனினும் ஆழமான நோக்கும் பொழுது சமதர்ம புரட்சியை நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய வழிவகைகள் யாவை? என்பது பற்றிய ஒரு விவாதமாகவும் அது அமைந்தது. ஒரு நாட்டில் ஏற்பட்ட சமதர்ம புரட்சியைப் பேணுவதற்கு புரட்சியுணர்வு மற்றைய நாடுகளிலும் பரப்பப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு மாறாக ஸ்ராலின்,

புரட்சி நடந்தேறிய நாட்டுக்குள்ளேயே புரட்சியின் பெறுபேறுகளைப் பேணுதல் முடியும் என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டார்.

இந்த விவாதமும், றொட்ஸ்கி நாட்டைவிட்டு வெளியேறியமையும் இறுதியில், கொல்லபட்டமையும், பொதுவுடைமை இயக்க வரலாற்றில் முக்கியமான பேத பொருட்களாகின. ஸ்ராலின் யுகம் சோசலிஷ ஒன்றிய வரலாற்றில் பலத்த விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் யூனியனின் வரலாறு பற்றிய பிரச்சினைகள் அக்டோபர் புரட்சியின் உலக நிலை முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் குறைத்துவிட முடியாது. அக்டோபர் புரட்சியின் அதிமுக்கியமான சர்வதேச சாதனை. அது கார்ல் மார்க்ஸ், பிரடெறிக் ஏங்கெல்ஸ் ஆகியோரால் கட்டமைக்கப் பெற்று 19ம் நூற்றாண்டில் கடைசி ஐந்து தசாப்தங்களிலும் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் அரசியல் இயக்க முக்கியத்துவம் கொண்ட ஓர் அரசியற் சித்தாந்தம் அது சுட்டிய மானுடத்தளை நீக்கப் பண்பு காரணமாக ஒரு நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கும் புதிய ஆட்சி முறைமைக்குமான அரசியற் தளமாகக் கொள்ளப் பட்டதேயாகும். அதாவது மார்க்ஸீயம் புதிய அரசியல் விடுதலைக்கான சித்தாந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமையாகும்.

இவ்வாறு ஓர் அரசியற் சித்தாந்தத்தைத் தனது இலக்காகவும், அது கூறும் நடைமுறைச் செயற்பாடுகளை தனது வழிகாட்டியாகவும் ஒரு நாட்டினால் மேற்கொள்ளப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

ரஷ்யாவில் புரட்சிகர மாற்றங்கள் தோன்றத் தொடங்குவது ஏறத்தாழ 1905 லிருந்தே காணப்படுகின்றன எனினும் பெப்ரவரி 17ல் ஓர் ஆட்சி மாற்றமே ஏற்படுகின்றதெனினும் (கெரென்ஸ்கிளின்) இடைக்கால அரசாங்கம் ஏற்படுகின்றதெனினும் அக்டோபர் புரட்சியே அந்த ஆட்சி மாற்ற நடைமுறையின் சிகரமாக அமைந்தது.

அந்த வகையில் 1917இன் அக்டோபர் புரட்சி உலக விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய கட்டமாக அமைகின்றது.

இந்த சாதனை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்தவர் விளாடிமீர் இலிச் லெனின் என்பவராவார். அக்டோபர் புரட்சிக்கு அவர் வழங்கிய தலைமை மிக முக்கியமானதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களெனப் போற்றப்பட வேண்டியவர்கள் இருவராவர். ஒருவர் மகத்மாவெனப் போற்றப்பட்ட மோகனதாஸ் கரம்சந் காந்தி, மற்றவர் லெனின் ஆவார். இவர்களிருவரும் தத்தம் நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களாவார். இவர்கள் இருவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அரசியல் யுக்திகளைக் கையாண்டவர்களாவார். சத்தியாக்கிரகம் எனும் நடைமுறையை காந்தியும், மார்க்சிய புரட்சிகர முறைமையை லெனினும் கையாண்டனர். அடிப்படையை நோக்கும் பொழுது இரண்டு நாடுகளும் வேண்டி நின்ற விடுதலைகள் வெவ்வேறு நிலைப் பட்டவைகளாகும். ஒன்று காலனித்துவ ஆட்சிக்கெதிரான சுதந்திரப் போராட்டமாகும். மற்றது அந்நாட்டின் சுதேச ஆட்சி முறையே எனினும் அதன் கொடுங்கோன்மை காரணமாக எதிர்க்கப்பட்டதாகும். இரு தலைவர்களுமே தமது கொள்கைகள் இலட்சியங்களுக்கேற்ப போராட்ட முறைகளை வகுத்துக் கொண்டனர்.

காந்தீயம் அரசியலையும், ஆன்மீகத்தையும் இணைக்க முனைந்தது. ஆனால் அவ்விணைவு பெருவெற்றியை ஈட்டியது எனக் கூறிவிட முடியாது. சுதந்திர இந்தியாவிலே காந்தீயத்தை ஓர் அரசியல் நடைமுறையாகக் கொள்வதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டன. காந்தியினுடைய மிக நெருங்கிய சிஷ்யரான நேருவினாலே கூட காந்தீயத்தை ஓர் அரசியல் நடைமுறையாக்க முடியவில்லை.

ஆனால் லெனினை எடுத்துக் கொண்டால் லெனின் கையாண்ட நடைமுறை லெனினது மறைவின் பின்னரும் போற்றப்படுகின்றது.

உலக வரலாற்றில் லெனினுக்குரிய இடம் அவர் மார்க்ஸீயத்தை செயல் சாத்தியமான அரசியல் நடைமுறை ஆக்கியமையாகும். அரசியல் சித்தாந்தங்கள் பற்றி மார்க்ஸ் குறிப்பிடும் பொழுது "தத்துவ ஞானிகள் உலகின் இயல்புகளை விளக்கியுள்ளனர். ஆனால் முக்கியப்படுவது யாதெனில் உலகத்தை மாற்றுவதேயாகும்" மார்க்ஸீயம் எனும் சித்தாந்தத்தை கையேற்று அதனை ஆட்சி முறை நின்ற யதார்த்தமாக்கியது லெனினின் செயற் பாடுகளாகும். இதனாலேயே சோவியத் ஒன்றியத்தின் தோற்றத்தின் பின்னர் தத்தம் நாடுகளிலே மார்க்ஸிய ஆட்சியைக் கொண்டுவர விரும்பிய தலைவர்கள் மாக்சீயம் என்று மாத்திரம் கூறிவிடாது மார்க்ஸீயம் லெனினிஸம் கூறுவர்.

லெனினது சாதனை மார்க்ஸீயத்தை புரட்சிப் போராட்ட நிலையிலும் புரட்சி நிறைவேற்றப்பட்ட பின்னரும் அதனை ஒரு சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கான செயற் திட்டக் நடைமுறைக் கோவையாக்கியமையாகும். இது ஒரு முக்கியமான பங்களிப்பாகும். ஏனெனில் மார்க்ஸீய சித்தாந்த நிலையிலே கூறப்பெற்றிருந்த பலவற்றை லெனினது தலைமை ரஷ்யாவின் தேவைகளுக்கேற்ப திரிபு எதுவும் ஏற்படாமல் நடைமுறைப் படுத்தியதாகும். உண்மையில் லெனினின் மறைவின் பின்னரே சோவியத் ஒன்றியத்தின் ஆட்சி முறைபற்றிய விமர்சனங்கள் ஏற்படத் தொடங்கின.

ஏற்கனவே கூறியபடி மார்க்ஸீஸம், லெனினிஸம் ஆனதும் அது செயற் சாத்தியப் பாடுடைய ஒரு புரட்சிகர நடைமுறையானது. உண்மையில் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் போக்கை நிர்ணயிப்பவர்களுள் லெனினினது இடம் மிகப் பெரியதாகும்.

அக்டோபர் புரட்சி சோவியத் யூனியனிலே வலுவிழந்த நிலையிலே உள்ளதெனினும் உலக நாடுகளுக்கு குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுப் பாடமாக அமைகிறது.

தென்னாசியா சூழலில் காலனித்துவ அனுபவங்களினாலே பாதிக்கப்பட்ட நாடுகளிலே பொதுவுடமைக் கட்சி மேலாண்மை மிக முக்கியமான ஓர் அம்சமாக உள்ளது. அதுவும் அந்தந்த பிரதேச மக்களின் நிலப் பகிர்வு வழியாகத் தோன்றிய பிரச்சினைகள் கூர்மையடைந்தவிடத்து பொதுவுடமைக் கட்சிகள் நிர்வாக அதிகாரத்தைப் பெறும் நிலமையை அடைந்தன. இந்தியாவில் மேற்கு வங் காளத்தில் ஏறத்தாழ ஒரு கால் நூற்றாண்டுக்கு மேலாக மார்க்ஸிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் ஆட்சியே தொடர்ந்து நடைபெறுகிறது. கேரளத்தில் பொதுவுடமைக் கட்சியின் தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அடிக்கடி மாநில நிர்வாகத்தை நடத்தி வந்துள்ளது.

அக்டோபர் புரட்சியின் ஆசிய ஆபிரிக்க தாக்கத்தைப் பற்றிப் பேசும் பொழுது 1960 களின் பிற்பகுதி 70களின் தொடக்கத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இறுகிய பிடியை தளர்த்துவதற்காக சோவியத் யுனியன் மேற்கொண்ட அணிசேரா நாடுகளின் அரசுகளுக்கு வழங்கிய அடிநிலை ஆதரவு அணிசேரா நாடுகளின் செயற்பட்ட பொதுவுடமைக் கட்சிகளுக்கு அவ்வவ் அரசுகளை ஆதரிக்க வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது.

இப்படியான பல சம்பவங்களின் திரட்சி காரணமாக பல்வேறு நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டது. இது சோவியத் சார்ந்த கம்யுனிஸ்ட் கட்சிகள் என்ற அடிப்படையிலேயே வேறுபாடுகள் ஏற்பட்டன.

இக்கட்டத்தில் சீனாவின் சோசலிச புரட்சிப் பற்றியும், அது மாவோ சேதுங்கினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமை சோவியத் ஒன்றியத்திற்கும் சீன பொதுவுடமை இயக்கத்திற்குமுள்ள உறவு பற்றியும் ஒரு சிறு குறிப்பாவது வருதல் அவசியமாகிறது. ரஷ்ய

புரட்சியின் பொழுது ரஷ்ய சூழ்நிலைகள், உந்துதல்கள், யாவற்றுக்கும் மேலாக கிடைத்த தலைமை ஆகியன ஒன்றிணைந்தே சோவியத் வெற்றியையும், நிலைப்பாட்டையும் தீர் மானி த்தன வரலாறும் குறிப்பாக அதன் அடிப்படையான பொருளாதார சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்ட முறைமையையும், சீனா வுக்கு பக்கத்தில் உள்ள ஜப்பான செயற்திறன் மிக்க ஒரு நாடாக மேற்கிளம்பியமையும், சீனப் பொதுவுடமை இயக்கத்தின் வளர் நிலை களை பாதித்தன. இன்று பின்னோக்கி பார்க்கும் போது மாவோ சேதுங்கின் மிகப் பெரிய சாதனை அவர் சீனாவில் பொதுவுடமை ஆட்சி யொன்றினை சீனப் பாரம்பரிய நிலமைகளுக்கும் தேவைகளுக்குமேற்ப அமைத்துக் கொண்டமையாகும்.

இதற்கான சிறந்த உதாரணம் மாவோவின் எண்ணக்கருக்களை (Thought Of Mao) மாவோ வின் சிந்தனைகள் என்றே சொல்வர். சீன மரபில் கொன்பியுசியஸ்ச்ப் (Conficius) பற்றிக் குறிப்பிடும் போது Thoughts Of Conficius என்றே குறிப்பிடுவர். ரஷ்யப் புலமை மரபில் Thought Of Lenin என்றோ Thoughts Of Stalin என்றோ சொல்கிற மரபு கிடையாது. சீனப் புரட்சி விவசாய நிலைப் புரட்சியாகவே கருக் கொண்டு நிறைவேற்றப்பட்டது. உண்மையில் உலக கம்யுனிஸ வளர்ச்சி நிலையில் மார்க்ஸ், லெனின், (ஸ்ராலின்) ஆகியோருக்குள்ள முக் கியத்துவம் மாவோ சேதுங்கிற்கும் உண்டு. அவரது சாதனை சீனாவில் ஒரு சோசலிஸ புரட்சியை சீனப்புரட்சியாகவே வழிநடத்தி வெற்றியீட்டியமையாகும். பொதுவுடமை இயக்கம் பற்றிய வேறுபாடுகள் இறுதியில் கருத்து நிலை வேறுபாடுகளாக மாறும் நிலைமை மிக நுண்ணியதாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

அந்தந்த நாடுகளின் புரட்சி போராட்ட நிலைமை, வர்க்க உணர்வு நிலைமை ஆகிய வற்றிலும் பார்க்க சோவியத் யூனியன் அல்லது சீனா சம்பந்தப்பட்ட நாட்டின் அரசியலில் பெற்றிருந்த இடத்தைக் கொண்டு தீர்மானிக் கப்படுவதாயிற்று. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இடதுசாரிக் கட்சிகளின் ஒற்று மைக்கு வழிவகுத்த அதேவேளையில் அர சாங்க கட்சிகளாக இருந்த சக்திகளை ஆதரிக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது.

இந்தியாவிலேயும் இப்பண்பு காணப் படுகின்றதென்றாலும் அங்கு நிலவும் மாநில, மத்திய அரசுகளின் வேறுபாடுகள் அடிநிலைப் பொதுவுடமை இயக்கத்தைப் பாதிக்கவில்லை. இதற்கான நல்ல உதாரணம் இந்திய லோக் சபையிலுள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணி யாகும். ஏறத்தாழ 60க்கும் மேற்பட்ட இடது சாரி எம். பிக்கள் உள்ளனர்.

ஆனால் இலங்கையில் இந்தக் கூட்டு றவு பொதுவாக இடதுசாரிக் கட்சிகளையும் தாக்கியுள்ளது. இப்பொழுதுள்ள பாராளு மன்றத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி எம் பிக்கள் ஒரு சிலரைத் தவிர எவருமிலர். ஆனால் ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் 20, 25 இடதுசாரி எம். பிக்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இலங்கையின் அரசியலின் இன்றைய நிலைமையில் பெரிய இடதுசாரிக் கட்சிகள் இனக் குழும யுத்தம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றித் தீர்க்கமான தீர்மானங் களை கொண்டிருக்கவில்லை என்பது நன்கு புலனாகிறது.

இலங்கைத் தீவின் ஒருங்கு நிலைப்பட்ட ஒற்றுமைப் பற்றி நோக்கும் பொழுது சிங்கள நிலைப்பாடு அதன் எதிர்விளைவான தமிழ் நிலைப்பாடு என அரசியற் களம் இரண்டு கூறுகளாகக் கிழிக்கப்பெற்றுள்ளது என்ற உண் மையை மறைத்துவிட முடியாதுள்ளது. இத் தகைய ஒரு சூழலில் மார்க்ஸீயக் கட்சிகளே சிங்களவர்களையும், தமிழர்களையும் சக தோழர்களாகப் பேணும் அமைப்புக்களைக் கொண்டவையாக இந்த அமைப்புக்கள் இன்று முற்று முழுதாக அரசாங்கத்துடன் நிற்பது

மல்லாமல், தமிழர் நிலைப்பட்ட தேசப் பிரச்சினைகளுக்கு தமக்கெனத் திட்டவட்ட மான ஒரு நிலைப்பாட்டினைக் கொண்டிருப் பதாகவும் தெரியவில்லை. சர்வகட்சி மாநாட் டுக்கு கூட சமசமாஜக் கட்சியினரும், பொது வுடமைக் கட்சியினரும் தத்தமது நிலைப்பாடு களைத் தெளிவாக பகிரங்கமாகக் கூறவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.

இத்தகைய ஒரு சூழலிலேதான் 1917 அக்டோபர் புரட்சியும் அதில் லெனின் வகித்த இடமும் மிக முக்கியமாகின்றன.

அக்டோபர் புரட்சியில் இடம் பெற்ற ஒரு சுலோகம் இலங்கைக்கு இன்று பொருத்த மாகவுள்ளது. அது Peace> Land and bread என்பதாகும். சமாதானம், நிலம், உணவு என இதனை மொழிபெயர்க்கலாம். இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு இலங்கை யிலுள்ள சகல இனத்தினரும் இலங்கையர் என்ற வகையில் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உரியவர்களாவார்.

அக்டோபர் புரட்சியின் வரலாறு சோவியத் ஒன்றியத்தின் வரலாற்றில் இதனைச் சாத்தியமாக்கிற்று. அத்தகைய ஒரு நடை முறையை மேற்கொள்வது அக்டோபர் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரினதும் பணியாகின்றது.

**பேராசிரியர் சிவத்தம்பியின் 1ஆம் வருட நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

*Best wishes from*

Wellawatte **Saraniyaa Jewels**

No. 385, Galle Road, Wellawatte,
Colombo 06, Srilanka
Tel : 011 236 0611 / 236 4611
www.saraniyajewels.com

# மறைக்கப்பட்ட ஆளுமைகள்

## திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யரை முன்னிறுத்தி..!



**லெனின் மதிவானம்**

மனித சமூக வளர்ச்சிப் போக்கிலே ஒவ்வொரு சமூகமும் காலத்தின் தேவைக்கேற்றவகையில் இயக்கங்களையும் அறிஞர்களையும்- புத்திஜீவிகளையும்- சமூகச் செயற்பாட்டாளர்களையும் உருவாக்கிக் கொள்கின்றது. காலத்தின் தோற்றுவாய்களான இவ்வியக்கங்கள், அதனடியாக உருவாகின்ற ஆளுமைகள் காலத்தின் உற்பத்திப் பொருளாக மட்டுமன்று காலத்தை உட்புவிப்பவையாகவும் அமைந்திருக்கின்றன. தம் காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிப்பலிக்கும் ஆளுமைகளே காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலினையும் பெற்றுவிடுகின்றன. இவ்வகையான சமூக ஆளுமைகள் தமது விசேட ஆற்றல் செயற்திறன் போன்றவற்றால் சமூக வளர்ச்சிக்கு விசைகொடுத்து தகுந்த பங்களிப்பையும் வழங்கிச் செல்கின்றனர். அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் தோன்றிய சிந்தனையாளர், சமூகச் செயற்பாட்டாளர் என்ற வரிசையில் தனித்துவமான முத்திரையைப் பதித்துச் சென்றவர் திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர். ஆற்றல் மிக்க அரசியல்வாதியாக, கவிஞராக, பத்திரிக்கையாளராக, வெளியீட்டாளராக இருந்ததுடன் களத்தில் இறங்கி செயற்பட்ட வீரருமாவார். இவர் குறித்த கட்டுரைகள் அவ்வப் போது வெளிவந்துள்ளன என்ற போதினும் அவை அம்மையாரின் ஆளுமையை முழுமையாக வெளிக் கொணரவில்லை என்றே கூறவேண்டும்.

திருமதி மீனாட்சியம்மையார் எழுதிய அனைத்தும், குறிப்பாக பத்திரிகைகளில் அவர் தமது சொந்தப் பெயரிலும் புனைப்பெயரிலும் (இதுவரை எந்த தகவலும் இல்லை) எழுதிய கட்டுரைகள் யாவும் இதுவரை நூலுருப் பெறவில்லை. மீனாட்சியம்மாள் எழுதிய நூல்களாவன 'இந்தியத் தொழிலாளர் துயரச்சிந்து - இரண்டு பாகங்கள்(1931-சகோதரி அச்சகம், அட்டன்), இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை (1940-கணேஸ் பிரஸ், அட்டன்). இரண்டாவது நூல் பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் மறுப்பதிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது தொகுப்பே இன்றைய ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்றது. இதனை ஆதாரமாக கொண்டே மீனாட்சியம்மாளின் ஆளுமையை மதிப்பிட முனைந்துள்ளனர். இவர்களின் ஆய்வுகள் கவனத்தில் கொள்ளத்தக்கது என்ற போதினும் அம்மையாரை வெறும் கவிஞராக மட்டுமே கண்டு அமைதி காணும் மயக்கம் தொடர்ந்தும் நிலவி வருவதை அவ்வெழுத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. சாரல் நாடன், சித்திரலேகா மௌனகுரு, லெனின் மதிவானம் முதலானோர் மீனாட்சியம்மாள் பற்றி எழுதிய கட்டுரைகளில் தேசபக்தன் பத்திரிகையில் வெளிவந்த அம்மையாரின் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருந்தனர். இவ்வம்சம் அவரைக் கவிஞராகப் பார்ப்பதற்கு அப்பால் தொழிற் சங்கவாதியாக, அரசியல்வாதியாக, பத்திரிகையாளராக, சமூக செயற்பாட்டாளராக பார்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன. அண்மையில் இக்கட்டுரையாசிரியர் மீனாட்சியம்மையார் தேசபக்தனில் எழுதிய கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றினைத் தொகுத்து

நூலாக்கும் முயற்சியில் ஈடுப்பட்டுள்ளார். இத்தொகுப்பு மீனாட்சியம்மாள் பற்றிய ஆய்வுகளுக்குச் சிறப்பான பங்களிப்பினை நல்கும் என்ற போதினும் இதுவே முடிந்த முடிபாகவும் ஆகிவிடாது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவற்றை ஆதாரமாக கொண்டு நோக்குகின்ற போது மீனாட்சியம்மாளின் முழு ஆளுமையையும் வெளிக்கொணரத்தக்க வகையிலாக பன்முக ஆய்வொன்று இதுவரை வெளிவராமை துரதிஸ்டவசமானதொன்றே. நடேசய்யரின் பங்களிப்புகள் வெளிக் கொணரப்பட்ட அளவு அம்மையாரின் பங்களிப்பு வெளிக் கொணரப்படவில்லை என்றே கூற வேண்டும். அந்தவகையில் மீனாட்சியம்மாள் பற்றிய ஆய்வுகள் தொடக்கநிலையில் கூட இல்லை என்றே கூறத் தோன்றுகின்றது. எனவே மீனாட்சியம்மாள் மறைக்கப்பட்ட ஆளுமையாகவே உள்ளார். இது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அத்தகைய தேடுதல் முயற்சியும் சிந்தனையும் மறைக்கப்பட்ட மறைக்கப்பட்ட பல ஆளுமைகளை வெளிக் கொணருவதற்கான உந்துதலாகவும் அமையும்.

அரசியல், பொருளாதாரத் துறையில் எவ்வாறு ஆதிக்க சக்திகளின் ஆதிக்கம் நிலவுகின்றதோ அவ்வாறே சிந்தனைத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் அதன் பாதிப்பினைக் காணலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆதிக்கச் சிந்தனைகள் பொருளாதார அரசியல் பலத்தினைக் கொண்டு அவை தமது சிந்தனைகளை: பண்பாடுகளை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தி வருகின்றனர். மனித வரலாற்றில் தனிச்சொத்துரிமை தோன்றிய பின்னர் வர்க்கச் சமுதாயத்தில் அதன் பக்க விளைவுகளான சுரண்டலும் வர்க்க முரண்பாடுகளும் தோன்றி சிந்தனைத் துறையிலும் தாக்கம் செலுத்தியது. அதிகார வர்க்கம் பொருளாதாரப் பலத்தினைக் கொண்டு தமக்குச் சாதகமான கல்வெட்டுகளையோ சாசனங்களையோ ஆக்கினார்கள். இந்தச் சூழலில் இலக்கிய கர்த்தாவோ, அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளனோ தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரச- பொருள் படைத்தவர்களின் நிழலில் நின்று தமது இலக்கிய அரசியல் பணிகளை முன்னெடுத்தனர். இது தொடர்பில் சுவாரசியமான கதையொன்றும் உள்ளது. சங்க காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கதையொன்றில் நாட்டில் போர் தலை விரித்தாட அதனையொட்டிய ஊர்கள் எரியூட்டப்பட்டு அதன் வெளிச்சத்தில் கொள்ளையடிக்கப்படுகின்றது. அரண்மனைகளை அலங்கரிப்பதற்காக குடும்பக் கொழுந்துகளையெல்லாம் இழுத்து செல்லும் காட்சிகள் ஒருபுறம்: கூடவே பிள்ளைகளின் கதறல்கள், விதவைகளின்- மக்களின் மரண ஓலங்கள:' இவை யாவற்றையும் கண்ணால் பார்க்க முடியாத செவியால் கேட்க முடியாத புலவனொருவன் ஏனையோரையும் கூட்டி மன்னனின் மனைவியின் கூந்தலில் நறுமணம் உண்டா இல்லையா என தமிழாராய்ச்சி செய்துக் கொண்டிருந்தானாம். இன்றுவரை இவ்வராய்ச்சிகள் வெவ்வேறுவடிவங்களில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு மாறாகப் பொது மக்கள் சார்பான எழுத்தாளர்களும் கலைஞர்களும் காலத்திற்குக் காலம் தோன்றாமலில்லை. கல்வெட்டுகளும் சாசனங்களும் மக்களுக்கு எதிரானவையாகத் தோன்றிய போது அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து உடைத்தும் உள்ளார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் எத்தனையோ எழுத்தாளர்கள் கலைஞர்கள் பத்திரிகையாளர்கள் படு கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். இந்தப் பின்னனியில் தான் மனித குலத்தின் பயனங்கள் தொடர்கின்றன, ஓர் இடைவிடாத போராட்டமாய்..!

இத்தகைய புரிதலுடன் மக்கள் சார்பாகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்த ஆளுமைகள் குறித்து நோக்குகின்ற போது அவை வெறும் நாமம் மட்டுமல்ல. இயங்கு சக்திகளாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் உழைக்கும் மக்கள் நலன்சார்ந்த பதாகைகளை உயர்த்திய அவர்களின் வெற்றிகள், சவால்கள், விருப்பு வெறுப்புகள், தோல்விகள் இன்னும் இது போன்ற எண்ணுக்கணக்கற்ற அனுபவங்கள் அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமைந்திருக்கின்றன. இவ்விடத்தில் நாம் பிறிதொரு விடயம் குறித்தும் தெளிவு பெற வேண்டியுள்ளது. அதாவது இவ்வாளுமைகளின் வெற்றிகள் மட்டுமல்ல தேல்விகள் கூட அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்ஷனமாக அமைந்துள்ளன. இவ்வகையான ஆய்வுகளை ஆழமான-நுட்பமான- மார்க்சிய ஆய்வுகளின் ஊடாகவே வெளிக் கொணர முடியும்.

இலங்கையுடன் இந்தியாவை ஒப்பிட்டு நோக்குகின்றபோது சமூக ஆளுமைகள் ஓரளவு வெளிக் கொணரப்பட்டுள்ளன என்றே கூறத்தோன்றுகின்றது. பாரதி, அம்பேத்கர், அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், கோதாவரி பாருலேகர் முதலான ஆளுமைகள் பற்றிய தேடுதல்கள் இடம் பெற்றுள்ளன. இதனூடாகப் பல விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

அந்தவகையில் மலையக ஆளுமைகள் குறித்து நோக்குகின்றபோது அது குறித்த தேடுதல் முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற எண்ணமே தோன்றுகின்றது. மலையக சமூக வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியவர்களான கோ. நடேசய்யர், திருமதி மீனாட்சியம்மையார் அமரர்கள் கே. இராஜலிங்கம், சௌமிய மூர்த்தி தொண்டமான், அஸிஸ், இளஞ்செழியன், சி.வி வேலுப்பிள்ளை, வீ. கே. வெள்ளையன், வீ.ரி. தர்மலிங்கம் இன்னும் இது போன்ற ஆளுமைகள் குறித்த கனதியான ஆய்வுகள் இதுவரை தோன்றாமை பெரும் துரதிஸ்டமே. இவற்றுக்கு அப்பால் மலையக சமூகம் பற்றிய ஆய்வுகள் வெளிவந்திருப்பினும் அவை இவ்வாளுமைகள் குறித்து ஆழ்ந்த கரிசனைக் காட்டத் தவறிவிட்டன என்றேக் கூறத்தோன்றுகின்றது. அரசியல், கலை, இலக்கிய துறைகளில் காணப்படுகின்ற குழு இழுபறி நிலையும் இவ்வாளுமைகளை ஆய்வு செய்வதில் பல தடைகளை ஏற்படுத்தியுள்ளன. இது இவ்வாறிருக்க இன்று இவ்வாளுமைகள் படிப்படியாக மறக்கப்பட்டு வருகின்றன. மலையகத் தோட்டங்களில் மூத்த தலைமுறையைச் சேர்ந்த சிலர் வீட்டில் தான் அமரர் தொண்டமான் அவர்களின் படங்கள் காணப்படுகின்றன. அதுவும் மிக குறைவு.

இந்தச் சூழல் மலையகத்திற்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. பொதுவாக நூல்ப் பதிப்பில் முக்கிய கவனமெடுத்து வந்த இலங்கையின் வடக்கில் கூட சில ஆளுமைகள் மறைக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. நீர்வை பொன்னயன் அவர்களின் வழிகாட்டலுடன் இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் ‘வடபுலத்து இடதுசாரி முன்னோடிகள்’ என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளனர்’. இந்நூலாக்க முயற்சியில் ஈடுபட்ட போது வட புலத்தைக் களமாகக் கொண்டு இயங்கிய சில இடதுசாரி முன்னோடிகள் குறித்த தகவல்களைப் பெறமுடியாது உள்ளது என நீர்வை பொன்னயன் இக்கட்டுரையாசிரிடம் வேதனையோடு தெரிவித்துக்கொண்டார். திரு. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண மத்தியக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். இராமசாமி ஐயர், எஸ். கே. கந்தையா இவ்விருவரும் தான் ‘கம்யூனிட் கட்சி அறிக்கை’ என்ற நூலை முதன் முதலில் (இந்தியாவிலும் பூரணமாக மொழிமாற்றம் செய்திருக்கவில்லை) தமிழில் மொழிமாற்றம் செய்தவர்கள். காதர் இன்னொரு இடசாரி இயக்க முன்னோடியாகத் திகழ்ந்தவர். இலங்கையில் இடதுசாரிகளால் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்டத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியவர் கே. ஏ. சுப்பிரமணியம். இலங்கையின் வடபுலத்துச் சமுதாயச் சூழலை

உணர்ந்து அதற்கேற்றவகையிலான போராட்டங்களை மார்க்சிய நிலைப்பாட்டில் நின்று முன்னெடுத்ததில் தோழர் கே.ஏ. சுப்ரமணியம் அவர்களுக்கு முக்கிய இடமுண்டு. அவர் பொறுத்து வெளிவந்த நினைவு மலர் அவருடைய பங்களிப்பைக் கூறினும் அது முழுமையடையவில்லை என்றே கூறவேண்டும். இவ்வாறே கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கிய சில இடதுசாரி முன்னோடிகள் ஆய்வுகளும் நம்மிடையே இல்லை. கேரளாவைச் சேர்ந்த தோழர் கே.வி. கிருஸ்ணக்குட்டி, சுபத்திரன், சாருமதி முதலானோர் குறித்த தேடல்கள் இன்று அவசியமானவையாக இருக்கின்றன. இவ்வகையில் பார்க்கின்றபோது மானுட நலனுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பல ஆளுமைகள் மறைக்கப் பட்டவையாகவே உள்ளன. இந்தப் புரிதலோடு மீனாட்சியம்மாள் பற்றிய தேடுதல்களை முன்னெடுக்கின்ற போது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

1. மலையக ஆளுமைகள் பற்றி முழுமையாக விபரப் பட்டியலோ, சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளோ பூரணத்துவமாக இல்லை.
2. மலையக எழுத்தாளர்களின் படைப்புகளில் அனேகமானவை நூலுருப் பெறவில்லை. மூத்த எழுத்தாளர் பலரின் ஆக்கங்கள் கூட இதுவரை நூலுருப் பெறவில்லை. அவ்வாறு நூலுருப் பெற்ற படைப்புகளைக் கூட இன்று பெற முடியாத நிலை காணப் படுகின்றன.
3. மலையக ஆளுமைகள் தொடர்பாகச் சேகரித்து வைத்திருந்த பல ஆக்கங்கள், ஆய்வுகள் என்பன மலையகத்தில் இடம் பெற்ற இன வன்முறைகளின் போது அழிந்து விட்டன.
4. மலையக ஆளுமைகள் தொடர்பாகச் சேகரித்து வைத்துள்ள பத்திரிகைத் துணுக்குகளை தேடிப் பெறுவதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்கள்.
5. மலையகப் படைப்புகள், எழுத்தாளர்களின் விபரங்களை உள்ளடக்கிய ஆவணக் காப்பகம் ஒன்றில்லாமை.
6. மலையகத்திலுள்ள பெரும்பாலான வாசிகசாலைகள் ரமணிச்சந்திரன், பாலகுமாரன் போன்றோர்களின் நூல்களினால் நிரப்பப்பட்டுள்ளன. மலையகம் சார்ந்த நூல்களை இங்கு பெற முடியாது உள்ளது.
7. மலையக அரசியல், சமூக, இலக்கிய வரலாறு பற்றிய பூரணத்துவமான ஆய்வு நூல் ஒன்று இதுவரை காலமும் எழுதப் படவில்லை.

இந்நிலையில் மீனாட்சியம்மாள் பற்றிய தேடுதலுக்கு ஏற்ற இடமாக இலங்கையின் தேசிய சுவடிகள் திணைக்களம் மாத்திரமே அமைந்து காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் எழுத்தாளர்கள் ஆய்வு அறிஞர்கள் தே.சு.தி உபயோகிக்கின்ற நிலை மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது. தே.சு.தி.த்தைப் பிரயோகித்து கனதியான தகவல்களை வெளிக் கொணர்ந்ததில் சாரல் நாடனுக்கு முக்கிய இடமுண்டு. இத்தகைய அனுபவங்களுடன் மீனாட்சியம்மாள் குறித்த தேடுதலை இக்கட்டுரையாசிரியர் மேற்கொண்ட போது ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களையும் இவ்விடத்தில் பகிர்ந்து கொள்வதும் அவசிய மானதாகும்.

தே.சு.தி. இல் தமிழ் அலுவலகர்கள் (அடிநிலை ஊழியர்கள் கூட) இல்லாத நிலையில் தமிழறிவையோ ஆங்கில அறிவையோ மட்டும் அறிந்து வைத்திருப்பவரால் - சில சமயங்களில் சிறிதளவு சிங்கள அறிவுடையவர்களாலும் இத்திணைக்களத்தில் தொழில்

புரியும் அலுவலகர்களுடன் கலந்துரையாடி ஆவணங்களைப் பெற முடியாத நிலை காணப் படுகின்றது. சட்டத்திட்டங்களும் கடுமை யானதாக இருப்பதனால் ஆய்வு அல்லது தகவல்களைத் தொகுக்கும் ஆர்வம் கொண்ட வர்கள் யாவரும் இந்நிறுவனத்திற்குள் செல்ல முடியாத நிலைக் காணப்படுகின்றது. அத்து டன் இங்குள்ள ஆவணங்கள் மிகவும் பழு தடைந்து எளிதில் சேதப்பட்டு அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றன. எனவே அவற்றை வாசிக்கின்ற போதும் அவற் றைப் பிரதியெடுக்கும் போது காணப்படு கின்ற தெளிவின்மைகள் காரணமாகவும் உரிய தகவல்களைத் தேடிப் பெற முடியாத நிலை உள்ளது. இதற்கு அப்பால் இத்துறையில் தேட லையும் ஆய்வுகளையும் மேற் கொண்டவர் கள் தங்கள் மீது கொண்ட அளவுக்கதிகமான காதல் காரணமாக, தமக்குப் பின் இத்துறை யில் வேறுயாரும் ஆய்வுகளைத் தொடரக் கூடாது என்ற எண்ணத்தில் பழுதடைந் திருக்கின்ற அவ் ஆவனங்களை சிதைத்து, அதன் பக்கங்களை மாற்றி அல்லது சில பக் கங்களே இல்லாதளவிற்கு அவற்றை மறைத்து விடுகின்ற பணியினையும் செய்திருக்கின் றார்கள். மீனாட்சியம்மாள் போன்ற மறைக்கப் பட்ட ஆளுமைகள் தொடர்பில் ஆவனங் களைப் பெறக் கூடியதாக உள்ள ஒரே இட மான தே.சு.தி. இலும் இவ்வாவணங்களைப் பெற முடியாதுள்ளது.

நடேசய்யர் இலங்கைக்குக் குடியேறிய பின்னர் ஒன்பது தமிழ் நூல்களையும் இரண்டு ஆங்கில நூல்களையும் எழுதிப் பிரசுரித்தார். இவைகளுள் 'அழகிய இலங்கை' என்ற நூல் இந்தியாவில் அச்சிடப்பட்டது. மலையகத்தில் அட்டன் நகரில் கணேஸ் பிரஸ், சகோதரி அச்சகம் என்ற இரு நிறுவனங்களை ஏற் படுத்தி, தனது மனைவியை வெளியிட்டாள ராகக் கொண்டு இவைகளை இவர் வெளி யிட்டிருந்தார். இவைகளுள் 'நரேந்திரபதியின் நரக வாழ்க்கை' என்ற நூல் 226 பக்கங்களில் இரண்டு ரூபா விலைக்கு அச்சிடப்பட்டிருந் தது குறிப்பிடத்தக்கது. 1933 இல் வெளியான இந்த நூல் பிரசுர துறையில் ஒரு சாதனை யாகும் (சாரல் நாடன் -1997), மலையகம் வளர்த்த தமிழ், துரைவி வெளியீட்டகம், கொழும்பு,ப.44) இவ்வாறு வெளிவந்த நூல் கள் யாவற்றையும் இப்போது பெற முடியா துள்ளது. மேலும் இது தொடர்பான தகவல் தெரிந்தவர்களைத் தேடியறிவதும் சிரமமாக உள்ளது. அவர்களில் சிலர் இன்று மறைந்து விட்டமை இன்னொரு துரதிஸ்டவசமான நிகழ்வாகும். அம்மையாரின் புனை பெயர்கள் பற்றிய எந்த விதமான தகவல்களும் இது வரை கிடைக்கவில்லை. கைலாசபதி, செ. கணேசலிங்கம் முதலானோரின் ஆக்கங்கள் வெளிவந்த பிரசுரங்கள், காலம், வெளியீட் டாளர்கள்- சில சமயங்களில் ஆக்கங்கள், நூல்கள் பற்றிய தகவல்களுடன் நூலக வியலாளர் என். செல்வராஜா தொகுத் துள்ளார். இவை சமூக ஆளுமைகள் பற்றிய ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளன. மீனாட்சியம்மாள் உட்பட மலையக எழுத் தாளர்களின் எழுத்துக்கள் இவ்வாறு பட்டியற் படுத்தப்படவில்லை.

மீனாட்சியம்மாள் தேசபக்தன் பத்திரிக் கையில் எழுதிய கட்டுரைகள் அம்மையாரின் எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதி பலிக்கின்றன. அந்தக் கால அரசியல்- தொழிற் சங்க நடைமுறைகளையும் அரசியல் தலைவர் களின் ஒழுக்கத்தையும், நேர்மையையும் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. மற்றும் சமூகத்தில் பெண்களுக்குரிய ஸ்தானம் எத்தகையது என்பதையும் பெரியாங்கங்காணி சம்மேளனத்துக்கு எதிரான போராட்டங்கள், தொழிலாளர் நலனசார்ந்த முன்னெடுப்புகள், சர்வசன வாக்குரிமை பற்றிய அம்மையாரின் பார்வையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவர் தேசபக்தன் பத்திரிகை ஆசிரியராகவும் சில காலம் கடமையாற்றி யிருந்தார். பத்திரிகையாளருக்குரிய நேர்மை,

அர்ப்பணிப்பு, திறமை எவ்வாறு அம்மை யாரிடம் காணப்பட்டது என்பதையும் இவ் வாறான தேடுதல்களின் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

சமூக ஆளுமைகள் குறித்த தேடுதலை மேற்கொள்கின்ற போது கவனத்தில் கொள்ளத் தக்க விடயங்கள் பற்றியும் இவ்விடத்தில் சிந்தித்தல் அவசியமானதாகின்றது.

அம்மையாரின் ஆக்கங்களைத் தொகுப் பதற்கு முன்னர் அவரது புனைபெயர்கள் (இருந்திருப்பின்),அவரது ஆக்கங்கள் வெளி வந்த பிரசுரங்கள் பற்றிய தேடுதல் அவசிய மானதும் பயன்மிக்கதுமாகும். அதன் பின்னணி யில் அவரது ஆக்கங்களைத் தொகுப்பதற் கான 'மீனாட்சியம்மாள் பதிப்புக் குழு' ஒன் றினை அமைத்தல் காலத்தின் தேவையாகும். தனியொருவரின் முயற்சியை விட கூட்டு முயற்சி பயன்மிக்கதாகவும் பணியை இலகு படுத்துவதாகவும் அமையும். இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள ஆர்வலர்கள், அறி ஞர்கள் ஒன்று கூடி இம் முயற்சியினை மேற் கொள்ளவது சிறப்பானது. 1950 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தால் நிறுவப்பட்ட 'பாரதி பதிப்புக் குழு' பாரதி பற்றிய ஆக்கங்களை தொகுப்பதில் பங்காற்றியுள்ளமையை நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

அந்தவகையில் அம்மையாரின் ஆக்கங் கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அடக்கத் தொகுப்பொன்று வெளிவருகின்ற போது காலக் குறிப்பும் பின்குறிப்பும் அவசியமான தொன்றாகும். ஒரு ஆளுமையின் ஆத்ம விகா சிப்பைப் புரிந்துக் கொள்வதற்கும் காலச் சூழ லில் வைத்து அவ்வாளுமைகளை ஆய்வு செய்வதற்கும் அத்தகைய பதிப்புகள் அவசிய மானவையாகின்றன. பதிப்பு முயற்சிகளின் போது முந்திய பதிப்புகள் மட்டுமன்றி கையெழுத்து பிரதிகள் வெளிவந்த பத்திரிகைத் துணுக்குகள் என்பனவும் கவனத்திலெடுக்கப் பட வேண்டும். மீனாட்சியம்மையாரின் படைப்புகளைப் பொறுத்த மட்டில் கையெழுத் துப் பிரதிகளைப் பெறுவது சாத்திமற்றதாகவே உள்ளது. ஆனால் ஏனைய விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் முக்கியமானதாகும்.

மீனாட்சியம்மாள் போன்ற ஆற்றல் மிக்க ஆளுமைகளின் எழுத்துக்கள் பல நிலைகளில் பயன்படுவன. எனவே பல வகையான பதிப் புகள் அவசியமாகின்றன. இவை யாவற்றுக் கும் மூலாதாரமான 'சுத்த பதிப்பு' ஒன்று முத லிலே வரவேண்டியது மிக மிக அவசியமான தாகும்.மேலும் பல வகையான பதிப்புகளும் வேண்டப்படுவனவாகும். ஆராய்சியாளருக் குப் பெரிதும் பயன்படும் வகையிலான கால அடைவுப் பதிப்புகள், பாடபேத வளப் பதிப்பு கள், பொருளடிப்படையிலான பதிப்புகள், இலக்கிய சுவைஞர்களுக்கான தேர்ந்தெடுத்த பதிப்புகள்- பொதுமக்களுக்கு ஏற்றவாறு பொருள் விளங்கும் படியிலான பதிப்புகள் வெளி வரவேண்டியது அவசியமானதாகும். இப்பதிப்புகளைத் தொடர்ந்து சொல்லடைவு, அகராதிகள் போன்ற அடிப்படை நூல்களை ஆக்கலாம்.

இவ்வாறு புதிதாய்க் கண்டெடுக்கப்படும் மீனாட்சியம்மாளின் படைப்புகள் தக்கபடி பரிசோதிக்கப்பட்டும், அவற்றின் நம்பகத் தன்மை ஐயத்திற்கிடமின்றி நிறுவப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். வரலாற்றுச் சுருக்கங்கள், குறிப்புரைகள், சில முக்கிய தகவல்கள் என்றவகையில், சில தகவல்கள், பயனுள்ள சங்கதிகளையும், செய்திகளையும் தொகுத்தளித்தலும் வேண்டப்படுவதாகும். இவ்விடத்தில் பிறிதொரு முக்கிய விடயம் பற்றிச் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. 'பழந்தமிழ் இலக்கியங்களைப்பதிப்பிக்கும் முன்னோடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் சி. வை. தாமோதிரம்பிள்ளை, உ.வே. சாமிநாத ஐயர் முதலியோருக்கே பழந் தமிழ் நூல்கள் சிலவற்றின் பெயர்கள் சரிவரத் தெரியாத நிலையிலே, சில தமிழ் 'ஆர்வலர்கள்' வினோதமான பெயர்களுடன் சிலபல 'பழந் தமிழ்' நூற் பிரதிகளைப் பற்றிப் பேசலாயினர்.

உதாரணமாக த. மு. சொர்ணம் பிள்ளை என்பவர் 'இன்னிலை', 'ஊசிமுறி' முதலிய நூல்களைத் தாமே இயற்றிப் பழந்தமிழ் நூல்கள் எனப் பறைசாற்றினார். பிற்பட்ட ஆராய்ச்சிகளினால் இப்பொய்மை ஐயத்திற்கிடமின்றி அம்பலப்படுத்தப்பட்டதெனினும், இலக்கிய உலகிலே சிலகாலம் குழப்பத்தையும் மயக்கத்தையும் உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை. (கைலாசபதி.க. 1974, இலக்கிய சிந்தனை).

இந்நிலையில் மீனாட்சியம்மையாரின் படைப்புகளைத் தொகுக்கின்ற போதும் மூலப் பிரதிகளை மிகக் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். மூலங்களை விபரிக்கும் மனப்பாங்கும் அவசியமானதாகும். எவ்வித தகவல்களும் இன்றி மொட்டையாக ஆக்கங்களைப் பிரசுரிப்பது பல மயக்கங்களையும் குழப்பங்களையும் தோற்றுவிக்கும்.

மேலும் இத்தகைய பதிப்புகளை மேற்கொள்கின்ற போது ஏற்படக் கூடிய முக்கிய தவறுகள் தான் அப் பதிப்புகளில் அடங்கியுள்ள ஆக்கங்களைப் பற்றிப் பல்வேறு கோணங்களிலிருந்தும் நோக்கு நிலைகளிலிருந்தும் பலர் கண்டு காட்டியிருக்கின்றனர். இவ்வகையான பாரதி பற்றிய ஆய்வுகளில் பாரதியின் சொற்களையே ஆதாரமாகக் கொண்டு தமது கருத்துக்களைக் கூறியுள்ளனர். அச்சொற்கள் ஐயத்திற்கிடமானவை என்றால் அதன் முடிவுகள் என்னவாகும்?

'ஒரு சிறு உதாரணம். முப்பெரும் பாடல்களில் ஒன்று குயில் பற்றியது. இப்பாடலின் தலைப்பு குயில், குயில் பாட்டு, குயிலி, குயிலின் கதை, குயிற்பாட்டு என்றெல்லாம் வேறுப்படப் பல்வேறு பதிப்புகளிலும் குறிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். பாரதியார் குறித்த தலைப்பு யாது? 'குயிற் பாட்டு' என்ற தொடர் கவிஞரை 'இலக்கண சுத்தமான' எழுத்தாளராய்க் காட்டும்: 'குயில் பாட்டு' என்ற தொடர் கவிஞரை 'இலகு தமிழ்' எழுத்தாளராய்க் காட்டும். எது சரி? பெரும்பாலான மலிவுப்பதிப்பு நூல்களில் சந்திபிரித்தே பாரதியார் கவிதைகள் அச்சிடப்பட்டுள்ளன. இதனாற் பாரதியாரது மூலப் பாடத்தைத் திடமாக அறியும் வாய்ப்பு பலருக்குக் கிடைப்பதில்லை.

மறைக்கப்பட்ட ஆளுமைகளின் படைப்புகளைத் தொகுக்கின்ற போது இத்தகைய குறைபாடுகள் மீண்டும் மீண்டும் தலைக்காட்டாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். பெரும்பாலும் இத்தகைய பதிப்புகளில் ஏற்படுகின்ற தவறுகள் தற்செயற், குறிக்கோட் பிழைகளால் ஏற்படுகின்ற குழப்பங்களாகும். தற்செயற் பிழை என்பது தற்செயலாக ஏற்படுகின்ற எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகளால் ஏற்படுகின்றன. குறிக்கோட் பிழை என்பது ஆசிரியர் இவ்வாறுதான் எழுதியிருப்பார் என்ற நோக்கில் எழுதுவதாகும். உதாரணமாக கோ . நடேசய்யரின்

'இந்து மக்கள்
சிந்தும் வேர்வை
ரெத்தக்காசு தானே - அடா
இரவு பகல்
உறக்கமின்றி
ஏய்த்துப் பறிக்கலாமா?'

என வரும் கவிதையில் 'இந்து' என்ற சொல்லுக்கு பதிலாக 'இந்த' எனும் சொல்லை அந்தனி ஜீவா தமது கட்டுரைகளிலும் தாம் பதித்த சஞ்சிகைகளின் அட்டைகளிலும் பிரசுரிந்திருந்தார். இதனை அடியொட்டி எழுதிய ஆய்வாளர்கள் மூல கவிதையைப் பார்ப்பதற்கு பதிலாக அந்தனி ஜீவாவின் பதிப்பையே ஆதாரமாக கொண்டனர். சில வேளைகளில் இந்தத் தவறு தற்செயற் பிழையாக இருந்திருக்கலாம். ஆனால் அவை குறிக்கோட் பிழையாகவே ஆய்வுகளில் இடம் பெற்று வந்திருக்கின்றன. இவ்விடத்தில் பின் வரும் விடயம் தொடர்பிலும் கவனமெடுக்க வேண்டியுள்ளது: நடேசய்யர் அவர்களிடம் இந்து சமயம் சார்ந்த எதுகை மோனை சார்ந்த சொற்பிரயோகமாகவே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மை

யினர் என்றவகையில் கையாளப்பட்டாலும் இந்து என்ற சொற்பிரயோகம் இந்தியாவைச் சேர்ந்த மக்கள என்போருக் குரியது. பாரதி கூட இந்துக் கிறிஸ்தவர், இந்து முஸ்லிம் என்ற பிரயோகத்தை இப்பொருளில் பாவித்துள் ளார். மலையக மக்களின் நலன் குறித்த ஆழ்ந்த அக்கறையே இக்கவிதையில் முனைப்பு பெற்றிருக்கின்றது என்பதும் கவனத் தில் கொள்ளத்தக்கது (லெனின் மதிவானம் (2010), மலையகம் தேசியம் சர்வதேசம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு).

மீனாட்சியம்மாள் போன்ற சமூக ஆளு மைகளின் எழுத்துக்கள், அவரது சமூகப் பங் களிப்பு பற்றிய ஆய்வுகள் பல நிலைகளில் பயன்படுத்தப்படுவன. எனவே பல வகை யான பதிப்புகளும் அவை பற்றிய ஆய்வு களும் வேண்டப்படுகின்றன. இதுவரை நடந்த ஆக்கபூர்வமான முயற்சிகளை உறுதிப்படுத்தி இனிமேலும் முன்னேறுவது நமது கடமை. இதற்கு மீனாட்சியம்மாளின் ஆக்கங்கள் நேர் மையாகவும் விஞ்ஞான பூர்வமான தாகவும் பதிப்பித்து வெளியிடல் முதல் தேவையாகும்.

*Best wishes from*

**POOBALASINGHAM BOOK DEPOT**

202, Sea Street, Colombo 11, Srilanka
Tel : 2422321, Fax : 2337313
E mail : pbdho@sltnet.lk

# “ஜனநாயக பூர்வமான உறவினைக் கொண்டிராத எந்த நிறுவனமும் உடையும். குடும்பம் இதற்கு விதிவிலக்கல்ல”

**கவிஞரும், பெண்நிலைவாதியுமான ஔவை விக்னேஸ்வரனுடன் ஒரு நேர்காணல்**

**நேர்கண்டவர்கள்: அ. மடோனா, ச. பிரியங்கா**

**கவிதை எழுதுவதில் உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?**



பாடசாலைக்காலத்தில் கவிதைப் போட்டிகள் நடைபெற்றன. நான் க.பொ.த உயர்த்தரத் திலிருந்த போது நடைபெற்ற கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றேன். அது மிகுந்த உற்சாகத்தை தந்தது. அப்போ தெல்லாம் அதிகமான பெண் படைப் பாளிகளை சிறுகதை எழுதுபவர்களாகவே இருந்தனர். ஆயினும் எண்பதுகளின் ஆரம்பத்தல் இந்தப் போக்கில் மாற்றம் ஏற் பட்டது. நவீன கவிதையில் பெண்கள் பலரும் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கியிருந் தனர். எனது வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், எமது கிராமம் மற்றும் இந்தக் காலகட்டம் எல்லாம் சேர்ந்து தான் என்னை கவிதை எழுதுவதில் ஆர்வம் கொள்ளச் செய்தது எனலாம். எண்பதுகளின் நடுப்பகுதி அளவில் எனக்குரிய வெளிப் பாட்டு வடிவம் கவிதைதான் என்பதை நான் இனங்கண்டு கொண்டேன் என்று சொல்லலாம். அப்போது ஊர்வசி, செல்வி, சிவரமணி போன்ற பல பெண்கள் கவிதையை தமது வெளிப்பாட்டு வடிவமாக தெரிவு செய்திருந் தனர். பலஸ்தீனக் கவிதைகள், நீர் வளையங்கள் போன்ற தொகுப்புகளின் வருகை எமக்கு உற்சாகத்தை தந்தன. அக்காலகட்டத்தின் அரசி யல் சூழலில் இலக்கியத்தின் மற்றெல்லா வெளிப்பாட்டு வடிவங்களையும் விட கவிதை சக்தி வாய்ந்த வடிவமாக எமக்குத் தோன்றி யது. அந்த அரசியல் சூழல் பெண் பற்றிய மரபார்ந்த சிந்தனையை உடைத்து புதிய நோக் கில் சிந்திப்பதற்கான வழியை திறந்துவிட்டி ருந்தது. இந்த நோக்கில் எம் உணர்வுகளை வெளிப் படுத்த மிக பொருத்தமானது. கவிதை என்பதை நான் உணர்ந்தேன்.

**உங்களது கவிதைத் தொகுதியான எல்லை கடத்தல் பற்றி....**

‘எல்லைக்கடத்தல்’கவிதைத் தொகுப்பு 2000 இல் வெளிவந்தது. எல்லை கடத்தல் என்பது ஒரு குறியீட்டுத்தலைப்பு. எல்லாவிதமாகவும் விதிக்கப்படும் எல்லைகளை கேள்விக்குள் ளாக்குதலும், கடத்தலும் அவசியம் என நினைக்கிறேன். எல்லைகளை யாரும் யார் மீதும் போடமுடியாது. அது அவரவர் தெரிவுக்குரியது. நியாயமான எந்த விடயத்தின் எல்லையையும் நாம் இயல்பாகவே ஏற்றுக்

கொள்கிறோம். ஆனால் திணிக்கப்படும் எல்லைகள் எப்போதும் மீறப்பட வேண்டியவையாகவே உள்ளன.

இருப்பினும் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற எல்லை முதல் நமது நாட்டின் விடுதலைப் போராட்ட அரசியல் போட்ட எல்லை வரையான எல்லாவிதமான எல்லைகளையும் எதிர்க்கும் ஒரு குரலாகவே எனது புத்தகத்தலைப்பு 'எல்லைக்கடத்தல்' அமைந்துள்ளது. தொகுப்பில் எல்லைகடத்தல் என்ற கவிதை உண்மையில் மூன்றாவது மனிதன் சஞ்சிகையின் ஆசிரியர் மௌசரே அவர்களே. தொகுப்புக்கு 'எல்லைக்கடத்தல்' எனப் பெயரிட்டிருந்தார். அப்பெயர் முற்றிலும் பொருத்தமானதாகவே எனக்கு தோன்றியது.

**ஈழத்து கவிதை இலக்கிய வரலாற்றில் பெண் கவிஞர்களின் முக்கியத்துவம்?**

ஈழத்துக் கவிதை வரலாற்றில் எண்பதுகளுக்குப் பின்னர் பெண் கவிஞர்களின் படைப்புகள் தனித்துவமானவையாக வெளிவந்ததுடன் பெண்ணிலை நோக்கிலும் கவிதைகள் வெளிவந்தன. இது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். 'சொல்லாத சேதிகள்' என்ற தொகுப்புடன் ஆரம்பித்த இந்தப்பயணம் பெண் கவிஞர்களின் கவிதைகள் என்று பிரித்தும் பேசப்படுகின்ற ஒன்றாக இன்று வளர்ந்திருக்கின்றது. இதுவே பெண் கவிஞர்களின் வரலாற்று முக்கியத்துவம் எனலாம். உண்மையில் இந்தக் கவிதைகளின் வரவு மொத்த தமிழ்க் கவிதைகளின் மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது தமிழ் சூழலில் பெண்ணியச் சிந்தனைகள், பெண்நிலைவாத நோக்கு என்பவற்றின் பரவலாக்கத்திற்கும், விரிவாக்கத்திற்கும் இக்கவிதைகளின் வருகை முக்கிய பங்கை ஆற்றியிருக்கிறது. பெண்கள் தமது உணர்வுகளை, தமது அரசியலை துணிவுடன் பகிரங்கமாக முன்வைக்கவும். அதற்கேற்ப மொழியைக் கையாளவும் இக்கவிதைகள் வழிகோலின.

**பெண்களின் பிரச்சினைகள் பற்றி பெண்களால் மட்டும் தான் வலுவாக எழுத முடியும். இது பற்றி நீங்கள் என்ன நினைகிறீங்கள்?**

அப்படி ஒரு நிலைமை இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால் பெண்ணிய சிந்தனைகள் கோட்பாட்டுருவம் பெற்று விருத்தியடைந்தபின், பெண்களின் பிரச்சனைகள் பற்றி யாரும் எழுத முடியும் என்றே நம்புகிறேன். அது சாத்தியமும் கூட. பெண்நிலைவாத சிந்தனை தொடர்பான விவாதங்களை பெண்கள் முன்னின்று நடத்தியதைப் போல ஆண்களும் எழுதியும் பேசியும் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

உதாரணமாக பெண்களை இரண்டாம் பட்சமானவையாக காட்டும் மரபார்ந்த மொழியை நிராகரித்து இலங்கையில் முதன் முதலாக சரிநிகர் பத்திரிகைதான் எழுதியிருந்தது. எனவே பெண்ணியச் சிந்தனைகளில் அக்கறை உள்ளவர்கள் யாராலும் பெண்கள் பிரச்சனைகளை வலுவாக எழுத முடியும் என்றே நினைக்கிறேன். எனினும் இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். கோட்பாட்டு ரீதியான எழுத்துக்கள் சாத்தியமாகின்றளவுக்கு பெண்களின் பிரச்சனைகளை உணரும் நுண்ணிய திறனை இலக்கியவாதிகள் பெற்றுவிட்டார்கள் என்று கூற முடியாது. அதற்கு இன்னும் தொடர்ச்சியான போராட்டங்கள் அவசியம் என்று நினைக்கிறேன்.

**தமிழ்ச் சூழலில் பெண்ணிலைவாத சிந்தனையின் தாக்கம் பற்றி?**

தமிழ் சூழலில் பெண்நிலைவாத சிந்தனையின் தாக்கம் பெருமளவுக்கு படிந்த மத்திய

தர வர்க்கத்தில் மட்டுமே அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. நவீன சமூகமாற்றம் காரணமாக சமமான வேலைவாய்ப்பு, கல்வி என்பன கிடைக்கின்றன. இதனால் பொருளாதார தங்கியிருத்தலில் இருந்து விடுபட்டிருக்கின்றார்கள். ஓரளவுக்கு பொருளாதார சமத்துவம் பெண்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆயினும் பால்நிலைசார் வேறுபாடுகள் இன்னமும் நிலவுகின்றன. பெண்ணிய சிந்தனைகளின் தாக்கத்தினால் சுதந்திரம், தனித்துவம், கௌரவம் போன்றவற்றில் தாமும் ஆண்களுக்கு சமமானவர்கள் என்ற உணர்வு பெண்களிடையே வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் இது குடும்ப மட்டத்தில் ஜனநாயக பூர்வமான ஒரு வாழ்வு முறையை உருவாக்கவில்லை. ஒப்பீட்டளவில் முன்பு இருந்த நிலைமையைவிட இன்று பெண்ணிய சிந்தனையில் சிந்திப்பவர்களின் தொகை அதிகரித்திருக்கின்றது என்பதே ஒரு பெரிய விடயம் தானே!.

**தமிழ் சூழலில் குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் சூழலில் குடும்ப அதிகாரம் பெண்களிடம் தான் இருக்கிறது. இது உண்மையானதா? இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இது தொடர்பான ஆய்வுகள் எதையும் எனக்கு படித்ததாக ஞாபகம் இல்லை. குடும்ப அதிகாரத்தை வெறுமனே பணத்தை செலவு செய்தலுக்கான அதிகாரமாக குறுகிப் பார்க்க முடியாது. யாழ்ப்பாணத்தில் அறுபதுகளில் நிலவிய மத்தியதர வர்க்கத்தின் 'மணிஓடர்' பொருளாதாரத்தில் பெண்களிடம் குடும்ப நிர்வாகம் (வீட்டுச் செலவு, பிள்ளைகளைப் படிப்பித்தல், வளர்த்தல் போன்றவை.) தவிர்க்க முடியாமல் போய் சேர்ந்திருந்தது. அதை குடும்ப அதிகாரம் என்ற நிலையில் இருந்ததாக நான் கருதவில்லை. குடும்ப சம்பந்தமான முக்கியமான முடிவுகள் - திருமணம், சொத்து தொடர்பான விடயங்களில் பெண்

**ஔவை விக்னேஸ்வரன்**

கொழும்பு நல்லாயின் கன்னியர் மடத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் ஔவை விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம் அளவெட்டியை பிறப்பிடமாக கொண்டவர். பாடசாலைக்கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் தனது விஞ்ஞான மாணிப் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். ஈழத்தின் நவீன கவிதை வரலாற்றில் மாபெரும் கவியாற்றல் என வர்ணிக்கப்படும் மகாகவி உருத்திரமூர்த்தியின் மகளும், கவிஞர் சேரனின் தங்கையுமான அவர் கவிதை, விமர்சனம், இசை, நாடகம் மற்றும் பெண்ணியம் ஆகிய துறைகளில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்.

அளவெட்டியின் கிராமச்சூழல், தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் தனித்துவமான சூழல் மற்றும் அவரது குடும்பச் சூழல் என்பவற்றின் காரணமாக விஞ்ஞான பாடங்களை பயிலும் மாணவியாக இருந்த போதும், இசை, கலை, இலக்கியம் என்ற துறைகளின் மீது தான் அதிகம் கவரப்பட்டிருந்ததாகக் கூறுகிறார். பாடசாலைக் கவிதைப் போட்டிகளுக்காக ஆரம்பத்தில் ஒரு சில கவிதைகளை எழுதியிருந்த போதும் எண்பதுகளின் முற்பகுதியில் தான் கவிதையே தனக்குரிய வெளிப்பாட்டு வடிவமென இனங்கண்டு கொண்டதாகக் கூறுகிறார். இவரது கவிதைகள் சரிநிகர், மூன்றாவது மனிதன், காலச்சுவடு, கலைமுகம், போன்ற பத்தி ரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளி வந்துள்ளன. 'எல்லைக் கடத்தல்' என்ற அவரது கவிதைத் தொகுப்பு மூன்றாவது மனிதன் வெளியீடாக 2000 இல் வெளிவந்தது. ஈழத்துக் கவிதைகளை பெண்ணிய நோக்கில் ஆராயும் கட்டுரைகளை தமிழ் நாட்டிலும், கொழும்பிலும் நிகழ்ந்த நிகழ்வுகளில் படித்துள்ளார்.

களிடம் அதிகாரம் இருந்ததாக நான் அறிந்த தில்லை. விதிவிலக்காக ஒரு சில இடங்களில் இருந்திருக்கலாம். அது பொதுப் போக்கல்ல.

இன்று பெண்களும் வீட்டு வேலைகளில் மட்டுமல்ல சமூக உழைப்பிலும் ஈடுபடுகி றார்கள். பணம் சம்பாதிக்கிறார்கள். வெளி உலகுடன் தொடர்பு கொள்கிறார்கள். பொரு ளாதார சுயாதீனம் இருக்கிறது. இதனால் அதி கார சமநிலை ஏற்படும் வாய்ப்புகள் அதி கரித்துள்ளன. ஆயினும் கலாச்சார, பண் பாட்டுச் சூழலில் நிறைய நல்ல மாற்றங்கள் நிகழவேண்டும்.

**தமிழ் சூழலில் அண்மைக்காலமாக திருமண முறிவுகள் இடம்பெறுகின்றன. அதற்கான காரணங்கள் என எவற்றை நினைகிறீர்கள்?**

திருமணமுறிவுகள் எல்லாக் காலத்திலும் சட்ட ரீதியாக சாத்தியமானவையாக இருந்திருக் கின்றன. ஆனால் சமூகம் அதை ஜீரணிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை. திருமண பந்தம் என்பதே 'ஆண் பெண்ணை கண்கலங் காமல் பாதுகாத்தல்' என்ற கோட்பாட்டு அடிப்படையில் தான் கட்டப்படுகிறது. பெண் பொருளாதார சுதந்திரம் இன்றி இருக்கும் போது திருமணமுறிவு அவளது வாழ்வுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும். ஆனால் இன்று பெருமளவு பெண்கள் பொருளாதார சுதந்திரம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். இதனால் குடும்பத்தின் தீர்க்கப்பட முடியாத பிரச்சனைகளுக்கு திருமண முறிவு தீர்வாகி இருக்கிறது.

முற்றுமுழுதாக பொருளாதார சுதந்திரம் திருமணமுறிவுக்கு காரணம் என்று சொல்லி விட முடியாது. குடும்ப முரண்பாடுகள் தீர்க்க முடியாத நிலைக்கு வரும்போது முறிவை நாடுவது பெண்ணுக்கு பொருளாதார ரீதியாக பாதகமாக இருக்காது என்பதால் பெண்கள் துணிவுடன் செயற்படுத்துகிறார்கள். உண்மை யில் எல்லாக் காலங்களிலும் அதிகாரம் சமூக பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் தனிப்பட்ட குணநலன்கள், போன்ற காரணிகளே திருமண முறிவுக்கான காரணங்களாகும்.

பொதுவாக குடும்பம் என்பது ஒரு கரு நிலையிலான நிறுவனமாக இருப்பதால் அங்கே பரஸ்பர உறவுகள் ஜனநாயகத்தன்மை கொண்டவையாக அமைதல் அவசியம். அல் லாத போது முறிவுக்கான வாய்ப்புகள் தாமா கவே உருவாகி வளர்ந்து வரும். பெண்கள் முன்பை விட இன்று பெண்நிலை நின்று சிந்திக்கத் தொடங்கியிருப்பதாலும் இந்த அதி கரிப்பு நிகழக்கூடும்.

ஜனநாயக பூர்வமான உறவைக் கொண்டி ராத எந்த நிறுவனமும் உடையும். திருமணம் மூலம் உருவாகும் குடும்பமும் இதற்கு விதி விலக்கல்ல.

*Best wishes from*

PRIM APPARELS

#34/1A, 3rd Lane, Welhena, Advissa Para, Welisara,
Ragama, Srilanka

Tel : 071 220 7173, 011 587 8020, Fax : 011 243 8621
E mail : primap113@yahoo.com

# திருமந்திரம் காட்டும் வாழ்வியல்

சிவத்தமிழ் வித்தகர் சிவ-மகாலிங்கம்



## சித்தர்களின் இயல்பு

உலகப் பெரும் மதங்களில் ஒன்றாகவும் உலகில் தோன்றிய முதல் சமயமாகவும் காணப்படுகின்ற சனாதன தர்மமாகிய இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலர் தோன்றி எமது சமயத்தை வளம்படுத்தினார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டுப் பக்தி நெறியாளர்கள் போன்றோர் தத்துவ ஞானிகளாகவும் பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள்,ஈழத்து சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள்.தவயோகி திருமூலநாயனார் சித்த புருஷர்கள் அனைவருக்கும் மூலவராய்த் திகழ்ந்தார்.இதனைத் தாயுமான சுவாமிகள், 'மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் காணமே' எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். சித்த புருஷர்கள் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் எனவும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் எனவும் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. 'எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி ஏகமால் வாசனையை அடித்தோன் சித்தன்' எனச் சட்டை முனிச்சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டை விளக்குகிறார். வாசனை என்பது கர்மவினை ஆகும். பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள்.



சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயுதராக வாழமாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்கள்.

சித்து என்னும் சொல் தெளிந்த ஞானத்தை குறிக்கும்.ஞானம் பெற்றவர்களைச் சித்தர் என்று கூறுவதும் உண்டு. சித்தி பெற்றவர்களைச் சிவனோடு ஒத்தவர்களாய்க் கருதி மக்கள் மதித்துப் போற்றுகின்றனர். 'சித்தன் போக்கு சிவன் போக்கு' என்பது தமிழ் மக்களிடம் நிலவி வரும் பழமொழி ஆகும். சித்ததைச் சிவன்பாலே வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கும். சித்த விகாரம் ஒடுங்க ஆத்ம சக்தி அகத்திலே பீறிட்டு எழும். ஆத்ம சக்தி முழுமை பெறுகின்ற போது சித்துக்கள் அனைத்தும் கைகூடும்.

சித்தர்கள் மக்களின் மன இருளைப் போக்கி ஞான ஒளி பரப்பக்கூடிய அற்புதமான பாடல்களை பாடியுள்ளார்கள். உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகள், கோள்களின் நிலை, காலமாறுபாடு,சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கி சோதிட நூல்கள் எழுதியுள்ளார்கள். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய அவர்களின் மறைமொழிகள் மந்திரம் எனப் போற்றப்பட்டன. மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும், கூர்மையாக்கவும், வெளிப்படுத்தவும் கூடிய வழி வகைகளைக் காட்டினார்கள். ஆத்ம சக்தி, யோக நிலை ஆகியவற்றை விளக்கி பாடல்களைப் பாடினார்கள்.

சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிக்கவர்கள்; சாதி சமய வேறுபாடுகள் அற்றவர்கள் சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள்; போலிச் சடங்குகளையும், பொருளற்ற செயல்களையும், மூடநம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள். மனம் அடங்கினால் முத்தியும்,சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்பதைப் பின்வரும் இடைக்காட்டுச் சித்தரின் பாடல் விளக்குகிறது.

*'மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்*
*கோனே! முத்தி*
*வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே!*
*சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்*
*கோனே! யாவும்*
*சித்தியென்றே நினையேடா தாண்டவக்கோனே!'*

கன்மமும் மறுபிறப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல அமைந்துள்ளது என்பதே இந்து சமய தத்துவ சிந்தனையாளர்களின் கருத்தாகும். கன்மத்தினால் பிறவியும், பிறவியினால் கன்மமும் ஏற்பாடு என்றே இந்துசமயத் திருநூல்கள் கூறுகின்றன. நாம் செய்த வினைக்கேற்பவே பயன் கிடைக்கும். நாம் முற்பிறப்பில் பல தீவினைகள் செய்திருந்தால் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும். காய்த்த மரம் கல்லெறி வாங்குவது போல தீவினையின் பயன் நம்மை வாட்டும். நல்வினையச் செய்தவர்கள் இப்பிறப்பில் நன்மையான வாழ்வைப் பெறுவார்கள் என்பதைப் பின்வரும் பாடல் தெளிவாக விளங்குகிறது.

*'காய்த்த மரம் அதுமிக்க கல்லடிபடும்*
*கன்மவினை கொண்ட காயம் தண்டனை பெறும்*
*வாய்த்த தவம் உடையவர் வாழ்பவர் என்றே*
*வத்துத் திருவடி தொழுது ஆடு பாம்பே'*

சித்த புருஷர்களில் மூலவர் திருமூலர்

சிவபெருமானே தலைமைச் சித்தராகத் திகழ்ந்தார் எனத் திருமந்திரம் கூறுகிறது. கல்லால மர நிழலில் போக நிலையில் அமர்ந்து ஞான உபதேசம் செய்த தென்முகக் கடவுளாகிய தட்சணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்ற ஞானபரம்பரை போன்று சித்தர் பரம்பரை ஒன்றும் காணப்படுகிறது. சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆகியோர் சிவனிடம் உபதேசம் பெற்ற சித்த புருஷர்கள் ஆவார்கள்.'கயிலாயத்தொரு சித்தர்' என உமாபதி சிவாசாரியாரும் திருமூலரைக் குறிப்பிடுகிறார்.

இறையருள் பெற்ற மகாஞானியாகிய திருமூலர் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெரு நோக்கோடு நமக்கு

அருளிச் செய்த ஞான வாசகர்களே திருமந் திரம் ஆகும். இந்நூல் தவயோகி திருமூல நாயனரால் அருளப்பெற்ற அனுபவ ஞானத் திருநூல் ஆகும். மந்திரம் என்றால் நினைப் பவனைக் காப்பது என்பது பொருள் ஆகும்.

*'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப'*

என்று தமிழ் இலக்கண நூலாகிய தொல் காப்பியம் மந்திரத்திற்கு விளக்கம் கொடுக் கின்றது. மந்திரம் மனத்தை உயர்த்தி மனி தரைத் தேவராக்குவதுடன் உயிருக்குயிராய் உள்ள இறைவனை ஒளிப்பொருளாகக் காட்ட வல்லதும் ஆகும்.

திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் ஞான நிஷ்டையில் இருந்து வருடத்துக்கொரு பாட லாக மூவாயிரம் பாடல்களை அருளிச் செய் தார் என்று கூறப்படுகின்றது. சாதாரண மக்கள் பொருளுணர்ந்தோ பொருளுணராமலோ பல்லாயிரக் கணக்கில் சொற்களைப் பேசு வார்கள். ஆனால் ஞானவான்களோ பல காலம் ஞான நிஷ்டையில் இருந்து எதைச் சொல்லவேண்டுமோ எவ்வாறு சொல்ல வேண்டுமோ அதை மட்டுமே கூறுவார்கள். வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள் முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைக் காணச் செய்வதே திருமூலர் போன்ற மகான்களின் சிந்தனை ஆகும்.

## திருமந்திரம் காட்டும் வாழ்வியல்

திருமந்திரம் ஒரு யோக நூலாக, வைத் திய நூலாக, வாழ்க்கை நூலாக எல்லாம் பரி மளிக்கின்ற ஞானத் திருநூல் ஆகும். வையத் துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல் கருத்துக்கள் பல திருமந்திரத் தாலே காணப்படுகின்றன. ஒவ்வொரு மனி தனும் செய்யக்கூடிய அடிப்படை அறங் களைத் திருமந்திரம் எடுத்து விளக்குகின்றது. சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் ஒவ்வொ ருவரும் எங்களுடைய ஆத்ம ஈடேற்றத்துக் காக நாள்தோறும் வழிபாடு செய்தல் வேண் டும். பூவும் நீரும் கொண்டு இறைவனைத்து திக்க வேண்டும்.

*'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'*

என்றே தமிழ் மந்திரமாகிய திருமந்திர மும் குறிப்பிடுகின்றது. தினந்தோறும் பூஜை யில் ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமே ஆகும். அதை ஒரு கிரமமாக வைத்துக் கடைப்பிடிக்க வேண் டும். தெய்வீகப் பிராணியாகிய பசுவிற்கு ஒரு பிடி உணவைத் தானமாகக் கொடுப்பது அறங் களில் சிந்த அறமாகும்.

பிறரிடம் கடுஞ்சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் செய்யக்கூடிய அறம் ஆகும். இவ்வாறு இந் தப் பண்பாட்டின் அடிப்படை அறங்கள் அனைத்தையும் திருமந்திரம் பின்வரும் பாட லின் ஊடாக எடுத்து விளக்குகிறது.

*'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்குமார் பிறர்க்கின்னுரை தானே'*

*பிறருக்கு ஒரு பிடி*
*உணவைத் தானமாகக் கொடுப்பது அறங்களில் சிறந்த அறமாகும்.*

இந்து மதம் கூறுகின்ற ஆச்சிரமம் தர்மங் களில் இல்லறமும் ஒன்றாகும். உலகில் உயி ரினங்கள் வாழ்வதற்கு காற்று எவ்வாறு அவசியமோ அவ்வாறே மற்றைய ஆச்சிரம நெறிகள் நிலைத்து நிற்பதற்கும் இல்லறத் தானின் பங்களிப்பு அவசியம் என மனுதர்ம சாஸ்திரம் கூறுகின்றது. காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து இல்லறத்தை நல்லறமாக நடாத்த வேண்டும் என்றே இந்து சமயத் திருநூல் கள் எல்லாம் கூறுகின்றன. திருமணத்தை ஆயிரம் காலத்துப் பயிராகவே நம்மவர்கள் கருதுகிறார்கள். மண் ஆசையால் அழிந்த துரியோதனின் வரலாற்றையும், பெண்

ஆசை யால் அழிந்த இராவணனின் வரலாற்றை யும் இரண்டு இதிகாசங்களும் எடுத்து இயம் புகின்றன. கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய ஐந்து குற்றங்களைப் பஞ்சமாபாதகங்கள் என நமது சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. காமவெறியிலே அறி விழந்து பிறர் மனையியிடம் இச்சைப்பட்டு நாசம் அடைகின்ற பாவிகளைப் பின்வரும் திருமந்திரப் பாடல் சாடுகின்றது.

'ஆத்த மனையாளன் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே'

வயதில் முதிர்ந்தவர்களைப் பார்த்து வய தில் குறைந்தவர்களாய் நையாண்டி செய்கி றார்கள். எள்ளி நகையாடுகிறார்கள். 'வாக்கு மாறிப் போய் விட்டது' இவர்களுடைய கருத் தைப் பொருட்படுத்த வேண்டாம் என்று கூறு கிறார்கள். 'காவோலை விழக் குருத் தோலை சிரிக்கின்றது' என்ற பழமொழி இதனை விளக் குகின்றது. இளமையிலே உயிரைக் கொடுக் கின்றேன் என்று கூறுபவர்கள் முதுமையிலே உயிரை எடுக்கிறேன் என்று நிற்பார்கள். இள மையிலே கருப்பஞ்சாறாய் இனித்து முதுமை யிலே காஞ்சிரங் கொட்டையாக மாறும் நிலையை உலகியல் வாழ்வியல் நடைமுறை யில் அனைவரும் உணர்ந்து வருகின்றோம்.

'விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழையார்க்கு
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தனே'

எனத் திருமந்திரம் இதனை விளக்கு கின்றது.

முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும் என்பது நம்மவரிடம் நிலவி வரும் முது மொழியாகும். ஒவ்வொரு தர்க்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு. என்றே நியூட்டனின் மூன்றாவது இயக்க விதியும் கூறுகின்றது. 'தர்மத்தைக் காத்தவனை அது காக்கும் கொன்றவனை அது கொல்லும்' என்றே இந்து தர்ம சாஸ்திர நூல்களும் கூறுகின்றன. கற்பு நெறியில் வாழும் பத்தினிப் பெண், ஈசனுடைய அடிய வர்கள், கற்றறிந்த மேதைகள் மனம் நோகத் தீமை செய்தால் தீமை செய்பவருடைய உயி ரும் உடைமையும் ஒரு வருடத்திற்குள் அழிந்து விடும் என்பதைப் பின்வரும் திரு மந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

'பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே'

உலகியல் வாழ்க்கைக்குப் பொருள் மிக வும் அவசியமானது ஆகும். குருகுலக் கல் வியை முடித்து வெளியேறும் மாணவனுக்கு குரு வழங்கும் ஆசியுரையில் 'நன்மையைப் புறக்கணியாதே, செல்வ வளத்தைப் புறக் கணியாதே' என்று கூறுவதைத் தைத்திரிய உபநிடதத்திலே காணலாம். பொருள் இல்லாத வர்களை எல்லோரும் இகழ்வார்கள். பொரு ளுடைய செல்வரை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள் என்பதை

'இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு'

என்றே திருக்குறளும் கூறுகின்றது. புடவை மானத்தைக் காக்க வல்லது போலப் பணமும் மானத்தைக் காக்க வல்ல பொரு ளாகும். பொருள் இருந்தால் தான் பலரும் வந்து உறவு கொண்டாடுவார்கள். விரும்பிய தர்மம் எதையும் செய்யலாம். பொருள் இல் லாதவர்கள் தலை குனிந்துதான் நடக்க வேண் டும். பொருள் இருந்தால் தான் நிமிர்ந்து நடக்க லாம் எனப் பொருளின் அவசியத்தைப் பின் வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

'புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட்டார்களும் அன்பிலர் ஆனார்

*கொடையில்லை கோள் இல்லை கொண்டாட்டம் இல்லை*
*நடையில்லை நாட்டின் இயங்குகின்றார்கட்கே'*

அண்ட சராசரமெல்லாம் வியாபித்தி ருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே கண்டவர்கள் ஞானிகள். சீவனுக் குள்ளே சிவமணம் பூத்த நிலையில் உள்ளத் தைக் கோயிலாக்கி வாழ்ந்த தவசீலராகிய திருமூலர் உடம்பைக் கோயிலாகப் பேணி னால் இறைவனை அகத்தே காணலாம் என் கிறார். 'நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' என்பது நாவலர் பெருமா னின் வாக்கும் ஆகும். இறைவன் வீற்றிருக் கும் இந்தப் புனிதமான கோயிலாகிய உடம்பை நாம் இறந்த உயிர்களைப் புதைக்கும் சுடு காடாக மாற்றக்கூடாது. உடம்பைக் கருவி யாகக் கொண்டு இறையருளை நாம் பெறலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாக அறியமுடிகிறது.

*'உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்*
*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று*
*உடம்பினை யானிலிருந்து ஓம்புகின்றேன்'*

இந்து சமயம் இறைவன் வெளிப்படும் இடமாக குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன் றையும் குறிப்பிடுகின்றது. இதில் சங்கமம் என்பது சிவனடியார் கூட்டத்தைக் குறிக்கும். சிவனடியார்கள் அகமும் புறமும் தூய்மை யானவர்கள். ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கவே நோக்கும் தன்மையுடையவர்கள். இத்தகைய சிவனடியார்களுக்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் பணியாகவே அமைகின்றது. கோயிலிலே மூர்த்திக்கு ஏதே னும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய் சேராது. ஆனால் நடமாடும் கோயிலாக இருக்கின்ற சிவனடி யார்களுக்கு ஏதேனும் சமர்ப்பித்தால் அது அவர்களுக்குப் பயன்படுவதோடு அப்படியே பகவானுக்கும் போய்ச் சேருகிறது. சற்பாத் திரம் பார்த்துச் செய்யும் ஈகை கடவுள் வழி பாடாகவே அமைகிறது. என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாக தவயோகி விளக்குகின்றார்.

*'படமாடக் கோயில் பகவிற்கு ஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்கது ஆமே'*

பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களும் இந்த உடம்பாகிய கோயிலுக்கு ஏற்றிய ஐந்து விளக்குகள் ஆகும். உடம்பாகிய ஆலயத்துள் உள்ளமானது கர்ப்பக்கிருகமாக அமைந் துள்ளது. இந்த மூலஸ்தான கருவறையில் இறைவன் வந்து வீற்றிருக்கின்றான். இந்த உடம்பாகிய ஆலயத்திற்கு வாய் தான் கோபுர வாசலாக அமைந்துள்ளது. தெளிந்த அறி வோடு மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு ஆன்மாவே பூஜைக்குரிய சிவலிங்கமாகக் காணப்படுகின்றது. இறை சிந்தனையோடு வாழ்பவர்களுக்கு ஐந்து புலன்களும் ஞானத்தை உணர்த்தும் கருவிகளாகச் செயற் படுகின்றன. பிரபஞ்ச வாழ்வில் அழுந்தி வாழ் பவர்களுக்கு இந்த ஐந்து புலன்களும் கள்ளப் புலன்களாகவே காணப்படுகின்றன.

*'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிராணார்க்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'*

உலகத்திலே வாழும் மனிதர்களுக் குள்ளே எத்தனை விதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனிதர்களிடம் காணப் படும் வேற்றுமைகள் இறைவனால் உருவாக் கப்படவில்லை. மனிதர்களாலேயே உருவாக் கப்பட்டன. மனிதர்கள் எல்லோரும் ஒரே குலம். குலபேதங்களினால் வழிபடும் இறை வன் வேறுபடமாட்டான். மனிதனுடைய எண் ணம் எப்பொழுதும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். எப்பொழுதும் பிறருக்கு

நன்மையே செய்ய நினைத்தல் வேண்டும். இவ்வாறு நற்குணத்தோடு உள்ளமும் செயலும் ஒன்றுபட்டு வாழ்பவர்களுக்கு யம பயமே ஏற்படாது மரணத்தைக் கண்டு இவர்கள் என்றுமே அஞ்சுவதும் இல்லை. சித்தத்தைச் சலனமின்றி நிறுத்துவதே நற்கதி அடைவதற்கு உரியவழி ஆகும். ஆசைகளிலும் அதர்மங்களிலும் மனத்தைச் செல்ல விடாமல் தெய்வ சிந்தனையில் நிலை நிறுத்தினால் அது நற்கதி பெறுவதற்கு வழியாக அமைந்து விடும்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாளுமே
சென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலை பெற நீர் நினைந்து உய்மினே'

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கின்ற துலக்கும் ஆற்றல் வாய்ந்த கருவியால் திறக்க வல்ல திறமையாளன் எவனோ அவனே ஞான குரவென இந்துக்களின் ஞானக் களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலர்வது போல ஆசாரிய சம்பந்தம் ஒருவனுக்குக் கிடைத்தால் தான் அவனிடம் அகத்திலே ஞான மலர்ச்சி ஏற்படும். எனச் சங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகின்றார். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற நாம் நமது அக இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கக் கூடியவர்களைக் குருவாகக் கொள்கின்றோம் இல்லை. குருடனுக்கு குருடன் பாதை காட்டுவது போல நாமும் நமக்குத் தவறான வழி காட்டுபவர்களையே குருவாகக் கொள்கிறோம். குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடிக் குழியில் வீழ்கின்றோம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் தவயோகி உணர்த்துகின்றார்.

'குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினை கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே'

கன்ம வினைகள் பிறவிக்கு வித்தாகக் காணப்படுகின்றது. பிறவி நோய் நீங்குவதற்கு இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டும். 'நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்' எனத் தெய்வ வாசமாகிய திருவாசகம் குறிப்பிடுவது போலத் தீவினை பிடித்தவர்கள் தங்கள் நாவால் சிவநாமத்தை உச்சரிக்கிறார்கள் இல்லை. சிவநாமத்தை உச்சரித்தால் தீவினைகள் அனைத்தும் நீங்கி விடும். சிவநாமத்தை உச்சரிப்பவர்கள் தெய்வீக வடிவத்தைப் பெறுவார்கள். சிவ சிவ என்று கூறினால் ஆன்மா சிவத்தோடு இணைந்து கொள்ளும் அத்துவித தன்மையைப் பெற்று விடும்.

சிவ சிவ என்கிலார் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

திருமந்திரம் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்திற்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தருகின்ற நூலாக அமைந்துள்ளது. தவயோகி திருமூலநாயனார் அருளிய தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை அனுபவ ஞானத் திருநூல் என்றே ஆன்றோர்கள் அனைவரும் போற்றுகிறார்கள். இந்நூல் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டும் வாழ்க்கை நூலாகவும் திகழ்கின்றது.

சிறுகதை

# ஹேமா அக்கா

**இளங்கோ**

'ஐயோ, ஹேமா அக்கா கிணத்துக்குள்ளை குதிச்சிட்டா' என்று கத்திக்கொண்டு நாங்கள் கிணற்றை நோக்கி ஓடிக்கொண்டிருந்தோம்.

பின்னேரம் நான்கு மணியிருக்கும். வெயிலில் குளித்தபடி விளையாடிக்கொண்டிருந்தபோதுதான் ஹேமா அக்கா கிணற்றுக்குள்ளை குதிப்பதைப் பார்த்தோம். மலைகளும் நதிகளுமில்லாத யாழ்ப்பாணத்தில் கிணறுகள் தான் நீர் சார்ந்த தேவைகளுக்கு அமுதசுரபி. இந்தியன் ஆமி வந்தகாலத்தில் கூட, இப்படி அள்ள அள்ளக்குறையாத நல்ல தண்ணியும், தாராளமாய் லக்ஸ் சோப்பும் கிடைக்கும் போது என்ன சனியனுக்கு நீங்கள் சண்டை பிடிக்கிறியள் என்றொரு ஆமிக்காரன் சனத்தை செக்பொயின்றில் வைத்து பரிசோதித்துப் பார்க்கும்போது கேட்டதாயும் ஒரு கதையிருந்தது. அவன் அப்படிகேட்டதிலையும் பிழையில்லைத்தான். நல்ல தோட்டக் காணிகள், நிறைய பனைமரங்கள், ஆடு மாடுகள் என்று எங்கள் ஊரிலை சனங்கள் இருந்த போது அவனுக்கு அப்படித் தோன்றியதில் பிழையுமில்லை.

நாங்கள் கத்து கத்தென்று கத்த அண்டை அயிலிலிருந்த சனமெல்லாம் கிணற்றடியில் கூடிவிட்டது. விழுந்த கிணறு ஒரு பங்குக் கிணறு. ஆனால் பங்கிருக்கிறவையள், இல்லாதவையள் என்று ஊரிலையிருக்கிற எல்லாச் சனமும் அதைத்தான் பாவிக்கிறவையள். எங்கள் ஊரின் மண், சனம் சாதி பார்க்கிற மாதிரி வஞ்சம் எதுவும் செய்ததில்லை. யார் தோண்டினாலும் நல்ல தண்ணியைத் தந்துகொண்டிருந்தது. இலங்கை ஆமியின் ஒபரேஷன் லிபரேசனோடு தொடங்கிய பொம்மரடியிலிருந்தும், பலாலியிலிருந்தும், காங்கேசந்துறையிலிருந்தும் அடிக்கின்ற ஷெல்லடியிலிருந்தும் தப்பவதற்கென, நானும் அம்மாவும் கொஞ்சம் கொஞ்சமாய் எங்கள் வீட்டு செவ்விளநீர் மரத் தடிப் பக்கமாய் வெட்டத் தொடங்கிய பங்கருக்குள்ளேயே ஆறடி வரமுன்னரே தண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்திருக்கின்றது. 'டொங்கு டொங்கு' என்று அலவாங்கு போட உறுதியாயிருக்கும் சுண்ணாம்புக் கல்லுக்குள்ளிலிருந்து எப்படித்தான் இப்படி நல்ல சுவையான தண்ணீர் வருகின்றதென்பது எனக்கும் அந்த வயதில் சரியான வியப்பாய்த்தானிருக்கும். ஹேமாக்கா விழுந்த கிணறு தண்ணியள்ளுகின்ற கிணறு என்றபடியால் அந்தளவு ஆழ்ப்பமில்லை. ஆனபடியால் தப்பிவிட்டா. இப்போ யோசிக்கும்போது ஹேமாக்கா தான் உயிரோடும் இருக்கேனும், ஆனால் அதே சமயம் தனது எதிர்ப்பையும் காட்ட வேண்டுமென சமயோ சிதமாய் யோசித்துத் தான் இந்தக்கிணற்றுக்குள்ளை குதித்திருப்பா போல.இல்லை, தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தால் அவா தன் வீட்டுக்கு இரண்டு வீடுகள் தாண்டிக்கிடந்த ஆழ்ப்பமான கிணத்துக்குள்ளையெல்லோ குதித்திருக்க வேண்டும். அந்தக் கிணத்துள்ளை குதித்தால் சனம் உயிரோடு தப்ப முடியாதளவுக்கு அந்த மாதிரி ஆழ்ப்பமாயும், அடியில் நிறையப் பாசியுமாயும் அது இருந்தது.

'ஹேமாக்கா வெளியே வாங்கோ, வெளியே வாங்கோ' என்று நாங்கள் கிணத்துக் கட்டைச் சுற்றி குஞ்சைப் பருந்திட்டைப் பறிகொடுத்த கோழி மாதிரி கத்திக்கொண்டிருந்தோம. ஹேமாக்கா என்ன கட்வுமனா இல்லை சுப்பர்வுமனா. சும்மா அப்படியே 'விர்' என்று

கிணத்துக்குள்ளையிலிருந்து பறந்துவர. யாரோ ஒராள் நல்ல மொத்தமான கயிறை யெடுத்து கிணத்துக்குள்ளை விட அவா அதைப் பிடித்து ஏறி வரமாட்டேனென அடம் பிடித்துக்கொண் டிருந்தா.அவாவை எப்படி வெளியே எடுக் கிறது என்று எல்லோருக்கும் பெரிய பிரச் சினையாய்ப் போயிட்டுது. அதைவிட பரபரப் பாய் வந்த சனமெல்லாம் ஏன் இந்தப் பெட்டை கிணத்துக்குள்ளை குதித்தாள். அதற்கான கார ணம் என்னவென்று ஆராயத்தொடங்கிவிட் டது. பொழுதும் கொஞ்சம் கொஞ்சமாய் இருளத்தொடங்கிவிட்டது. ஹேமாக்காவும் கீழே விட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலேயேறி வரமாட்டென அடம்பிடித்துக் கொண்டு உள்ளுக்குள்ளேயே அழுதுகொண் டிருக்கிறா. யாராவது பெடியனை கிணத்து க்குள்ளை இறக்கி அவனைப் பிடித்துக்கொண்டு ஹேமாவாக்காவை தூக்கலாமெண்டாலும், ஹேமாக்கா ஒரு குமர்ப்பெட்டையாயிருப்பது 'கற்பு' சார்ந்த பிரச்சினையாகவும் சனத்துக்கு இருக்கிறது. வயதுபோன கிழடுகளை இறக் கலாந்தான். ஆனால் ஹேமாக்காவின் பாரத்தை தங்கடை தோளிலை தாங்கிக்கொண்டு கயிற் றைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறுவதற்குள் கிழடுகளுக்கு சீவன் இருக்குமா என்பதும் கேள்விக் குரியதுதான். ஒரு தற்கொலை முயற்சி தப்பித்துவிட்டது என்ற நிம்மதிப் பெருமூச்சை தெரிந்தே செய்கின்ற ஒரு கொலையில் பரீட்சித்துப் பார்க்க எவருக்கும் அவ்வளவாய் உடன்பாடில்லை. எனவே கிழ வர்களையும் இறக்கமுடியாது. ஆக இவ்வா றாக ஹேமாக்காவை வெளியே எடுப்பது பெரும் சிக்கலாகிவிட்டது. வெளியே நிற்கிற சனம் என்ன செய்வது என்று கையைப் பிசைந் துகொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்து சலித்தே ஹேமாக்கா தான் இந்தக்கிணத்துக் குள்ளை குதிக்க முன்னர் தன் முடிவை ஆழ மறுபரிசீலினை செய்திருக்கலாம் என்று கூட நினைத்திருக்கலாம்.

கடைசியாய், இரண்டு பக்கமும் கையிருக் கிற கதிரையிலை நான்கு கயிற்றைக் கட்டி ஒரு பெட்டியை இறக்கிற மாதிரித்தான் கதி ரையை இறக்கிச்சினம். ஹேமாக்கா கதிரையி லிருந்து நாலு கயிற்றில் இரண்டு கயிற்றைக் கையிரண்டாலும் பிடிக்க வெளியிலிருந்து சனம் தூக்கத் தொடங்கிச்சினம். சூரன்போ ரிலை சூரனையும் முருகனையும் அங்கால் பக் கம் இங்கால பக்கம் ஆட்டுகின்ற மாதிரி கிணத் தின்றை உட்சுவரில அடிபட்டு அடிபட்டு ஹேமாக்கா வெளியே வந்திருந்தா. அவா வைப் பார்க்கச் சரியாய்ப் பாவமாயிருந்தது. மழைக்காலத்திலை நனைகின்ற கோழிக் குஞ்சு கள் மாதிரி பாவாடை சட்டை எல்லாம் நனைந்து கூனிப்போயிருந்தா. அத்தோடு சன மெல்லாம் ஒரு மாதிரியாயப் பார்த்த பார்வை அவாவையின்னும் கூனிக்குறுகச் செய் திருக்கும்.

## 2

ஹேமாக்கா கிணற்றில் விழுந்தற்கான கார ணத்தை சனம் அலசிப் பிழிவதற்கு முன் னரே எனக்கு அதற்கான காரணம் தெரிந் திருந்தது. உண்மையிலேயே சனம் ஹேமாக் காவை குற்றவாளிக்கூண்டில் ஏற்றினால் நானு மோர் சாட்சியாக ஏறத்தான் வேண்டியிருக் கும். ஆனால் அவ்வாறான பொழுதில் மவுன மாய் இருந்திருப்பேனே தவிர ஹேமாக்கா விற்கு எதிராய் எதுவும் சொல்லியிருக்கமாட்டே டன் என்று உறுதியாய்ச் சொல்லுவேன். எனெ னில் ஹேமாக்கா அவ்வளவு நல்லவர் எனக்கு அவாவை எங்கட அம்மாவிற்கு பிறகு அப் படிப் பிடிக்கும்.

எங்கள் வீட்டையும், ஊரிலையிருந்த பள்ளிக்கூடத்தையும் பிரிப்பது ஒரு றோட்டு த்தான். கல்லு நிரப்பி தார் ஊற்றி சமதளமாய் அமைப்பதுதான் தெருவென்றால், இதைத் தெருவென்று கூறமுடியாது. ஒரு வெள்ள வாய்க்காலாய் இருந்து காலப்போக்கில் பரி ணாமடைந்து ஒரு ஒழுங்கையாகிவிட்டது

என்று தான் சொல்ல வேண்டும். மழை பெய்து வெள்ளம் ஓடுகின்ற வேளையில் வாழைக் குற்றியில் வள்ளம் விடுவதற்கு மிக உகந்த இடமெனச் சொல்லலே இன்னும் சாலச் சிறந்தது. அவ்வாறு எங்கள் வீடுகளையும், பள்ளிக்கூடத்தையும் பிரிக்கின்ற ஒழுங்கை யினூடு நீங்கள் செல்வீர்களாயின் ட வடிவில் நீங்கள் வலது கைப்பக்கமாய் திரும்பினால் ஒரு ஹொஸ்டலைக் காண்பீர்கள். அங்கே தான் தூர இடங்களிலிருந்து வந்து பெடியன் கள் படித்துக்கொண்டிருப்பார்கள். ஹொஸ்டலி லிருந்து பின்பக்கமாய் ஒழுங்கைக்குள் நுழை வதற்கு இருக்கும் கேற் எப்பவுமே பூட்டிய படியேதான் இருக்கும். எனவே ஹொஸ்ட லுக்கு பொவதற்கோ அல்லது அங்கிருந்து வெளியே வருவதற்கோ நீங்கள் உயரம் பாய் தலில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். ஏனெனின் மதிலேறி குதிக்க வேண்டும் என் னைப் போன்றவர்கள். ஹொஸ்டலில் படம் போடும்போது, படம் தொடங்கியபின் இருட் டோடு இருட்டாய் உள்ளே மதிலேறிக்குதித் துப் போய்விடுவோம். படம் தொடங்கப் போகின்றதென்றால் ஹொஸ்டலில் இருக்கும் அண்ணாமார்கள் விசிலடிப்பார்கள். நாங்கள் முன்னேறிப்பாய்வதற்குத் தயாராய் ஹொஸ் டல் மதிலடிக்கடியில் நின்றுகொண்டு இருப்போம். ஆனால் நாங்கள் சிறுவர்களாய் இருந்ததால் மதிலில் ஏற்றிவிடுவதற்கு யாரி னதோ உதவி தேவையாய் இருக்கும். இவ் வாறாக நிறையப் படங்களைப் பார்த்திருக்கி றோம். சில அண்ணாக்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டிருக்கி றோம்.

ஹொஸ்டலிருக்கும் பெடியங்களுக்கு சிலவேளைகளில் கரண்டில்லாவிட்டால் குளிக் கத் தண்ணியில்லாது போய்விடும். அப்போது மட்டும் பின்பக்க கேற் திறக்கப்பட்டு எங்க வீட்டுக் கிணறுகளில் குளிக்க ஹொஸ்டல் நிர்வாகத்தால் அனுமதிக்கப்படுவார்கள். ஹொஸ்டல் பெடியங்கள் குளிக்க வாறாங்க என்டால், எங்கட ஊரும் அல்லோல கல்லோ லபட்டுவிடும். இன்னும் குறிப்பாகச் சொல்ல படபோனால், ஊரிலையிருக்கின்ற குமரப் பெட்டையளுக்குத்தான் உள்ளூர மகிழச்சி ததும்பியோடியபடி இருக்கும். அதுவரை அம் மாமார் பிள்ளை தண்ணியள்ளிக்கொண்டு வாங்கோ என்றால் ஓடிப்போய் ஒளித்துக் கொள்பவர்கள் கூட ஷொஸ்டல் பெடியங்கள் வாறாங்கள் என்றால் வாளியோடு கிணத் தடிக்கு அடிக்கடி போவதும் வருவதுமாய் இருப்பார்கள். கிணத்தடியில் விழிகளும், புரு வங்களும் நிகழத்துகின்ற உரையாடல்களுக்கு காப்பியங்களின் சுவை கூட நிகரானவையா என்பது சந்தேகம் தான். தாங்கள் இரகசிய மாய் பெண்களால் இரசிக்கப்படுகின்றோம் என்று, ஹொஸ்டல் பெடியன்களுக்கும் நன்கு தெரியும். எனவே ஹொஸ்டலை விட்டு வரும் போது ஏதோ பெரிய ஊர்வலம் வாற மாதிரி கத்திக் குழறி தங்கள் வரவை பறைசாற்றிக் கொண்டே வருவார்கள். இன்னும் சிலர் உற் சாகத்தின் மிகுதியில் சேர்ட் எல்லாம் கழற்றி கையில் வைத்தபடி தமது ஆண்மையை காட்ட முயற்சிப்பார்கள். அந்த நேரத்தில் எத்த னையோ வீடுகளின் வாசல்களில் இருந்து வெளிவந்த பெருமூச்சுக்களின் வெப்பத்தில் அடுப்புகளில் தீ கூட பற்றியெரிந்திருக்கலாம்.

இப்படி குளிக்க வந்த பொழுதிலோ அல் லது வேறு சந்தர்பத்திலோதான் ஹேமாக்கா விற்கும், சசி அண்ணாவிற்கும் நேசம் முகிழ் திருக்க வேண்டும். அவர்களுக்கிடையிலான ஊடாட்டங்களுக்கு நானொரு தூதுவனாக மாறவேண்டியிருந்தது. கடிதப்பரிமாற்றங்கள், உடனடிச் செய்திகள், திட்ட மாற்றங்கள் என்று பல்வேறு பரிமாணங்களில் ஊழியம் செய்து அவர்களின் காதலுக்கு நானொரு தவிர்க்க முடியாத தீவிர தொண்டனானேன். இவ்வா றான ஊழியங்களுக்கு ஹேமாக்கா தங்கட வீட்டில் நின்ற மரங்களில் இருந்து விளாம் பழங்கள், தோடம்பழங்கள், ஆலமரத்தடிச் சந்தியிலிருந்த முருகன் விலாஸில் எட்னா,

கண்டோஸ் வகையான சொக்லேட்டுக்களை யும், வாய்ப்பன்களையும் போண்டாக்களை யும் சன்மானமாக அளித்து தனது அன்பை யும் மதிப்பையும் வெளிப்படுத்தியிருந்தி யிருக்கிறார்.

ஒருநாள் இப்படிதான் ஹேமாக்காவும், சசியண்ணாவும் ஹொஸ்டல் மதிலடியில் சந் திப்பதாய் ஏற்பாடு. வழக்கம் போல நிகழ்வது போல ஹேமாக்கா என்னை மதிலால் தூக்கிப் பிடிக்க நான் விசிலடித்து சசியண்ணாவுக்கு சிக்னல் அனுப்பினேன். இவ்வாறான சந்திப் புக்கள் நல்லாப் பொழுதுபட்டு, இரவு மூடு கின்ற ஏழுமணியளவில்தான் நடக்கும். அப் போது தான் ஒழுங்கைக்குள் சன நடமாட்டம் குறைவாயிருக்கும். அத்தோடு சனம் தற்செய லாய்க் கண்டாலும் யாரென்று முகம் பார்ப் பதற்குள் தப்பியோடக்கூடியதாகவும் இருக் கும். நான் மதிலுக்குள்ளால எட்டிப்பார்த்து சசியண்ணா வாறாரா என்று பார்த்துக் கொண் டிருந்தேன். குரலை வைத்துத்தான் அடையா ளம் காணக்கூடியளவுக்கு அன்று நல்ல இருட்டு என்னுடைய விசில் சத்தம் கேட்டு வந்த சசி யண்ணா என்னுடைய கையைப் பிடித்தார். ஆனால் இப்படி ஒருநாளும் இறுக்கமாய்ப் பிடிப்பதில்லை என்று ‘ஆ... கை நோகின்ற தென்று’ நான் சொல்ல ‘யாரடா நீ உனக் கென்ன இந்த நேரத்திலை இங்கே வேலை’ என்று ஒரு குரல் கேட்டது. இது நிச்சயமாய் சசியண்ணாவின் குரலில்லை. ‘ஐயோ இது ஹொஸ்டல் வோடனின்ரை குரலெல்லோ’ என்று எனக்கு உடம்பு நடுங்கத் தொடங்கி விட்டது. தப்பியோடலாம் என்றால் மனுசன் கையை விடுகிறதாகவும் இல்லை. அங்காலை ஹேமாக்கா என்ரை காலைத் தூக்கு பிடித்து க்கொண்டு நிற்கிறா. எதற்கடா இப்ப விசிலடித் தாய் என்று அந்த மனுசன் உறுமுகிறது. பகல் வேளைகளில் நாங்கள் பக்கத்திலையிருக்கற பற்றைக் காணிக்குள்ளை கிரிக்கெட் விளை யாடும் போது ரெனிஸ் போல் சில வேளை களில் ஹொஸ்டலுக்குள் விழுவதுண்டு. அவ் வாறான தருணங்களில் நாங்கள் மதிலுக்கு இங்காலை நின்று பந்தை எடுத்துத்தாங்கோ என்று கத்துவோம் அப்படியொருத்தரும் எடித்துத் தர இல்லையெண்டால் நாங்களா கவே மதிலேறிக் குதித்து பந்தை எடுப்போம் அப்படி இறங்கியெடுக்கும் போது வோட னின் கண்ணில் பட்டால் பந்து எடுக்கவந் தோம் என்று சொல்லித் தப்பிவிடுவதுண்டு இப்ப வோடன் என்ரை கையைப் பிடித்துக் கொண்டு ‘யாராடா நீ யாற்றை மோனடா நீ’ என்று வெருட்ட எனக்கு எல்லா அறிவும் கெட்டு ‘ரெனிஸ்போல் விழுந்து விட்டது எடுக்கவந்தன்’ என்டு வாய்தவறி உளறி விட்டேன். இந்த இருட்டுக்குள்ளை யார்தான் ரெனிஸ்போல தேட வருவாங்கள் வேறேதோ விவகாரம் ஓடிக்கொண்டிருக்கிறது என்று வோடனுக்கு இப்ப நல்லா விளங்கிட்டுது சனியன் பிடித்த மனுசன் என்னை விடுவ தாயில்லை இனியும் இப்படிக்காரணஞ் கேட்டுக்கொண்டிருந்தால் எல்லாவற்றையும் போட்டுக் கொடுக்கவேண்டிவரும் என்ற நிலை யில் சட்டென்று வோடனின் பிடியிலிருந்து ஒரு கையை உதறியெடுத்து நல்லாய் ‘நொங் கென்று’ அவற்றை தலையில் குட்டினேன் மனுசனுக்கு நொந்திருக்கவேண்டும் மற்றக் கையின் பிடியைத் தவறவிட்டார் நானும் ஹேமாக்காவும் பேய் ஒன்று எங்களைப் பின் தொடர்ந்து வருகின்ற மாதிரி பின்னங்கால் தலையில் பட எங்கடை வீடுகளுக்க ஓடிப் போய்ச் சேர்ந்திருந்தோம்.

## 3

எப்படிப் பத்திரமாய் பொத்தி பொத்தி வைத்தாலும் எந்த விஷயம் என்றாலும் ஒரு நாள் வெளியே வரத்தானே செய்யும் அப் படித்தான் ஒருநாள் ஹேமாக்கா - சசியண்ணா காதலும் ஹேமாக்கா வீட்டுக்குத் தெரியவர இரண்டு நாளாய் வீட்டில் அறைக்குள் வைத்து ஹேமாக்காவிற்குசெம அடி. அவா பிடிவாத மாய் சசியண்ணாவைத்தான் காதலிப்பன்,

கலியாணங்கட்டுவன் என்று நின்றிருக்கிறா. இரண்டு நாளாய் அறைக் குள்ளையே பூட்டி வைத்திருக்கினம். இனி பிடிவாதத்தை விட்டுவிட்டுவாள் என்று நினைத்து மூன்றாம் நாள் வெளியே விடத்தான் ஹேமாக்கா இப்படி கிணத்துக் குள்ளை குதித்திருக்கிறா. இப்ப ஹேமாக்காவின் காதல் ஊருலகத்திற்கு எல்லாம் தெரியவந்துவிட்டது இப்படியாக ஹேமாக்கா - சசியண்ணா விடயத்தில் ஒரு முடிவும் காணமுடியாது இழுபறியாக போன போது தான் இந்தியன் ஆமிப் பிரச்சனை வந்தது. பள்ளிக்கூட மெல்லாம் பூட்ட ஹொஸ்டலிலிருந்து பெடியன்களும் தங்கள் ஊருகளுக்குப் போகத் தொடங்கிட்டினம். ஹேமாக்காவின் பெற்றோருக்கும் அப்பாடா இந்தப் பிரச்சனை இப்படிச் சுமுகமாய் முடிந்துவிட்டதே என்று பெரிய நிம்மதி ஊச்சனத்தின் வாய்களும் இப்போது ஹேமாக்காவின் கதையைவிட இந்திய ஆமிப்பிரச்சனையைப் பற்றித் தான் அதிகம் மென்று துப்பத் தொடங்கி விட்டது. சண்டைதொடங்கியதால் எனக்கும் பள்ளிக் கூடம் இல்லையென்றபடியால் நானும் ஹேமாக்கா வீட்டிலை தான் அதிகம் பொழுதைக் கழிக்கத்தொடங்கினேன். இந்தியன் ஆமிக்கும் புலியளுக்கும் சண்டை தொடங்கி எங்கடை ஊர்ச் சனமெல்லாம் உணவில்லாது சரியாய்க் கஷ்டப்பட்ட காலத்தில் மக்களைத் தங்களுக்குள் உள்ளிழுக்கவேண்டுமென்றால் அவ்வப்போது நிவாரணம் வழங்கவேண்டுமென்று உலகத்திலுள்ள எல்லா அதிகார அரசுகளும் நினைப்பது போல இந்தியன் ஆமியும் தங்கடை முகாங்களுக்குச் சனத்தைக் கூப்பிட்டு சாமான்கள் கொடுப்பான்கள். ஒரு வீட்டிலையிலிருந்தும் வயசுக்கு வந்த பெடியள் பெட்டைகளை இந்த விடயங்களுக்கு அனுப்புவதில்லை 'எதுவுமே நடக்கலாமென்ற' பயந்தான் ஆகவே பத்துவயசுக்குள்ளையிருந்த என்னைப் போன்றவர்கள்தான் ஆமிக்காரன் தருகின்ற நிவாரணத்துக்கு கியூவிலை நிற்பம் ஒருமுறை ஆமிக்காரன தன்ரை ஹெல்மெட்டாலை அள்ளியள்ளி கோதுமை மாவை நிவாரணமாகத் தந்த பொழுதில் தான் காவலில் நின்ற இன்னொரு ஆமிக்காரன் என்னைக் கூப்பிட்டு ஒரு கூல்டிங் கிளாஸைத் தந்தான் எனக்கென்டதால் அந்தமாதிரிச் சந்தோஷம் அவ்வளவு பேர் கியூவிலை நிற்கேக்கை எனக்கு மட்டும் ஆமிக்காரன் கூலிங்கிளாஸை தாறானென்டால் நான் ஏதோ வித்தியாசமானவனாய்த் தானே இருக்கவேண்டும். நான் ஊருக்குள்ளை ஓடிப்போய் ஒவ்வொர் வீட்டிலையும் ஏறியிறங்கி ஆமிக்காரன் எனக்கு கூலிங் கிளாஸை தந்துவிட்டான்என்று பெருமையடித்துக் கொண்டிருந்தேன் அது கூல்டிங் கிளாஸ் இல்லையடா கூலிங்கிளாஸ் என்று ஹேமாக்கா தான் திருத்தினா உங்களுக்கு ஒரு கூலிங் கிளாஸை கிடைக்கவில்லை என்று பொறாமை அதுதான் நான் சொல்வதை நீங்கள் பிழையெண்டிறியள் என்று நான் சொல்ல ஹேமாக்கா சிரித்துக்கொண்டிருந்தா. ஹேமாக்கா சிரிக்கிறது எவ்வளவு அழகு. அவாவின்ரை பற்களின் விம்பம் கூலிங கிளாஸில் தெறிப்பதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் நானும் ஹேமாக்காவும் அவங்கடை வீடடிலை தனியே இருக்கேக்கை இந்தியன் ஆமிக்காரன்கள் செக்கிங்குக்கு என்டு வந்தாங்கள். செக்கிங்கில் வந்த ஆமிக்காரர்களில் எனக்கு கூலிங்கிளாஸ் தந்த ஆமிக்காரனுமிருந்தான். நான் அப்போதும் அந்த கூலிங் கிளாசை என்னோடுதான் வைத்திருந்தேன். அந்த ஆமிக்காரன் you bomb bomb என்றான் எங்கையோ குண்டை ஒளித்துவைத்திருக்கின்றம் என்டு ஐமிச்சத்தில் அவன் தேடுகின்றான் போல என்று முதலில் நினைத்தேன். no sir no bomb என்று ஹேமாக்கா தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சொன்னா... ஆமிக்காரன் bomb bomb என்று திருப்பி திருப்பிச் சொல்லிக்கொண்டேயிருந்தான். you bomb என்றான் ... ஹோமாக்கா bomb ஒளித்து வைத்திருக்கிறா என்ற மாதிரி அவாவோடை மார்பைப் பிடித்தான்..... அக்காவிற்கு என்ன

செய்வதென்டு திகைப்பு.. நான் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்றன் என்று ஆமிக்காரனுக்கு நினைவுக்கு வந்திருக்கோனும். you bomb you bomb சொல்லிக் கொண்டு முன்னாலிருந்த அறைக்குள்ளை ஹேமாக்காவைக் கொண்டு போனான்... நான் விளையாடுகின்ற மாதிரி பாவனை செய்துகொண்டு ஓரக்கண்ணால் இதையெல்லாம் பாரத்துக்கொண்டிருந்தேன். அந்த அறைக்கு உள்ளே கொக்கி போட்டு மூடினால் தான் பூட்டப்படும். ஆமிக்காரன் செக்கிங்குக்காய் அடுத்த வீட்டுப் போகும் அவசரமோ அல்லது போட்டு அறையை மூடினால் நான் கத்தி சனத்தைக் கூட்டிடுவேனோ என்று நினைத்தானோ தெரியாது... மெல்லியதாய் கதவைச் சாத்தினான்... அதனால் அறை முழுதாய் மூடப்பட்டாது கொஞ்சம் நீக்கலுடன் திறந்தபடியிருந்தது. you bomb bomb என்டு ஹேமாக்காவின் சட்டையைக் கழற்றச் சொன்னான். பிறகு அக்காவைச் சுவரோடு அழுத்தியபடி ஆமிக்காரனின் பின்புறம் அங்குமிங்குமாய் அசைவது மட்டுமே தெரிந்தது. ஆமிக்காரன் செக்கிங் முடித்துப் போனபோது எனக்கு அவன் தந்த கூலிங் கிளாஸ்பிடிக்கவில்லை. வீட்டை அதைக் கொண்டுபோய் அம்மம்மா பாக்கு இடிக்கிற கட்டையாலை அதை அடித்து உடைத்தேன்.

இந்தியன் ஆமி வெளிக்கிட, வந்த பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் சசியண்ணா ஒரு நாள் எங்கள் ஊருக்கு வந்திருந்தார். எல்லாச் சனியனும் இந்தியன் ஆமிக்காலத்தோடு ஒழிந்துவிட்டதென் நினைத்த ஹேமாக்காவின் பெற்றோருக்கு சசியண்ணா தனக்கு ஹேமாக்காவைக் கலியாணங் கட்டித்தரக் கேட்பதற்காய் வந்திருந்தது அதிர்ச்சியாயிருந்தது. ஏற்கனவே எடுத்த முடிவையே திரும்பவும் சொன்னார்கள் ஏலாது என்று ஹேமாக்காவின் பெற்றோர் உறுதியாய்ச் சொன்னதோடு சசியண்ணா திரும்பி அவருடைய ஊருக்குப் போய்விட்டார். எல்லாம் சுமுகமாய்ப் போய்க்கொண்ருக்கிறது என்று நினைத்த ஒரு பொழுதில் ஹேமாக்கா சசியண்ணாவோடு சேர்ந்து ஓடிப்போய்விட்டா என்பது எல்லோருக்குந் தெரியவந்தது 'ஏன் ஹேமாக்கா இங்கேயிருக்காது தூர இடத்திற்கு ஓடிப் போனவா?' என்று அம்மாட்டை நான் கேட்டதற்கு 'சும்மா வாயை மூடிக்கொண்டிரு' என்றுதான் அம்மா அந்த நேரத்திலை சொன்னா. பின்னாட்களில் அப்படி ஹேமாக்கா ஓடிப் போனதற்கு சசியண்ணாவும் ஹேமாக்காவும் வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தை அறிந்தேன். ஊரிலையிருந்து சனம் கொழும்பிற்கு போய்விட்டு வருகின்ற போது ஹேமாக்காவும் சசியண்ணாவும் கிளிநொச்சிப் பக்கமாய் இருக்கினம் என்று தகவலை அறிந்து சொல்லிச்சு. நாளடைவில் ஹோமாக்காவை மறக்க வைக்கும்படி போர் எங்கடை ஊர்ப்பக்கமாய் திரும்பவும் உக்கிரமாகத் தொடங்கியது.

## 4

95ம் ஆண்டு யாழில் நிகழ்ந்த பெரும் இடம்பெயர்வின்போது எங்களுக்கு முதலில் அடைக்கலந்தந்தது ஹேமாக்காவும் சசியண்ணாவுந்தான். காட்டையும் குளத்தையும் அண்டியிருந்த அவையளின்றை மண்ணால் மெழுகிப் பூசியிருந்த வீடு உண்மையிலேயே அந்த நேரத்திலே சொக்கமாய்த்தானிருந்தது. சில மாதங்கள் ஹோமாக்கா வீட்டையிருந்து விட்டு நாங்கள் தனியே இன்னொரு இடத்திற்குப் போயிருந்தோம். ஆனால் அதிகமாய் ஒவ்வொரு பின்னேரமும் நான் ஹேமாக்கா வீட்டுப்பக்கமாய் வந்துபோய்க் கொண்டிருந்தேன். பதின்மங்களில் நான் இருந்த பருவம் எல்லாவற்றையும் மூர்க்கமாய் நிராகரித்துக்கொண்டு நான் மட்டும் சொல்வது செயவதே சரியென்று உடும்புப்பிடி பிடித்துக்கொண்டிருந்த காலமது. நானும் சசியண்ணாவும் அடிக்கடி அரசியல் பேசிச் சூடாகிக் கொண்டிருப்போம். அவருக்கு எங்கடை பிரச்சனையில் நிதானமாய் இந்தியாவை அணுகியிருக்க வேணும் என்ற ஒரு எண்ணம் இருந்தது. அதாவது இந்தியா

வோடு அனுசரணையாய் இருந்திருந்தால் எங்களின் பிரச்சினை எப்பவோ தீர்ந்திருக்கு மென்பது அவருடைய அசைக்கமுடியாத நம் பிக்கை. எங்களின் இந்த முரண் அரசியல் விவாதங்களை சிலவேளைகளில் செவிமடுக் கிற ஹேமாக்கா உங்கள் இரண்டுபேராலையே ஒரு விசயத்துக்கு பொதுவான முடிவுக்கு வரமுடியாது இருக்கும் போது எப்படித்தான் எங்கடை சனத்துக்கு எல்லாம் பொதுவாய் வாற தீர்வு கிடைக்கப்போகின்றதோ தெரியாது என்று சிரித்துக்கொண்டு சொல்லுவா.

ஒருநாள் இப்படித்தான் வழமைபோல அரசியல் பேசி நான் மிகவும் கொந்தளித்துக் கொண்டிருந்த நேரம் அந்த நேரத்தில் சசி யண்ணாவை அடித்தால் கூடப்பரவாயில்லை என்றமாதிரி அவர் மீதான கோபம் நாடி நரம்பு களில் ஏறிகொண்டிருந்த போது என்னை யறியாமலே 'நீங்கள் ஒருமனுசரே எங்கடை ஹேமாக்காவை இந்தியன் ஆமி கெடுத்தாப் பிறகும் அவங்களைச் சப்போர்ட் பண்ணிக் கொண்டிருக்கிறியள்' என்றேன் எனக்கே நான் என்ன சொன்னேன் என்று அறியமுடியாத உணர்ச்சியின் கொந்தளிப்பு யாரோ கன்னத் தில் படாரென்று அறைந்த மாதிரி சட்டென்று எங்கள் எல்லோருக்குள்ளும் தாங்கிக் கொள் ளவே முடியாத மிகப்பெரும் மவுனம் கவிழ்ந் திருந்தது. அதுவரை வாஞ்சையோடு என் னைப் பார்க்கும் ஹேமாக்காவின் விழிகள் அப்படியே உறைந்து போயிருந்தன.என்ன விதமான உணர்ச்சியென்று இனம் பிரித்தறியா முடியாதளவுக்கு நான் குற்றத்தின் கடலுக்குள் மூழ்கத்தொடங்கியிருந்தேன். எதுவுமே சொல் லாமல் எவரிடமும் முறையாக விடைபெறாது நான் வீட்டை போய்ச் சேர்ந்திருந்தேன்.

அடுத்த நாள் விடிய அம்மா 'டேய் தம்பி ஹேமாக்கா குளத்துக்குள்ளை குதிச்சிட்டா என்டு சனம் சொல்லுது... ஓடிப்போய் என்ன நடந்ததெண்டு பார்த்திட்டு வா' என்று பட படவென்டு கையால தட்டி எழுப்புகிறா. நான் வோடன் என்னைப் பிடிக்க முயன்ற பொழுதை விட வேகமாய் என்ன நடந்தது என்று அறிய சைக்கிளையெடுத்துக்கொண்டு ஓடுகின்றேன். ஹேமாக்காவுக்கு ஒன்றும் நடந்திருக்கக் கூடாது என்று எங்கள் ஊர் வைரவரை நேர்ந்து கொண்டு சைக்கிளை வேக வேகமாய் உழக் கின்றேன். ஹேமாக்காவை குளத்துக்குள் ளாலை இருந்து தூக்கிக் கொண்டுவருகினம். ஐயோ ஹேமாக்கா குளத்துக்குள்ளை குதிச் சிட்டா எல்லோரும் ஓடிவாங்கோ என்று சிறுவனாய் இருக்கும்போது நான் கத்தியது மாதிரி இப்போது கத்தமுடியாது நான் உறைந்து போய் நிற்கின்றேன். சசியண்ணா என் கையைப்பிடித்துக்கொண்டு 'இந்தியன் ஆமி உம்மளை கெடுத்தது பற்றி இதுவரை ஏன் என்னட்டை சொல்லேலை என்டு மட்டுந்தான் கேட்டனான் வேறொன்றுமே கேட்க வில்லை. ஒன்டுமே பேசாமல் இருந்தவா இப்படிச் செய்வா என்டு நான் கனவிலையும் நினைத் துப் பார்க்கவில்லை' என்று நடுங்கும் குரலில் சொல்லிக்கொண்டு இருந்தது எனக்கு யாரோ பங்கருக்குள்ளிலிருந்து முணுமுணுப்பது போலக் கேட்கிறது 'ஹேமாக்கா எழும்புங்கோ நான் வந்திருக்கின்றேன். உங்களுக்குத் தெரி யுமா உங்களுக்கு அண்டைக்கு ஆமி அப் படிச் செய்த்தைப் பார்த்தபோது நான் அவ் வளவு காலமும் கவனமாய்ப் பொத்தி வைத்திருந்த கூலிங்கிளாசையே உடைத்து நொறுக்கினவன்...நீங்கள் எப்பவும் எங்கடை ஹேமாக்காதான். எழும்புங்கோ... எழும் புங்கோ' என்டு மனம் விடடுக்குழறி அழ வேண்டும் போல இருக்கிறது. கொலைகளைச் செய்தவர்களால் மனதை லேசாக்க அழமுடி வதில்லை. உள்ளுக்குள்ளேயே மறுகி உருகி தங்களின் பாவங்கள் எப்பவாவது கரைய மாட்டாதா என்று காலம் முழுதும் ஏங்கிக் கொண்டிருக்கவேண்டியது தான்.

# கவிதைகள்

## இனியும் இல்லையென்று ஆகி

**நிவேதா**

இனியும் இல்லையென்றே ஆகிப் போன
வேனிற் காலத்தின் பின்மாலைப் பொழுதொன்றில்
உனக்காய்ச் சேகரித்த மலர்களின்
வர்ணச் சிதறல்களிலும்,
பனித்திவலைகளிலும்
தெறித்திருக்கிறது உன் மீதான நேசம்...
காக்கிச் சட்டைகளையும்,
காவலரண்களையும் கடக்கும் போதெல்லாம்
பேர்ச்சினுள் கனக்கும் அடையாள
அட்டையைப்போல்
தவிர்க்க முடிவதில்லை உன் நினைவுகளை...

சிலரது மனங்களைப் போலவே,
வர்ணங்களற்று வெளிறிப் போயிருக்கும்
அந்திவானத்தில்...
மின்மினிகளாய்க் கண்சிமிட்டும்
நட்சத்திரங்களாலும்,
உச்சஸ்தாயிக்கு ஏறி, விழுந்து வழிகின்ற
கிரிஜாதேவியின் குரலாலும்
நிறைந்திருக்கும் மனம்
ஏங்குகிறது...
நோயில் வீழ்ந்துபோன
என் தேசத்தின் மீட்சிக்காய்...
பார்த்துப் பார்த்து...
கலையுணர்வுடன்
அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்
என் அடையாளங்கள்
அலைகளின் ஓலங்களுடன்
தொலைதூரத் தேசங்களுக்கும்
பயணிக்கக் கூடும்....
நீயும் மறுகக் கூடும்....

அடையாள அட்டையும்,
தேசிய மறுப்பையும் எதிர்பார்க்கும்
ஆளும் வர்க்கத்தினரின்
அடிமைக்கு நினைவிருக்குமா....
எனைப் போலவே ஒரு பெண்
கிரிவெஹரப் பாதையினோரத்தில்
அலரிப் பூக்கள் நிறைந்த கனவுகளுடன்
அவனுக்காய்க் காத்திருப்பது?

கிரிவெஹர பாதை : பல பின்தங்கிய சிங்களக் கிராமங்களை ஊடறுத்துக் கொண்டு கதிர்காமத்துக்குச் செல்லும் பாதை. இந்தப் பாதை நெடுகவும் அழகிய சிங்கள இளம் பெண்கள் நீலோற்பவ மலர்கள் மற்றும் ஊதுவர்த்திகளை விற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம். இளம் ஜோடிகள் சந்தித்துக் கொள்ளும் தென்னிலங்கைக் காதல் பாடல்களில் தவறாமல் இடம் பெறும் ரம்மியமான ஒரு இடம்.

அலரி மலர் : சௌபாக்கியம், சம்பத்திற்கான குறியீடு. புத்தரை வழிபடுவதற்கு உகந்தது.

## கடவுளிடம் கேள்வி

**தாரணி, இந்திரச்செல்வன், இராகலை**

கொழுந்துக் கூடைச் சுமையை
இறக்கும் நாள் எது?
அல்லும் பகலும் தேயிலைச் செடிக்குள் ஏன்
அலைய விடுகிறாய்?

உயர்ந்த மலைகளுக்கு மத்தியில் எம்மை
பள்ளத்தாக்காய் அமைத்தது
வலியவர் எளியவர்
எம்மீது செய்த சதியா - அல்லது
நீர் செய்த விதியா?

## உங்களின் தன்னகங்காரத்திற்கு !

**நிவேதா**

உங்கள் தன்னகங்காரத்திற்கு
அடிவிழுமோவெனப் பயந்து..
இல்லாத விம்பங்களைச் சோடித்து...
ஆன்மா கதறக் கதற
என் கனவுகளைக் குழிதோண்டிப் புதைத்தீர்கள்
உங்கள் பாழாய்ப்போன பயங்களுக்கு
என்னைப் பலியாக்கினீர்கள்

உருவமற்ற மனிதர்களால்
ஈவிரக்கமின்றி பிடுங்கியெறியப்பட்ட உணர்வுகள்
இரத்தமும், சீழும் வடிந்துகொண்டிருக்க
புன்னகைக்கவும் தெரிந்த என் உணர்வுகள்...
வாழ்தலின் விளிம்புகளில் நழுவியபடி
இன்னமும் நினைவூட்டிக் கொண்டுதானிருக்கின்றன.

எனக்குமென்று ஒருநாள் வரும்..
பௌர்ணமி நிலவொளியில்...
தென்னை மரங்களின் சலசலப்பினூடு
முற்றாத எலுமிச்சைகளின்
இனிய மணத்தினை நுகர்ந்தபடி...
திறந்த ஓலைக் கொட்டிலுக்குள்...
சாக்குக் கட்டிலின்மீது
நீட்டி நிமிர்ந்து உறங்குவேன் நான்
நீங்கள் மட்டுமல்ல
வேறெவருமே
என்னை ஏனென்று கேட்க முடியாதபடி

# ACA ACADEMY OF COMPUTING & ACCOUNTING

PROFESSIONALISM IN EDUCATION

## Grade 01 - A/L வரையான
## Tamil
## English
## and
## Sinhala Medium

வகுப்புகள் அனைத்தும் ஒரே தளத்தில் நடைபெறுகின்றன.

மேலும்,

**கணக்கீட்டு தொழில்சார் கற்கை நெறியான AAT (All Stages) and CMA (All Stages) நடைபெறுகின்றன.**

IT Classes

ACA and IDM நிறுவனங்கள் இணைந்து நடாத்துகின்றன.

**அனைத்து வயதினருக்குமான *English* வகுப்புகள்**

# ACA
## Grafix

Revolution of Designing

55, St.Lucias Street,Colombo- 13 .

Tel: 0112335287



*We Undertake*

*All Kind Of Designing & Printing Works*


Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com